

நேர்த்தியான
நிகழ்ச்சிகள்....
மனதைக்குலுக்கும்
சம்பவங்கள்....
சாகசச்சிக்கல்கள்
த்துக்குலுங்கும்
லைத்தோட்டம்....
ஜூபிடரின்
வேலைக்காரி
பிப்ரவரி
25உ
வெளிவருகிறது
கதை, வசனம்: ஸி.என். அண்ணாதுரை
டைரக்ஷன்: ஏ.எஸ்.ஏ.சாமி
ஸ்டுடியோ: சென்ட்ரல்

அவளுடைய பொக்கிஷம்

சூதக விகாரத்தினின்று விடுதலையளித்து, புத்திர பாக்கியத்திற்கு உதவிய அருணா டானிக்கை தன் அருமைக் குழந்தையைப் போல் பொக்கிஷமாகவும், வரப்ரஸாதமாகவும் கருதுகிறாள்.



பண்டிட் டி. கோபாலாசார்லுவின்


அருணா

கர்ப்பாசயரோக நிவாரணி

ஆயுர்வேதாஸ்ரமம் லிமிடெட், மதராஸ் 17.

ப்ரூக் லாக்ஸ்

சாக்லெட் மலமிளக்கி



உங்கள் ஆரோக்கியத்திற்கு வேண்டிய முதல் தரமான பேதி மருந்துமாத்திரைகள். சிகப்பு டப்பியில் கிடைக்கும் ப்ரூக்லாக்ஸையே வாங்கவும்.

2, 8, 24. அடங்கிய வாட்டமான ஸைஸ்களில் கிடைக்கும். பெரிய ஸைஸ் வாங்குவது மிகவும் சிக்கனமானது.

ஒரே இரவில் மலச் சிக்கலை அறவே அகற்றுகிறது.

WL-2-A

THEN *and* NOW



அன்று ஹர்ஷர் சபையிலிருந்த சரகர் என்ற வைத்தியர் காலத் திரையிலே மங்கலாகத் தெரியும் அந்த காட்களிலேயே மீன் எண்ணெயின் சக்தியை அறிந்து, அதனை பலவித வியாதிகளையும் குணப்படுத்த உபயோகித்து வந்தார். பழங்கால சில எகிப்திய வைத்தியர்கள்கூட மீன் எண்ணெயை நோயாளிகளுக்குக் கொடுத்து வந்தார்கள்.

இன்று வைத்தியர்கள் சத்துக் குறைவின் பலரூபங்களைச் சரிப்படுத்தவும், சீரிய தேகாரோக்கியத்தை அமைத்துக் காப்பாற்றவும், எம். ஜி. பி. ஷார்க்லிவர் எண்ணெயையாவது அடமினையாவது (அடமின் சுறா மீன் எண்ணெயின் திடரூபம்) உபயோகிக்கிறார்கள்.

ஏனெனில்

★ அது தேகாரோக்கியத்துக்கு அத்யாவசியமான விடமின்-கள் A, D இவைகளை அபரிமிதமாகக் கொண்டிருக்கிறது.

★ அது, இரக்குமதியாகும் எல்லா காட்லிவர் எண்ணெய்களை விட சக்தி வாய்ந்தது.

★ அது உண்மையான 'உணவு-மதிப்பு' பெற்றிருக்கிறது.



ADS.


என்னெஸ்கே பிலிம்ஸ் & உமா பிக்சர்ஸ் தயாரிப்பு
நல்லதம்பி
டைரக்ஷன்: கிருஷ்ணன் பஞ்சு
ஸ்டுடியோ: நியூடோன்
2-வது வாரம்
வேலூர் ... தாஜ் டாக்கீஸ்
காஞ்சீவரம் ... கண்ணன் டாக்கீஸ்
புதுச்சேரி ... ரத்னா டாக்கீஸ்
சேலம் ... அம்பிகா டாக்கீஸ்
புதுக்கோட்டை ... வெஸ்ட்கிராஜா டாக்கீஸ்
காரைக்குடி ... ஸ்ரீராம விலாஸ்
கோயமுத்தூர் ... ஷண்முகா டாக்கீஸ்
விழுப்புரம் ... சீதாராம் டாக்கீஸ்
தஞ்சாவூர் ... டவர் டாக்கீஸ்
திருநெல்வேலி ... பாலஸ் டி வேல்ஸ்
தூத்துக்குடி ... ஜோஸப் டாக்கீஸ்
விரைவில் வெளிவருகிறது
திருச்சி ... கெயிட்டி டாக்கீஸ்
கும்பகோணம் ... விஜயலக்ஷ்மி டாக்கீஸ்
கரூர் ... அம்பிகை டாக்கீஸ்
துறையூர் ... என்னெஸ்கே மூவிலேண்ட்
மணப்பாறை ... இந்திரா டாக்கீஸ்
திருவாரூர் ... பேபி டாக்கீஸ்
மன்னார்குடி ... கல்கி டாக்கீஸ்
நாகப்பட்டணம் ... பேபி டாக்கீஸ்
காரைக்கால் ... நேஷனல் டாக்கீஸ்
மதுரை, விருதுநகர், திண்டுக்கல், ராஜபாளையம், சிதம்பரம், கடலூர், சித்தூர்
இன்னும் இதர இடங்களிலும்
பிப்ரவரி 25உ முதல் மகத்தான ஆரம்பம்
சென்னை - ஸ்டார் & மஹாராணி டாக்கீஸ்
மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி:
ஜி. பி. பிலிம்ஸ், பேரையூர்
தஞ்சாவூர், திருச்சி:
கிரேட் இந்தியா பிலிம்ஸ், ஸ்ரீரங்கம்
கோயமுத்தூர், சேலம்:
சேவதி பிலிம்ஸ் லிமிடெட், பொள்ளாச்சி
மைசூர் சமஸ்தானம் மலபார்:
லட்சுமி பிலிம் கம்பெனி, பெங்களூர் ஸிடி
வட ஆற்காடு, தென் ஆற்காடு, செங்கல்பட்டு, சித்தூர், சேலம்:
வி. எஸ். நாயர், 22, பெங்களூர் ரோடு, வேலூர்
மதராஸ் ஸிடி, ஆந்திரா, வட இந்தியா & பர்மா:
என்னெஸ்கே பிலிம்ஸ்,
மதராஸ் 17
BAL BRO

கல்கி பொருளடக்கம்

மலர் 8 | இதழ் 30 | பிப்ரவரி 20 | சர்வதாரி மாசி 9

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்களும், சம்பவங்களும் கற்பனையே.

பூதம், ஜாக்கிரதை!



கல்கி

மலர் 8 | தமிழ்த் திருநாடு தன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார் | இதழ் 30

என்ன செய்தி?

தவில் வித்வான்

கடல் அலையின் முழக்கத்தைப் போலவும் புயலின் குமுறலைப் போலவும் சிம்மத்தின் கர்ஜனை போலவும் தோல் வாத்தியங்களின் ராஜாவாகிய தவில் வாத்தியத்தைக் கையாண்டு, லயக் கலையின் சிகரத்தை எட்டிப் பிடித்து, பல்லாயிரக் கணக்கான தமிழ் நாட்டு ரஸிகர்களை மகிழ்வித்து வந்த நீடாமங்கலம் ஸ்ரீ மீனாக்ஷி சுந்தரம் பிள்ளை அவர்கள் இம்மாதம் 13ஆ. அதிகாலையில் அகால மரணம் அடைந்த செய்தியை நேயர்கள் அறிந்திருப்பார்கள். "மரணம் என்பது ஒருவிதத் தூக்கந்தான்" என்று பெரியோர் கூறியிருக்கின்றனர். ஸ்ரீ மீனாக்ஷி சுந்தரம் பிள்ளையின் விஷயத்தில் தூக்கமும் மரணமும் ஒன்றாகிக் கலந்துவிட்டன. மரண வேதனை என்பதை அறியாமல் ஸ்ரீ பிள்ளை, இந்த மண்ணுடலை நீத்துப் பொன்னுடலை அடைந்து விட்டார்.

பாலக்காட்டு மணி ஐயர் மிருதங்கம் வாசிக்கும் கச்சேரிகளில் எப்படி மிருதங்கம் அக்கிரஸ்தானம் வகித்து வாய்ப்பாட்டையும் பிடிலையும் இரண்டாவது மூன்றாவது ஸ்தானங்களுக்கு உரியனவாகச் செய்கின்றனவோ, அதுபோல் ஸ்ரீ மீனாக்ஷி சுந்தரம் பிள்ளை தவில் வாசிக்கும் நாதஸ்வரக் கச்சேரிகளில் தவில் வாத்தியம் முதன்மையும் மகிமையும் பெற்று ரஸிகர்களின் கவனத்தை முழுதும் கவர்ந்து வந்தது. அத்தகைய தவில் மகா வித்வான், லயக்கலை நிபுணர், அபிநவ நந்திகேசுவரர் நம்மை விட்டுப் போய் விட்டார். கதர் இயக்கம் அருமையான பக்தர் ஒருவரை இழந்து விட்டது. லயக்கலை தன் நாயகனை இழந்து விட்டது. சிங்கப் பெருந்தன்மை தன்னுடைய இலட்சிய புருஷர் ஒருவரை நஷ்டமடைந்து விட்டது. ஸ்ரீ மீனாக்ஷி சுந்தரம் பிள்ளையின் புது மணம் புரிந்த குமாரருக்கும் மற்றும் அவருடைய உறவினருக்கும் தமிழ் நாடெங்கும் பரவியுள்ள ஆயிரக் கணக்கான தவில் வாத்திய ரஸிகர்களுக்கும் நமது மனமார்ந்த அநுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

திருநெல்வேலி அதிர்ஷ்டம்

செந்தமிழின் தஞ்சமாகிய திருநெல்வேலிக்கு எதிர் பாராத அதிர்ஷ்டம் ஒன்று அடித்திருக்கிறது. எவரும் எளிதில் பெற முடியாத பரிசு ஒன்றை நமது பிரதமர் ஓமந்தூர் ரெட்டியார் திருநெல்வேலிக்குத் தந்திருக்கிறார். காந்தி மகானுடைய புனித உடலின் எலும்பு ஒன்றை ஓமந்தூர் ரெட்டியார் பத்திரப்படுத்தி ஒரு வருஷ காலம் பூஜை செய்து வந்தார். காந்தி மகானுடைய தேகத்தோடு சேர்ந்திருந்ததாலும் பிரதமர் ரெட்டியாரின் பக்தியோடு கூடிய பூஜையினாலும் மகிமை பெற்ற அந்த அஸ்தித் துண்டைப் பிரதமர் திருநெல்வேலிக்கு அளித்தார். இத்தகைய எளிதில் கிடைக்கப் பெறாத அருமையான பரிசு ஒன்று பிரதமரிடம் இருப்பது தெரிந்திருந்தால் தமிழ் நாடெங்கும் எனக்கு உனக்கு என்று போட்டி ஏற்பட்டிருக்கும். ஒவ்வொரு நகரத்திலும் கிராமத்திலும் உள்ள காந்தி பக்தர்கள் ஸ்ரீ ரெட்டியாரைத் தேடி வந்திருப்பார்கள். "தங்களிடம் உள்ள புனிதமான பரிசைத் தருகிறீர்களா? அல்லது உண்ணாவிரதம் இருந்து உயிரை விடட்டுமா?" என்று கேட்டிருப்பார்கள். எந்தக் காரணத்தினாலோ, யார் செய்த புண்ணியத்தினாலோ, திருநெல்வேலிக்கு அந்தப் பெரும் பேறு கிடைத்திருக்கிறது. அடிகளின் அஸ்தித் துண்டை அடியிலே வைத்து மேலே அசோக ஸ்தம்பம் போன்ற ஸ்தம்பத்தை எழுப்பும்படியும் ஸ்தம்பத்தின் நாலு பக்கங்களிலும் காந்தியடிகளின் பொன்மொழிகளைப் பொறித்து வைக்கும்படியும் காந்தி பக்தராகிய ஓமந்தூர்

செட்டியார் திருநெல்வேலி வாசிகளைக் கேட்டுக் கொண்டிருக்கிறார். பிரதமரின் இந்த யோசனையைக் கூடிய விரைவில் நிறைவேற்றி வைக்கும்படி திருநெல்வேலி ஜில்லா வாசிகளை வேண்டிக் கொள்கிறோம். இந்தியாவிலேயே காந்தி மகானுக்குத் தகுதியான உயர்ந்தோர் ஞாபகச் சின்னத்தை எழுப்பிய பெருமை திருநெல்வேலிக்குக் கிட்டுமாக!

பாவம் ஓரிடம்........!

மலாய் நாட்டிலே சென்ற பல மாதங்களாகச் சர்க்காருக்கும் கம்யூனிஸ்டுகளுக்கும் உக்ரமான போர் நடந்து வருகிறது. அந்தப் போரில் இரு தரப்பாருக்கும் உயிர்ச் சேதம் மிகவும் அதிகம். மலாயா சர்க்கார் நிர்வாகிகளான பிரிட்டிஷார் தங்களுடைய வெடிகுண்டு விமானங்கள், பீரங்கிகள், டாங்கிகள் முதலிய ஆயுத பலத்தையெல்லாம் உபயோகித்து வந்தும் கம்யூனிஸ்டுகளை அடக்க முடியவில்லை. போதாக்குறைக்கு அந்தச் சர்க்கார் சயாம் சர்க்காரோடு ஒப்பந்தம் செய்து கொண்டதுடன் இரு சர்க்கார்களும் சேர்ந்து எவ்வளவோ பாடுபட்டு வருகிறார்கள். ஆனால் கம்யூனிஸ்டுகளுக்குப் பணியாவோரின் தொகைதான் நாளுக்கு நாள் விஷம்போல் ஏறிக் கொண்டு போகிறது. அவர்களின் தொல்லையை ஒழித்துவிட முடியும் என்று நிச்சயமாகக் கூறும் தைரியம் இன்னும் அங்கு ஆட்சி புரியும் பிரிட்டிஷ் அதிகாரிகளுக்கு ஏற்படவில்லை.

இந்நிலையில் மலாயா சர்க்கார் தங்களுடைய ஆத்திரத்தை நிரபராதிகளான பொது ஜனங்களின் மீது திருப்ப முற்பட்டிருப்பது 'பாவம் ஓரிடம் பழி ஓரிடம்' என்ற கதையாக இருக்கிறது! கம்யூனிஸ்டுகள் என்று கூறி அதிகாரிகள் மலாயாவிலுள்ள இந்தியத் தொழிலாளர் பிரதிநிதிகளைக் கஷ்டத்துக்கு உள்ளாக்கி வருவதாகச் சமீபத்தில் இந்தியாவுக்கு வந்திருந்த மலாயா இந்தியர் காங்கிரஸ் தலைவர் கூறினார். மலாயா சர்க்காரின் அரசியல் தகிடுதத்தம் காரணமாகவும் அவசரச் சட்டங்கள் காரணமாகவும் அங்கு இந்தியர்கள் பட்டுவரும் கஷ்டநஷ்டங்களைக் குறிப்பிட்டார். ஏற்கெனவே அங்கு குறிப்பாக இந்தியத் தொழிலாளர் துன்பத்துக்கு உள்ளாகி இருப்பது போதாதென்று இப்போது மலாயா அதிகாரிகள் பல செட்டியார்கள் உள்பட இந்திய முதலாளிகளையும் கைது செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள். தங்களுடைய பாதுகாப்புக்காக அவர்கள் பயங்கரவாதிகளான கம்யூனிஸ்டுகளுக்குப் பணம் கொடுத்தார்கள் என்பதே அவர்கள் மீது மலாய்நாட்டு அரசாங்கத்தார் சாட்டியுள்ள குற்றமாகும்.

கொள்ளைக் கூட்டத்தைக் கண்டுபிடிக்கக் கையாலாகாத அதிகாரிகள் அந்தக் கூட்டத்தினரிடமிருந்து தங்களுடைய உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்காகப் பணம் கொடுத்தவர்களைக் கைது செய்வது கேலிக் கூத்தாக இருக்கிறது. பணம் கொடுத்திராவிடில் அவர்களுடைய கதி என்ன ஆகும் என்பது அதிகாரிகள் அறியாததல்ல. கம்யூனிஸ்டுகளிடம் உள்ள அனுதாபம் காரணமாக அவர்கள் பணம் கொடுக்கவில்லை, கொடுக்கவும் மாட்டார்கள். அப்படியிருக்க, கம்யூனிஸ்டுகளை அடக்க வல்லமையற்ற சர்க்கார் நிரபராதிகளும் நிராயுதபாணிகளுமான தொழிலாளர் பிரதிநிதிகள் மீதும் முதலாளிகள் மீதும் பாய்வதை என்னவென்று சொல்வது?

ஆறுதலைக் கொடுக்கும்

உலகம் அனைத்தின் கவனத்தையும் இழுத்த புதுடில்லி வழக்கு ஒரு வழியாக முடிந்தது. நீதிபதி ஆத்மசரண், எதிரிகளில் நாதுராம் கோட்ஸே, நாராயண தத்தாத்ரேய ஆப்தே இவ்விருவருக்கும் தூக்குத் தண்டனையும் மற்ற ஐந்து பேருக்கு ஜன்ம தண்டனையும் விதித்தார். எதிரிகள் அப்பீல் செய்து கொண்டிருப்பதால், முடிவைக் குறித்து இப்போது எதுவும் சொல்வதற்கில்லை.

ஆனால், எதிரிகளில் ஒருவரான ஸ்ரீ விநாயக தாமோதர சவர்க்கார் விடுதலை அடைந்தது 'மகிழ்ச்சிக்குரிய விஷயமாகும். பல வருஷங்களுக்கு முன் ஸ்ரீ சவர்க்காரும் அவருடைய குடும்பத்தினரும் தேசியப் போராட்டத்தில் பட்ட கஷ்டங்களும் தேசத்துக்காகச் செய்த தியாகங்களும் அற்ப சொற்பமானவை அல்ல. பிரிட்டிஷ் சர்க்காருக்கு விரோதமாக சவர்க்கார் புரிந்த சாகஸங்கள் சரித்திரத்தில் இடம்பெறக் கூடியவை. அப்படிப்பட்ட வீர சவர்க்கார் இத்தகைய படுபாதகமான செயலுக்கு உடந்தையாய் இருந்ததாகக் கூறப்பட்டதைக் கேட்டதும் இந்தியா முழுதும் திடுக்கிட்டது. காந்தி மகாத்மாவைக் கொலை செய்த சதிக் குற்றத்தில் ஸ்ரீ சவர்க்காருக்கு எவ்வித சம்பந்தமும் இருந்ததாக நினைக்கக் காரணம் இல்லையென்று நீதிபதி கூறி அவரை விடுதலை செய்தது இந்திய மக்களுக்கு ஆறுதலைக் கொடுக்கும் என்பதில் சந்தேகமில்லை.

வீர வல்லபனை வரவேற்கிறோம்

சுதந்திர இந்திய சர்க்காரை நிர்வகிக்கும் மும்மணிகளில் நேருஜியும் ராஜாஜியும் அந்த மகத்தான பொறுப்பை ஏற்றுக்கொண்ட பின் தமிழ் நாட்டுக்கு விஜயம் செய்து, தமிழ் மகாஜனங்களுக்கு உற்சாகம் அளித்து விட்டுச் சென்றனர். மற்றொரு மாபெரும் தலைவரும், இந்தியாவின் உதவி பிரதம மந்திரியுமான சர்தார் வல்லபாய் பட்டேலும் இப்போது இங்கு விஜயம் செய்கிறார் என்பதைக் கேட்கத் தமிழ்நாட்டு மக்கள் அனைவரும் மனப்பூரிப்பு அடைவார்கள்.

ஜவாஹர்லால்ஜியும் சர்தார்ஜியும் மகாத்மா காந்திக்கு இரண்டு கைகள் போன்றிருந்தனர். பண்டித நேருவைப் போல் சர்தார் பட்டேலும் காந்தி மகானின் அன்புக்கும் அந்தியந்த நட்புக்கும் பாத்திரமானவர்; பாரதநாட்டு மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்; உலக தேசங்களின் பாராட்டுதலுக்கு உரியவர்.

மகாவல்லமை பொருந்திய பிரிட்டிஷ் சர்க்காரையாவது, எதிர்த்துப் போராடுவதாவது என்று இந்திய மகாஜனங்கள் சகலரும் சோர்ந்திருந்த போது,—பிரிட்டிஷ் சர்க்காரின் அடக்குமுறையும் அதிகார மமதையும் ஆணவமும் உச்சஸ்தானத்திலிருந்தபோது பார்டோலி சத்தியாக்கிரகத் தீயில் குதித்து, அதிகாரிகளின் ஆணவத்தை அடக்கி வெற்றி கண்ட வீர புருஷர் தான் வல்லபாய் பட்டேல் என்பதை எவரும் மறந்திருக்க மாட்டார்கள்.

அன்றிருந்து இன்று வரையிலும் தேசியப் போராட்டத்தின் முன்னணியில் நின்று துன்பத்தை இன்பமாகவும் சிறை வாழ்க்கையைச் சுக வாழ்க்கையாகவும் கருதிய கர்ம யோகிகளுள் சர்தாரும் ஒருவர்.



தேசியப் போராட்டத்தின் முன்னணியில் நின்ற சர்தார், நம் நாடு சுதந்திரம் பெற்ற பின்னரும் முன்னணியில் நின்று ஆக்க வேலைகளில் ஈடுபட்டு அரும் பெரும் காரியங்களைச் சாதித்துள்ளார்.


''பல வருஷங்களாகச் சிரமப்பட்டு பிஸ்மார்க் ஜெர்மனியை ஐக்கியப் படுத்தியபோது அவருடைய ராஜதந்திரத்தைக் கண்டு உலகமே பிரமித்தது. ஆனால், அதைக் காட்டிலும் எத்தனையோ மடங்கு அதிக அற்புதமான ஒரு சாகஸத்தைச் சர்தார் பட்டேல் செய்து முடித்திருக்கிறார். இந்தியா முழுதும் சிதறிக் கிடந்த 565 சமஸ்தானங்களை ஒரு டஜனுக்கு உட்பட்ட பிரதேசங்களாக ஐக்கியப்படுத்தி இந்தியாவின் பூகோளப் படத்தைப் போற்றத் தக்க முறையில் மாற்றியுள்ளார்'' என்று லண்டன் ''டைம்ஸ்'' பத்திரிகை புகழ்கின்றது. அதிலும், அத்தகைய பிரமாதமான காரியத்தைப் பதினைந்தே மாதங்களில் அமைதியாகவும் சமரசமாகவும் சாதித்தது மகா அற்புதமானது என்றும் அதே பத்திரிகை குறிப்பிட்டிருக்கிறது.

இதற்கு முன் கொடிய யுத்தங்கள் செய்தும், துவேஷத்தை வளர்த்து மனிதரை மிருகங்களாக்கியும் பூகோளப் படத்தை மாற்றியவர்கள்தான் இருந்திருக்கிறார்கள். ஆனால் கத்தியின்றி இரத்தமின்றி, நீதியுடனும் நேர்மையாகவும், ஜனங்களின் க்ஷேமத்துக்கும் தேசத்தின் பெருமைக்கும் மானிட தர்மத்துக்கும் முரணின்றி பூகோளப் படத்தை மாற்றிய மகா புருஷர் ஒருவரைத் தவிர வேறு எவருமில்லை. அவர்தான் நமது அருமைத் தலைவர் சர்தார் வல்லபாய் பட்டேல்!

• • •

குஜராத்தில் ஒரு புதிய நகரத்தை நிர்மாணிக்கப் போகிறார்கள். அந்த நகருக்குச் சென்ற வாரம் பண்டித ஜவாஹர்லால் நேரு அஸ்திவாரக் கல்லை நாட்டினார்.

சர்தார் பட்டேல் பிறந்த காம்ஸாத் கிராமத்தின் எல்லையில் நிர்மாணமாகப்



போகும் அந்த நகருக்கு வல்லப வித்தியா நகர் என்று பெயர் சூட்டியிருக்கிறார்கள். சர்தார் பட்டேலின் திருநாமத்தைத் தாங்கப் போகும் அந்த நகரம் சிறந்த கலை நிலையமாக விளங்கப் போகிறது. அங்கு பல கலாசாலைக் கட்டிடங்களையும் ஹாஸ்டல் கட்டிடங்களையும் நிர்மாணித்து வருகிறார்கள்.

அந்த நகரத்துக்கு அஸ்திவாரக் கல்லை நாட்டியபோது ஜவாஹர்லால்ஜி சர்தார் பட்டேலின் பெருமைகளை விளக்கிக் கூறினர்.

"சர்தார் பட்டேல் இந்தியா முழுவதற்கும் சொந்தமானவர். எனினும் அவர் ஜனித்த இடத்துக்கு அருகில் இந்த வித்தியா நகரம் பாரதத் தவப் புதல்வர்களில் சிரேஷ்டரான சர்தார் பட்டேலின் பெயருடன் அமைவதைக் குறித்து நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

"சென்ற முப்பது வருஷங்களாக அவருடன் நெருங்கிப் பழகி வந்திருக்கிறேன். இந்தியப் பிரிவினை போன்ற பெரிய பிரச்னைகளையொட்டி இருவரும் கலந்து ஆலோசித்துத் தான் முடிவு செய்தோம்.

"சுதந்திரப் போரில் கலந்து கொண்ட சர்தார் பட்டேல் ஒரு வீர தீரர். சுதந்திரத்தை அடைந்த பின் பெற்ற சுதந்திரத்தைப் பாதுகாக்கும் பணியில் அவர் ஈடுபட்டிருக்கிறார்.

"இந்தியாவின் பூகோள அமைப்பையே மாற்றிய பெருமை அவருக்கு உரியதாகும்."

இந்தியாவின் முடிசூடா மன்னர் பண்டித ஜவாஹர்லாலின் மேற்படி வார்த்தைகளைக் காட்டிலும் சர்தாரின் சிறப்பையும் சீரிய தன்மையையும் விளக்க வேறு என்ன வேண்டும்?

• • •

சர்தார் பட்டேலைக் காங்கிரஸின் "இரும்பு மனிதர்" என்று வர்ணிப்பது உண்டு.

விதண்டா வாதம் பேசும் விரோதிகளுக்குச் சரியான சூடு கொடுப்பதில் அவருக்குள்ள ஆற்றல் இணையற்றது.

சில மாதங்களுக்கு முன் சுதந்திர இந்திய சர்க்காரைத் தாக்கி ஏதோ உளறிய வின்ஸ்டன் சர்ச்சில் துரைக்கு சர்தார் கொடுத்த சூடு, அதற்குப் பின் சர்ச்சிலை வாய்திறக்க முடியாமல் செய்துவிட்டது!

சமீபத்தில் நடந்த காங்கிரஸ் மகா சபைக் கூட்டத்தில் சர்தார் பேசியதையும் இச்சந்தர்ப்பத்தில் ஞாபக மூட்டுகிறோம்.

"பாரதத்தாயின் மணிக் கொடிக்குச் சகலரும் மரியாதை செய்ய வேண்டும். இந்தக் கொடியின் ஸ்தானத்தில் எவரேனும் வேறொரு கொடியைக் கொண்டு வர முற்பட்டால் அவரது எண்ணம் ஈடேறாது. நிச்சயமாகப் போராட்டம் நடந்தே தீரும். ஜாதி, சமய மத, வர்க்க பேதம் எதுவும் இல்லாத ஜனநாயகத்தை இந்தியாவில் ஸ்தாபிக்க வேண்டும் என்பதே நாங்கள் செய்துள்ள பிரதிக்ஞையாகும். காங்கிரஸ் கொடியின் கீழ் நாம் எல்லோரும் தியாகம் செய்ததும் அதற்காகத்தான். மன்னர்களும் மகுடாதிபதிகளும் இந்தக் கொடிக்கு வணக்கம் செய்கிறார்கள். அப்படியிருக்க, இந்தக் கொடியின் பெருமைக்குக் குந்தகம் விளைவிக்க முயல்வோர் யாராயிருந்தாலும் அவர்களை எதிர்த்து அழிப்போம்" என்று சர்தார் கர்ஜித்தார்.

எனவே, சுதந்திர இந்தியாவின் கொடியைச் சிம்மம் போல் பாதுகாத்து வரும் சர்தார் வல்லபாய் பட்டேல் அடுத்த வாரம் தமிழ் நாட்டுக்கு விஜயம் செய்கிறார்.

அந்த வீரபுருஷருக்கு நல்வரவு கூறுகிறோம். இந்திய மக்களின் இருதயத்தில் மகோன்னத ஸ்தானத்தை வகிக்கும் அந்த அருமைத் தலைவரைத் தமிழ் மகாஜனங்களின் சார்பில் வரவேற்கிறோம்.

மாந்தருக்குள் ஒரு தெய்வம்


கல்கி

64. அக்னி பரீட்சை

சார்லஸ் டவுன் பட்டணத்திலிருந்து ஒரு மைல் சென்றதும் ஒரு சிறு மதகு இருந்தது. அதைத் தாண்டியதும் டிரான்ஸ்வால் மாகாணந்தான். அந்த மாகாணத்தில் முதல் பட்டணத்தின் பெயர் வோக்ஸ்ரஸ்ட் என்பது. இந்தப் பட்டணத்திலிருந்த ஐரோப்பியர்கள் இரண்டு நாளைக்கு முன்பு ஒரு பொதுக் கூட்டம் கூட்டியிருந்தார்கள். காந்திஜியின் நண்பரான மிஸ்டர் காலன்பாக் கூட்டத்துக்குப் போயிருந்தார். கூட்டத்தில் பேசிய ஐரோப்பியர்கள் இந்தியர்களின் சத்தியாக்கிரஹ இயக்கத்தை மிகவும் கண்டித்துத் தாக்கிப் பேசினார்கள். டிரான்ஸ்வாலுக்குள் இந்தியர்கள் நுழைந்தால் அவர்களைச் சுட்டுத் தள்ளி விடுவதாகப் பயமுறுத்தினார்கள். அப்படிப் பேசியவர்களை எதிர்த்து மிஸ்டர் காலன்பாக் பேசினார். இந்தியர்களின் கட்சி நியாயமானது என்று வற்புறுத்தினார். இதற்காக மிஸ்டர் காலன்பாக் மீது எல்லாரும் எரிந்து விழுந்தார்கள். அவர்களில் ஒருவர் தம்முடன் துவந்த யுத்தத்துக்கு வரும்படி அறை கூவினார் மிஸ்டர் காலன்பாக் நல்ல வீரர். அவர் மேற்படி 'மிரட்ட'லுக்குப் பயப்படவில்லை.

இந்தக் கூட்டத்தைப் பற்றிக் காந்திஜி தெரிந்து கொண்டிருந்தபடியால் டிரான்ஸ்வாலுக்குள் பிரவேசித்ததும் ஐரோப்பியர்களால் தொல்லை ஏற்படக்கூடும் என்று எதிர்பார்த்து முன் ஜாக்கிரதையுடன் இருந்தார். எல்லை மதகுக்கு அப்பால் குதிரைப் படைப் போலீஸார் நின்று கொண்டிருப்பதைப் பார்த்தார். இந்தியர்களிடம் தாம் சமிக்ஞை செய்ததும் அமைதியாக மதகைக் கடந்து வரும்படி சொல்லி விட்டுத் தாம் மட்டும் முதலில் சென்று போலீஸாரிடம் பேசிக் கொண்டிருந்தார். பேசி முடிவதற்குள்ளேயே இந்தியர்கள் கட்டுப்பாட்டைக் காற்றிலே பறக்கவிட்டுத் தடதடவென்று பாலத்தைத் தாண்டி வரத் தொடங்கினார்கள். போலீஸார் விரைந்து சென்று அவர்களைச் சூழ்ந்தார்கள். ஒரு நிமிஷம் என்ன விபரீதம் ஏற்படுமோ என்ற கவலை ஏற்பட்டது. ஆனால் காந்திஜி இந்தியர்களின் முன்னிலையில் வந்து கையமர்த்திச் சில வார்த்தைகள் சொன்னதும் அமைதி ஏற்பட்டது. பின்னர் மகாத்மாவின் கட்டளைப்படி இந்தியர்கள் நாலு நாலு பேராக வரிசைப் படுத்திக்கொண்டு நடந்தார்கள். சத்தியாக்கிரஹப் படை எல்லையைத் தாண்டியது; சட்டமறுப்பு யாத்திரை ஆரம்பமாகியது.

போலீஸார் இந்தியர்களைக் கைது செய்யவில்லை; தடை செய்யவும் இல்லை. இந்தியர்கள் அமைதியாகவும் ஒழுங்காகவும் யாத்திரை செய்ததைப் பார்த்த



தேசபக்த வீரர் ஸ்ரீ வ. உ. சிதம்பரம் பிள்ளையின் ஞாபகார்த்தமாக எம். எஸ். சிதம்பரம் என்று பெயர் சூட்டப்பட்ட கப்பல் நீலத் திரைக் கடலைக் கிழித்துக் கொண்டு செல்கிறது.



''எஸ். எஸ். சிதம்பரம்'' கப்பலின் நாமகரண விழாவுக்காகக் கவர்னர் ஜெனரல் ராஜாஜி கயத்தாறு விமான நிலையத்தில் வந்து இறங்கியபோது அவரைத் தூத்துக்குடி பிரமுகர்கள் குதூகலத்துடன் வரவேற்றனர். ராஜாஜிக்கு வலப்புறத்தில் நிற்பவர் 'பெரிய திருவடி' ஸ்ரீ துரைசாமி நாடார்.

வோக்ஸ்ரஸ்ட் பட்டணத்து ஐரோப்பியர்களும் ஒன்றும் செய்யவில்லை. இவ்விதம் எட்டு மைல் பிரயாணம் செய்து பாம்போர்டு என்னும் இடத்தில் முதல் நாள் இரவு இந்தியர்கள் தங்கினார்கள். எல்லாரும் தங்களுடன் கொண்டு வந்திருந்த சொற்ப உணவை உட்கொண்டார்கள். ராமநாம பஜனை செய்தார்கள். இரவு முதல் ஜாமம் ஆனதும் எல்லாரும் படுத்துத் தூங்கலானார்கள்.

மகாத்மாஜியும் முதல் நாள் யாத்திரை அசம்பாவிதம் எதுவும் இல்லாமல் நடந்து முடிந்தது குறித்து ஆண்டவனுக்கு நன்றி செலுத்திவிட்டுப் படுத்துத் தூங்குவதற்கு ஆயத்தம் செய்யலானார். அச்சமயம் கையில் லாந்தருடன் ஐரோப்பியர் ஒருவர் வருவதைக் கண்டார். அதன் காரணம் மகாத்மாஜிக்குத் தெரிந்துவிட்டது. வந்தவர் போலீஸ் அதிகாரிதான்.

காந்திஜியின் அருகில் அவர் வந்து, ''உங்களைக் கைது செய்ய வாரண்டு கொண்டு வந்திருக்கிறேன். என்னுடன் வருக!'' என்று சொன்னார்.

உடனே மகாத்மா தம் அருகில் படுத்துத் தூங்கிய ஸ்ரீ பி. கே. நாயுடுவை எழுப்பி, விஷயத்தைக் கூறினார். மற்ற யாருக்கும் இதைப் பற்றி இப்போது சொல்ல வேண்டாம் என்றும், அதிகாலையில் சூரியோதயத்துக்கு முன்னால் எழுந்து யாத்திரை தொடங்க வேண்டும் என்றும், மத்தியானம் சாப்பிடுவதற்காகத் தங்கும் இடத்தில் தாம் கைதியானது பற்றி எல்லாருக்கும் சொன்னால் போதும் என்றும் கூறினார். வழியில் இந்தியர்கள் எல்லோரையும் கைது செய்தால் சிறைக்குப் போக வேண்டும் என்றும், இல்லாவிட்டால், யாத்திரையை உத்தேசத் திட்டத்தின்படி டால்ஸ்டாய் பண்ணையில் போய்த்தான் நிறுத்த வேண்டும் என்றும் தெரிவித்தார். காந்திஜியின் கட்டளையை நிறைவேற்றி வைப்பதாக ஸ்ரீ பி. கே. நாயுடு ஒப்புக் கொண்டார்.

மகாத்மாவைப் போலீஸ் அதிகாரி வோக்ஸ்ரஸ்ட் பட்டணத்துக்கு அழைத்துச் சென்றார். அங்கே மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் அவரைக் கொண்டு போய் நிறுத்தினார். சாட்சியம் தயாராக வில்லையாதலால் வாய்தா கொடுக்க வேண்டும் என்று சர்க்கார் வக்கீல் கேட்டார். மாஜிஸ்ட்ரேட் வாய்தா கொடுத்தார். மகாத்மாஜி தாம் ஆயிரக் கணக்கான இந்தியர்களுக்குப் பொறுப்பு வகிப்பதால் ஜாமீனில் விட வேண்டும் என்று கேட்டார். சர்க்கார் வக்கீல் அதை எதிர்த்தார். ஆனால் மாஜிஸ்ட்ரேட் ஜாமீனில்விட உத்தரவிட்டார். மிஸ்டர் காலன்பாக் ஜாமீன் கொடுத்து மகாத்மாவை விடுதலை செய்தார். உடனே காந்திஜி புறப்பட்டு அன்று சாயங்காலத்துக்குள் சத்தியாக்கிரஹ யாத்திரிகர்களை அடைந்தார்.

இதேமாதிரி ஸ்டாண்டர்டன் என்னுமிடத்தில் மறுபடியும் காந்திஜியைக் கைது செய்துகொண்டு போனார்கள். இங்கேயும் மாஜிஸ்ட்ரேட் காந்திஜியை ஜாமீனில் விட்டு விட்டார். சத்தியாக்கிரஹ யாத்திரிகர்கள் மூன்று மைல் தூரம் போவதற்குள் மகாத்மா அவர்களோடு சேர்ந்து விட்டார்.

இதனால் டால்ஸ்டாய் பண்ணை வரையில் யாத்திரை தடைப்படாமல் நடந்து பூர்த்தியடைந்துவிடும் என்ற நம்பிக்கை மகாத்மாவுக்கு ஏற்பட்டது. ஆனால் அந்த நம்பிக்கை நிறைவேறவில்லை.

யாத்திரையைப் பூர்த்தி செய்யும்படி விட்டு விட்டால் தங்களுடைய மதிப்பு ரொம்பவும் குறைந்துவிடும் என்று அரசாங்கத்தார் கருதினார்கள். இரண்டு தடவை காந்திஜியைக் கைது செய்ததினால் மற்ற இந்தியர்கள் பீதி அடைந்து சிதறிப்போய்விடவில்லை என்பதையும் கண்டு

கொண்டார்கள். இந்தியர்கள் எங்கேயாவது பலாத்காரத்தைக் கையாண்டிருந்தால் அதை ஒரு வியாஜமாக வைத்துக் கொண்டு கடும் நடவடிக்கை எடுத்திருக்கலாம். இந்தியர்கள் அமைதியாக யாத்திரை செய்தது சர்க்காருக்குப் பெருந் தொல்லை அளித்தது. ஜெனரல் ஸ்மட்ஸ் இதை வெளிப்படையாகவே சொன்னார்.

கடைசியாக ஏதேனும் கடுமையான நடவடிக்கை எடுத்து யாத்திரையைத் தடுத்தே தீரவேண்டும் என்று தளபதி ஸ்மட்ஸ் முடிவு செய்தார்.


மகாத்மா காந்தி அந்த யாத்திரையின் போது மூன்றாவது தடவையாகக் கைது செய்யப்பட்டார். முதலில் ஹெய்டல்பர்க் என்னும் இடத்துக்கு அவரைக் கொண்டு போனார்கள். அந்த ஊர் மாஜிஸ்ட்ரேட்டிடமும் காந்திஜி முன் தடவைகளில் கேட்டதுபோல் ஜாமீனில் விடும்படி கேட்டார். ஆனால் இந்தத் தடவை அவருடைய கோரிக்கை மறுக்கப் பட்டது. அவரை ஜாமீனில் விடத் தமக்கு அதிகாரம் இல்லை என்றும் சர்க்கார் அநுமதி வேண்டும் என்றும் சொல்லி விட்டார். நேட்டாலில் உள்ள டண்டி என்னுமிடத்திலிருந்து இந்த மூன்றாவது வாரண்டு வந்திருந்தது. ஒப்பந்தத் தொழிலாளிகளை ஒப்பந்தத்தை மீறும்படி தூண்டியதாகக் குற்றம் சாட்டப்பட்டிருந்தது. எனவே, காந்திஜியை அன்றைக்கே ரயிலில் ஏற்றி டண்டிக்குக் கொண்டு போனார்கள்.

விசாரணை சட்டப்பட்டென்று முடிந்தது. மகாத்மாவுக்கு ஒன்பது மாதம் கடுங்காவல் தண்டனை விதிக்கப் பட்டது. பிறகு இன்னொரு வழக்கு விசாரணைக்காக வோக்ஸ்ரஸ்ட் கோர்ட்டுக்கு மகாத்மாவை அழைத்துச் சென்றார்கள். இங்கே மகாத்மாவுடன் மிஸ்டர் காலன்பாக், மிஸ்டர் போலக் ஆகியவர்களும் விசாரிக்கப் பட்டார்கள். மூவருக்கும் தலைக்கு மூன்று மாதம் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது. சிலகாலம் வோக்ஸ்ரஸ்ட் சிறைச்சாலையில் மூன்று பேரும் சந்தோஷமாயிருந்தார்கள். இன்னும் சில சத்தியாக்கிரஹத் தலைவர்களும் இதே சிறைக்கு வந்துசேர்ந்தார்கள். இப்படிக் காந்திஜியையும் மற்றவர்களையும் அதிக காலம் ஒரே சிறையில் விட்டுவைக்க சர்க்கார் விரும்பவில்லை. காந்தி மகானைத் தனிமைப்படுத்தி புளோம்பாண்டீன் என்னும் இடத்திலிருந்த சிறைக்குக் கொண்டு போனார்கள். இங்கே காந்திஜியைத் தவிர வேறு இந்தியக் கைதி யாரும் இல்லை. மற்றவர்கள் எல்லாரும் ஐரோப்பியர்களும் நீக்ரோவர்களுந்தான். இந்தக் கடும் சிறையில் காந்திஜி தனி அறையில் பூட்டி வைக்கப்பட்டார். இன்னும் எத்தனையோ அசௌகரியங்கள் இந்தச் சிறை வாசத்தில் அவருக்கு நேரிட்டன. அவற்றையெல்லாம் மகாத்மா சிறிதும் பொருட் படுத்தவில்லை. "சத்தியமே ஜயம்" என்ற பூரண நம்பிக்கையுடன் தனிச் சிறையில் காலங்கழித்து வந்தார்.

காந்திஜியைக் கைது செய்ததற்கு மறுநாள் பெரும் போலீஸ் படையினர் வந்து இந்திய சத்தியாக்கிரஹ யாத்திரிகர்களைச் சூழ்ந்து கொண்டனர். எல்லாரையும் கைது செய்திருப்பதாகச் சொல்லி ரயிலில் ஏற்றி நேட்டாலுக்குக் கொண்டு போனார்கள். வழிப் பிரயாணத்தில் அவர்களுக்கு உணவு அளிக்கக் கூட ஏற்பாடு செய்யவில்லை.

அவ்வளவு இந்தியர்களையும் சிறையில் அடைத்து உணவு அளிப்பதென்பது கஷ்டமான காரியம் அல்லவா? இதற்காக ஒரு கேவலமான யுக்தியைக் கையாண்டார்கள். அவ்வளவு பேரையும் டீகாஸில் பட்டணத்துக்குக் கொண்டு போனார்கள். அங்கே நிலக்கரிச் சுரங்கங்களைச் சுற்றி இரும்பு வேலி எடுத்து, "இது தான் சிறைச்சாலை!" என்று சொன்னார்கள். கடுங்காவல் கைதிகள் வேலை செய்யவேண்டும் அல்லவா?

தூத்துக்குடி கடற்கரை ஓரமாகக் கவர்னர் ஜெனரலை வரவேற்று மரியாதை செய்வதற்குத் தொண்டர் படை அணிவகுத்து நின்ற காட்சி.



"முன்னே ஒப்பந்தத் தொழிலாளிகளாகச் செய்து கொண்டிருந்த அதே வேலையை இப்போது கைதிகளாகச் செய்யுங்கள்!" என்றார்கள்.

இது அநியாயம் என்று கருதிய இந்தியத் தொழிலாளிகள் கண்டிப்பாக வேலை செய்ய மறுத்து விட்டார்கள். இதன் பலனாக அவர்கள் சவுக்கடி முதலிய பல கொடுமைகளுக்கு உள்ளாக நேர்ந்தது. எல்லாக் கொடுமைகளையும் தொழிலாளிகள் பொறுமையுடன் சகித்துக் கொண்டிருந்தார்கள். ஆனாலும் சுரங்கங்களில் வேலை செய்ய மட்டும் அவர்கள் இணங்கவில்லை.

இந்த அநீதிகளையும் கொடுமைகளையும் பற்றி ஸ்ரீ கோகலேக்குத் தந்திச் செய்திகள் போய்க்கொண்டிருந்தன. ஸ்ரீ கோகலேயின் உடல்நலம் அப்போது குன்றியிருந்தும் அதைப் பொருட்படுத்தாமல் அவர் பொதுக்கிளர்ச்சி நடத்தினார். இதனால் இந்தியா தேசமெங்கும் கொதிப்பு ஏற்பட்டது. அச்சமயம் இந்தியாவில் வைஸ்ராய் பதவி வகித்த லார்ட் ஹார்டிஞ்சு நல்ல மனிதர். தென்னாப்பிரிக்காவில் இந்தியர்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளையும் கொடுமைகளையும் பற்றி லார்ட் ஹார்டிஞ்சு பகிரங்கமாகக் கண்டித்துப் பேசினார். இதைக் குறித்து இங்கிலாந்தில் அவர் கண்டனத்துக்கு உள்ளானார். அதை அவர் பொருட்படுத்தாமல் மேலும் உறுதியாகப் பேசினார். தென்னாப்பிரிக்கா சர்க்காரைக் கண்டித்ததோடல்லாமல், இந்தியர்களின் சத்தியாக்கிரஹ இயக்கத்தைப் பலமாக ஆதரித்துப் பிரசங்கமும் செய்தார். இதனால் விளைந்த பலன் என்னவென்பதை அடுத்த அத்தியாயத்தில் பார்க்கலாம்.

ஐம்பதினாயிரம் ஜனங்களும் பிரதமர் ரெட்டியார், கனம் பக்தவத்சலம் முதலிய பிரமுகர்களும் கூடியிருந்த மாபெரும் சபையில் கவர்னர் ஜெனரல் தமிழில் பேசினார்



நியூகாஸில் சுரங்கங்களில் வேலை செய்த இந்தியத் தொழிலாளிகள் மொத்தம் ஆயிரம்பேர் இருக்கலாம். ஆனால் தென்னாப்பிரிக்கா முழுவதிலும் அறுபதினாயிரம் இந்தியத் தொழிலாளிகள் வேலை செய்து வந்தனர். அவர்களில் பெரும்பாலோர் கடற்கரை ஓரத்தில் வேலை செய்து வந்தவர்கள். நியூகாஸில் தொழிலாளிகள் வேலை நிறுத்தம் செய்ததிலிருந்து நடந்த சம்பவங்கள் எல்லா இடங்களுக்கும் பரவின. இதன் காரணமாக ஆங்காங்கே ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் திடீர் திடீரென்று வேலைநிறுத்தம் செய்தார்கள். அப்போது தென்னாப்பிரிக்கா சர்க்காரின் அடக்குமுறை மிகவும் கொடுமையாயிற்று. குதிரைப் போலீஸார் தொழிலாளிகளைத் துரத்தித் துரத்தி அவர்கள் வேலை செய்யும் இடத்தில் கொண்டு வந்து சேர்த்தார்கள். பலவந்தப்படுத்தி வேலை வாங்கினார்கள். எங்கேயாவது ஒரு சிறு கலவரம் ஏற்பட்டாலும் துப்பாக்கிப் பிரயோகம் சர்வ சாதாரணமாக நடந்தது. பலர் இறந்தார்கள்; பலர் காயமடைந்தார்கள். மேலும் மேலும் அடக்குமுறை வலுத்தது. விவரிக்க முடியாத கொடுமைகளைச் சர்க்கார் கையாண்டனர். அவ்வளவையும் இந்தியத் தொழிலாளிகள் தாங்கிக்கொண்டு உறுதியைக் கைவிடாதிருந்தார்கள். இத்தகைய மகா கடுமையான அக்கினி பரீட்சையில் இந்தியர்கள் தேறிய பிறகு போராட்டத்தின் இறுதிக் காலமும் நெருங்கி வந்தது.

சுதந்திர மாளிகை

ஜெயமணி

5. அரசாங்கம் அனுஷ்டிக்க வேண்டிய முறைகள்

கீழ்க்கண்ட முறைகளைச் சர்க்கார் அனுஷ்டிக்கும்படி வற்புறுத்த எந்தக் கோர்ட்டுக்கும் அதிகாரமில்லை. எனினும் இந்த முறைகளை அடிப்படையாகக் கொண்டு சட்டங்களை ஏற்படுத்தச் சுதந்திர இந்திய சர்க்கார் கடமைப் பட்டிருக்கிறார்கள்:

இந்தியாவிலுள்ள எல்லா ஜனங்களுக்கும் சமூதாய, பொருளாதார, அரசியல் நீதி கிடைக்கக்கூடிய ஒரு சமூதாய அமைப்பை ஏற்படுத்தி, அதைப் பாதுகாப்பதன் மூலம் ஜனங்களின் க்ஷேமத்தை அபிவிருத்தி செய்ய சர்க்கார் தீவிரமாக முற்படவேண்டும்.

ஆடவராயினும் பெண்மணியாயினும் ராஜ்யத்திலுள்ள சகல பிரஜைகளும் ஜீவனத்துக்குப் போதிய வசதிகளைப் பெறும்படி பார்த்துக்கொள்ள வேண்டியது சர்க்காரின் கடமை.

தொழிற்சாலைகள் முதலிய பல்வேறு மூல சாதனங்களும் பொதுஜனங்களின் க்ஷேமத்தை அபிவிருத்தி செய்யக்கூடிய விதத்தில் நிர்வகிக்கப் படவேண்டும்.

பொது ஜனங்களின் க்ஷேமத்துக்குப் பாதகமாகச் செல்வமோ, உற்பத்தி சாதனங்களோ ஒரு சில இடங்களில் சேரக் குவிந்துவிடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

ஒரே விதமான வேலை செய்யும் ஆடவருக்கும் பெண்டிருக்கும் சம்பளத்தில் ஏற்றத் தாழ்வு இருக்கக்கூடாது.

தொழிலாளிகளான ஆடவர், பெண்டிர் இவர்களுடைய பலமும் ஆரோக்கியமும் சுரண்டப்படாமல், அதாவது பலவான்களான முதலாளிகளால் துஷ்பிரயோகம் செய்யப்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

பொருளாதாரக் கஷ்டம் காரணமாக அவர்களுடைய வயதுக்கோ, பலத்துக்கோ, ஆரோக்கியத்துக்கோ தகுதியற்ற தொழில்களில் ஈடுபடும்படியான நிர்ப்பந்தம் ஏற்படாமல் ஜனங்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டும்.

சிறுவர்களும் யுவர்களும் சுரண்டப் படாமல் பார்த்துக் கொள்வதுடன், அவர்களுடைய ஆத்மார்த்த வாழ்வோ அல்லது ஸ்தூல வாழ்வோ சிதைவுறாமல் அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டும்.

கிராமப் பஞ்சாயத்துக்களை ஏற்படுத்தி அவை சுதந்திர சர்க்காரின் அம்சங்களாக இருந்து வருவதற்கு அவசியமான அதிகாரங்களை அவைகளுக்கு அளிக்க வேண்டும்.

சர்க்கார் தங்களுடைய பொருளாதார சக்திக்கு இயன்ற வரையில் ஒவ்வொருவருக்கும் வேலையும் கல்வியும் கிடைக்க வழி செய்ய வேண்டும்.

வேலையின்மை, வயோதிகம், நோய் நொடி காரணமாகக் கஷ்டப்படுவோருக்கு உதவியளிக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

வேலை செய்யுமிடத்தில் நியாயமான, மனிதத் தன்மைக்கு முரண்பாடில்லாத வசதிகள் கிடைக்க சர்க்கார் வழி வகை செய்ய வேண்டும்.

தொழிற்சாலைகளில் வேலை செய்யும் தொழிலாளராயினும் சரி, இதர துறைகளில் வேலை செய்யும் தொழிலாளராயினும் சரி, அவர்களுக்கு ஜீவனத்துக்குப் போதிய சம்பளமும், வேலை செய்யுமிடங்களில் நியாயமான சௌகரியங்களும், ஓய்வெடுத்துக் கொள்ள வசதியும், சமூதாய, கலாசார அறிவு அபிவிருத்திக்கான சந்தர்ப்பங்களும் கிடைப்பதற்குச் சர்க்கார் சட்டத்தின் மூலமாகவோ அல்லது வேறெந்த வழியிலோ முயற்சிக்க வேண்டும்.

தனிப்பட்ட முறையிலோ அல்லது கூட்டுறவு முறையிலோ கிராமப் பிரதேசங்களில் குடிசைத் தொழில்களை

அபிவிருத்தி செய்ய முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். இந்தியா முழுதும் சகல ஜனங்களுக்கும் ஒரே விதமான சிவில் சட்டங்கள் ஏற்படும்படி பார்த்துக் கொள்ள வேண்டும்.

இந்த அரசியல் திட்டம் அமுலுக்கு வந்ததிலிருந்து பத்து வருஷங்களுக்குள்ளாக, இந்தியாவிலுள்ள சகல சிறுவர் சிறுமியருக்கும் பதினாறு வயது பூர்த்தியாகும் வரையில் இலவசமாகவும் கட்டாயமாகவும் கல்வியளிக்க முயற்சிக்க வேண்டும்.

குறிப்பாக ஹரிஜனங்கள் போன்ற பிற்போக்கான சமூகத்தினரின் கல்வி, பொருளாதார வசதிகளை அபிவிருத்தி செய்யவும் அவர்களுக்கு யாரும் எவ்வித அநீதியும் இழைக்காமல் பாதுகாக்கவும் ஏற்பாடு செய்ய வேண்டும்.

சத்து உணவு ரகத்தையும், ஜனங்களின் வாழ்க்கை அந்தஸ்தையும் உயர்த்துதல், பொது ஜனங்களின் ஆரோக்கியத்தை அபிவிருத்தி செய்தல் முதலியன தங்களுடைய முக்கிய கடமைகள் என்று சர்க்கார் கருத வேண்டும்.


பொது ஜனங்களின் ஆரோக்கியத்தைக் கெடுக்கும் மது வகைகளைத் தடுத்து மது விலக்கை அமுலுக்குக் கொண்டு வர வேண்டும். ஆனால் ஔஷத உபயோகத்துக்காக மாத்திரம் அவற்றை அனுமதிக்கலாம்.

நவீன விஞ்ஞான முறைகளை அடிப்படையாகக் கொண்டு விவசாயத்தையும் விவசாயத்துக்கு இன்றியமையாத கால்நடைகளையும் அபிவிருத்தி செய்ய வே
டும். குறிப்பாக, கால் நடைகளி
தரத்தை உயர்த்தி அவைகளுக்குப் பா
காப்பு அளிக்கவும், பசுவைப் போன்
பிரயோஜனகரமான கால்நடைகளையு
அவற்றின் கன்றுகளையும் கொல்லு
வழக்கத்தைத் தடுக்கவும் முயற்சிக்
வேண்டும்.

தேசிய முக்கியத்துவம் வாய்ந்தவை
என்று பார்லிமெண்டு பிரகடனம் செ
யும் ஞாபகச் சின்னங்கள், சிற்பச் சிற
புள்ள ஸ்தாபனங்கள், சரித்திரப் பி
சித்தி பெற்ற இடங்கள் முதலியவை
களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்
யது சர்க்காரின் கடமை. அவைகளை
யாரும் சிதைக்கவோ, அழிக்கவோ, அக
றவோ, ஏற்றுமதி செய்யவோ கூடாது
சட்டத்தை அனுசரித்து அவைகளை
பாதுகாத்தும் பராமரித்தும் வர சர்க்கா
கடமைப் பட்டிருக்கிறார்கள்

சர்க்கார் நிர்வாக அதிகாரிகளுக்கு
கீழ்ப்பட்டிராமல் நீதி இலாகாவைத் த
யாகப் பிரிக்கச் சர்க்கார் ஏற்பாடு செய்
வேண்டும்.

சர்வதேச அமைதியும் பாதுகாப்பு
ஏற்பட சர்க்கார் உதவி புரிய வேண்டு
வெளிதேசங்களுடன் நியாயமான, கௌ
வமான தொடர்பு வைத்துக் கொள்
வேண்டும் சர்வதேசச் சட்டங்களிலு
உடன்படிக்கைகளிலும் மதிப்பு ஏற்படு
படி செய்ய வேண்டும். சர்வதேசத் த
ராறுகளை மத்தியஸ்தமாகவும் சமரசமா
வும் தீர்க்க உதவி புரியவேண்டும்.



பல் டாக்டர் (பையனின் பல்லைப் பிடுங்கிவிட்டு):—ஸார், எடுங்கள் இருபது ரூபாய்!
பையனின் தகப்பனார்:— ஒரு பல்லுக்கு ஐந்து ரூபாய்தானே கொடுப்பது வழக்கம்?
டாக்டர்:—ஆமாம். உங்கள பையன் போட்ட கூச்சலில் நாலு பேர் பயந்து சொல்லி கொள்ளாமல் எழுந்து போய்விட்டார்களே, ஐயா!

அலை ஓசை

கல்கி

இருபதாம் அத்தியாயம்

சிங்காரப் பூங்காவில்

சீதாவுக்கு உணர்வு வந்தபோது பட்சிகளின் கானம் கலகலவென்று அவள் செவியில் கேட்டுக் கொண்டிருந்தது. இடையிடையே இலைகள் அசைந்தாடும்போது உண்டாகும் சலசலப்புச் சத்தமும் கேட்டது. இவற்றுடன் கண்ணனுடைய இடையில் அணிந்த மணிச் சதங்கைகள் குலுங்குவது போன்ற 'கிண்கிணி'ச் சத்தம் சில சமயம் கலந்து கொண்டிருந்தது. வேறு நினைவேயில்லாமல் அந்த இனிய சப்தங்களை அநுபவித்துக் கொண்டிருந்தாள். மூடியிருந்த கண்ணிமைகளைத் திறப்பதற்கு மனம் வரவில்லை.

கடிகாரத்தில் மணி அடிக்கும் சத்தம் அவளை அந்த இன்பமயமான கான உலகத்திலிருந்து பூவுலகத்துக்குக் கொண்டு வந்தது. மணி ஆறு அடித்தது. உடனே அவளுடைய கண்ணிமைகள் திறந்தன. சுற்று முற்றும் மேலும் கீழும் அவள் கண்ட காட்சி அவளைத் திகைப்படையச் செய்தது. தந்தத்தைப்போல வெண்மையும் பளபளப்பும் கொண்ட சலவைக்கல் சுவர்கள் நாலுபுறமும் அவளைச் சூழ்ந்திருந்தன. கீழ்த்தரையும் சலவைக் கல் பதித்ததுதான். ஆனால் அதில் பெரும் பகுதியை சித்திர விசித்திரமான இரத்தின கம்பளம் மூடியிருந்தது. மேலேயிருந்து கண்ணாடிக் குஞ்சலங்களுடன் கூடிய விதவிதமான வேலைப்பாடு அமைந்த 'குளோப்' விளக்குகள் தொங்கிக் கொண்டிருந்தன. பளிங்குச் சாளரங்களின் வழியாகச் சில சமயம் உள்ளே புகுந்த இனிய காலை நேரத்துக் காற்று அந்த விளக்குகளை ஆட்டிவிட்டபோது கண்ணாடிக் குஞ்சலங்கள் ஒன்றோடொன்று மோதிக் கிண்கிணிச் சத்தத்தை உண்டாக்கின.

அத்தகைய அறையின் மத்தியில் சப்ரமஞ்சக் கட்டிலில் பட்டு மெத்தை மேல் வெல்வெட் தலையணைகளுக்கிடையில் தான் படுத்திருந்ததைச் சீதா அறிந்தாள். சிறிது நேரம் ஒரே திகைப்பாயிருந்தது. முதல்நாள் இரவு நடந்த சம்பவங்கள் எல்லாம் ஒவ்வொன்றாக நினைவு வந்தன. நினைவு வந்த நிகழ்ச்சிகள் எல்லாம் உண்மைதான் என்பதை நிரூபித்துக்கொண்டு அவளுடைய முகத்தில் அடிபட்ட இடத்தில் 'விண் விண்' என்று இலேசான வலி உணர்ச்சி இருந்து கொண்டிருந்தது. ஆகையால் அந்தச் சம்பவங்கள் எல்லாம் உண்மையேதான்! தன்னைச் சில வடக்கத்தி மனிதர்கள் பலவந்தமாகக் காரில் ஏற்றிக்கொண்டு வந்ததும், சூரியா இன்னொரு காரில் தன்னைத் தொடர்ந்து வந்ததும், சூரியாவின் வண்டி யமுனைப் பாலத்தின் முனையில் தடுத்து நிறுத்தப்பட்டதும் உண்மைதான். வழியில் ஒரு ஊரில் தான் பசிக்கிறது என்று சொன்னதும், தனக்காகப் பூரி, மிட்டாய், பால் வாங்கிக்கொண்டு வந்ததும் உண்மைதான். பாலைச் சாப்பிட்ட பிறகு அதில் மயக்க மருந்து கலந்திருக்குமோ என்ற சந்தேகம் உண்டானதும் வேறு வண்டிக்கு மாற்றப்பட்டதும் அதில் ஒரு ஸ்திரீ தனக்குத் துணையாக ஏறியதுங்கூட உண்மையாகத்தான் இருக்க வேண்டும். அந்தப் பிரயாணம் இந்த அரண்மனையில் வந்து முடிவடைந்திருக்கிறது.

ஆம்; இது யாரோ ஒரு மகாராஜாவின் அரண்மனை என்பதில் சந்தேகம் இல்லை. பலகணியின் வழியாகப் பார்த்தபோது வெளியிலே அழகான பூங்காவனம் தோன்றியது. செடிகளும், கொடிகளும், மரங்களும் பூத்துக் குலுங்கிய அந்தப் பூம்பொழிலில் ஆங்காங்கு பளிங்குக்கல் தடாகங்களும் தடாகங்களின் மத்தியில் முத்துத் துளிகளை வீசி விசிறிய நீர்ப்பொழிவுகளும் தோன்றின. பூங்காவனத்துக்கு அப்பால் அடுக்கடுக்கான மாட கூடங்களுடனும் கலசங்கள் ஸ்தூபிகளுடனும் கூடிய மாளிகைகள் தென்பட்டன.

ஆம்; அது ஒரு மாமன்னர் வாழும் அரண்மனைதான். ஆனால் எந்த மன்னருடைய அரண்மனை? எதற்காகத் தன்னை இந்த மன்னரின் அரண்மனைக்கு பலாத்காரமாகப் பிடித்துக் கொண்டு வந்திருக்கிறார்கள்?

சுதேச சமஸ்தானங்களின் மகாராஜாக்கள் இந்தக் காலத்திலேகூடச் செய்யும் அக்கிரமமான காரியங்களைப் பற்றிச் சீதா எத்தனையோ கேள்விப் பட்டுத்தானிருந்தாள். பம்பாய் நகரில் மலபார் குன்றில் நடந்த பயங்கரமான கொலையைப் பற்றி அவளுக்குத் தெரியாதா என்ன? எல்லாம் தெரிந்த விஷயந்தான். அப்படி யாரேனும் ஒரு மகாராஜா தன்பேரில் மோகங் கொண்டு தன்னை இங்கே கொண்டு வரச் செய்திருப்பானோ? அவ்விதமானால், எந்த விதத்தில் தன்னுடைய கற்பைக் காப்பாற்றிக் கொள்ளுவது என்று சிந்தனை செய்தாள். பற்பல முறைகளைப் பற்றி யோசித்தாள். தப்பித்துக் கொள்ளப் பெரு முயற்சி செய்து பார்க்கவேண்டும்; முடியாமற் போனால் தற்கொலை செய்து கொள்ள வழி தேட வேண்டும். எந்த முறையைக் கைக்கொள்ளுவதாயிருந்தாலும் ஆரம்பத்தில் நயமாகவும் நல்லதனமாகவும் நடந்துகொள்ள வேண்டும்.

இந்தச் சமயத்தில் சமீபத்தில் காலடிச் சத்தம் கேட்கவே சீதா பீதியடைந்து படுக்கையில் எழுந்து உட்கார்ந்தாள். அந்த அறையின் கதவு இலேசாகத் திறக்கப்பட்டபோது அவளுடைய நெஞ்சத்தின் கதவும் படபட வென்று அடித்துக்கொண்டது.

ஆனால் உள்ளே வந்தவள் ஒ
சாதாரண தாதிப் பெண் என்
பார்த்தவுடனே தெரிந்தது. வந்தவ
ஹிந்தி பாஷையில் மரியாதையாகவு
இனிமையாகவும் பேசினாள். பக்கத்
அறையில் முகம் கழுவிக் கொள்
லாம் என்றும் காலைச் சிற்றுண்
தயாராயிருக்கிறதென்றும் அவ
சொன்னதாகச் சீதா தெரிந்து கொண்
டாள். அவளைப் பல கேள்விக
கேட்கச் சீதா விரும்பினாள். ஆன
பேசுவதற்கு நா எழவில்லை; துணிவு
ஏற்படவில்லை. பிறகு பார்த்து
கொள்ளலாம் என்று எண்ணி முக
கழுவிக் கொள்ளச் சென்றாள்.

காலைச் சிற்றுண்டி அருந்திய பி
பாடும் தூக்க மருந்தினால் ஏற்பட்
மயக்கம் முழுதும் தெளியவில்லை. ம
படியும் படுக்கையில் படுத்தாள்
அரைத் தூக்கமும் அரை விழிப்புமா
இருந்த சமயத்தில் இரண்டு மூன்
குரல்கள் பேசிக்கொண்டே வருவ
கேட்டது. குரல்களில் ஸ்திரீயின் குர
ஒன்றும் இருந்தது. அவர்கள் என்
பேசிக் கொள்கிறார்கள் என்
தெரிந்து கொள்ள விரும்பித் தூங்
வதுபோலப் பாசாங்கு செய்து அசை
யாமலிருந்தாள். வந்தவர்கள் தங்
ளுக்குள் பேசிக் கொண்டார்கள்
பேசியதெல்லாம் சீதாவுக்கு விளங்
வில்லை. ஆயினும் "மகாராஜா"
"மகாராணி" என்னும் சொற்க
நன்கு விளங்கின. "தூக்க மருந்தின்
சக்தி இன்னும் இருக்கிறது!" என்
ஒரு குரல் கூறியது. அந்தக் குர
முதல் நாள் இரவு தன்னை மோட்
டாரில் ஏற்றி அழைத்து வந்தவனி
குரல் என்று சீதா அறிந்து கொண்
டாள். "இவள் என் சகோதரிதானு
நிச்சயமா?" என்று ஒரு வாலிபனி
குரல் கேட்டது. "ஆமாம்; சந்தே
மில்லை. ராஜமாதாவின் கட்டளை
அப்படியே நிறைவேற்றி விட்டேன்!
என்றது இன்னொரு குரல். முதிர்ந்
மாதரசி ஒருத்தியின் குரல், "இந்த
பெண் இந்த அரண்மனையில் உன்னை
போலவே வளர்ந்திருக்க வேண்
யவள். விதியானது அவளை இத்தனை
காலமும் பிரித்து வைத்திருந்தது
என்று கூறியது. இதைக்கேட்ட சீத
வின் உடம்பு சிலிர்த்தது; உள்ள

பரவசம் அடைந்தது. ஆயினும் அப்போது கண் விழித்து எழுந்திருக்க அவனுக்கு மனம் வரவில்லை. ஒரு வேளை இதெல்லாம் கனவோ, என்னமோ? கண்ணை விழித்தால் ஒரு வேளை மறைந்து விடுமோ என்னமோ?—இத்தகைய நெஞ்சக் கலக்கத்தினால் மூடிய கண்ணைத் திறவாமல் இருந்தான்.

சில நிமிஷத்துக்கெல்லாம் அந்த மூதாட்டியின் குரல் "கொஞ்ச நேரத்துக்குப் பிறகு மறுபடி வரலாம்!" என்று சொல்லியது. இத்துடன், வந்திருந்தவர்கள் திரும்பிச் சென்றார்கள். அவர்கள் கொஞ்ச தூரம் போவதற்கு அவகாசம் கொடுத்த பிறகு சீதா கண் விழித்துப் பலகணி வழியாகப் பார்த்தான். கும்பலாகச் சென்றவர்களில் ராஜ மாதா யார் என்றும், ராஜகுமாரர் யார் என்றும் கவனித்துத் தெரிந்து கொள்வதில் கஷ்டம் ஒன்றும் ஏற்படவில்லை.

தூக்கம் நன்றாகக் கலைந்துவிட்டது. படுத்திருக்க முடியவில்லை. எழுந்து வெளியே வந்தான். தான் படுத்திருந்த இடம் அரண்மனைப் பூங்காவனத்தின் மத்தியில் இருந்த மாளிகை என்று தெரிந்தது. பூந்தோட்டத்தைச் சுற்றி நாலு புறத்திலும் இதைவிடப் பெரிய பெரிய மாட மாளிகைகள் காணப்பட்டன. மாளிகைகளுக்கு மத்தியில் தோன்றிய இடை வெளி வழியாகப் பார்த்தால் தூரத்தில் நீல நிறத்து ரி நீர் படர்ந்திருந்தது.

இது எந்த ஊர் அரண்மனை? எந்த ராஜாவின் சிங்கார மாளிகை? யார் வளர்த்த பூந்தோட்டம்?

இந்த மகிமையான ராஜரீகச் செல்வங்களில் எல்லாம் தனக்கும் உரிமை உண்டா? விதி வசத்தினால் இத்தனை காலமும் பிரிந்திருக்க நேரிட்டதா? ராஜ குலத்திலே பிறந்த ராஜகுமாரியா நான்? விதியின் விளையாட்டினால் ஏழைக் குடும்பத்தில் வளர்ந்து எளிய வாழ்க்கை நடத்தி எல்லையில்லாத கஷ்டங்களை யெல்லாம் அனுபவிக்கும்படி நேரிட்டதா? அந்தக் கஷ்டங்களுக்கெல்லாம் இப்போது உண்மையிலேயே முடிவு வந்துவிட்டதா?

அந்த மூதாட்டி யார்? தன்னைப் பத்து மாதம் சுமந்து பெற்ற அன்னை தானோ? பெரிய தாயார் அல்லது சிறிய தாயார் உறவு பூண்டவளா? அந்த அழகிய ராஜகுமாரன் தன்னுடன் பிறந்த சகோதரனா?...ஆகா! இதெல்லாம் உண்மையாயிருக்க முடியுமா? சிறு வயதில் தான் கண்ட கற்பனைக் கனவுகள், கட்டிய ஆகாசக் கோட்டைகள், மனோராஜ்யங்கள், — எல்லாவற்றையும் விட இப்போது நடந்திருப்பது அதிசயமாயிருக்கிறதே?

அதிசயந்தான்! உலகத்தில் இந்த நாளிலும் எத்தனையோ அதிசயங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. அந்த அதிசயங்களில் ஒன்று தன் வாழ்க்கையிலும் நடந்து விட்டிருக்கிறது. தான் ராஜகுலத்தில் பிறந்த ராஜகுமாரி என்பது உண்மைதான். இல்லாவிடில் தன்னை இங்கே கொண்டு வருவதற்கு இவ்வளவு பிரயத்தனம் ஏன் செய்திருக்க வேண்டும்? அந்த மூதாட்டியும் ராஜகுமாரனும் பேசியதிலிருந்து அது நிச்சயம் என்று ஏற்படுகிறது.

இந்த விஷயம் எல்லாம் அவருக்குத் தெரியும்போது அவருடைய மனநிலை எப்படியிருக்கும்! ராஜவம்சத்தில் பிறந்த ராஜகுமாரியைத் தான் மணந்து கொள்ளும் பாக்கியம் கிடைத்தது பற்றிப் பெருமை கொள்வாரா? தன்னை இத்தனை காலமும் இவ்வளவு கொடூரமாக நடத்தியது பற்றி வருத்தப்படுவாரா? இதற்குப் பிறகும் அவரையே கணவர் என்றும் கடவுள் என்றும் கருதித் தான் நடந்து கொள்ளப் போவது குறித்து மகிழ்ச்சியடைவாரா? இனிமேலாவது தன்னை அவமதித்து அலட்சியமாய் நடத்தாமல் அன்புடன் போற்றி அருமையாக வைத்துக் கொள்வாரா? நியாயமாகப் பார்த்தால் தன்னிடம் அவர் மன்னிப்புக் கேட்டுக் கொள்ள வேண்டும்! தனக்கு இழைத்த அநீதிகளுக்காகவும் கொடுமைகளுக்காகவும் வருந்திப் பச்சாத்தாபப்பட வேண்டும். இனிமேல் அப்படியெல்லாம் நடந்து கொள்ளுவதில்லை யென்று உறுதி மொழியும் கொடுக்க வேண்டும். ஆனால் அப்படி மன்னிப்புக் கோர வேண்டும் என்று தான் வற்புறுத்தப் போவதில்லை. அந்த மாதிரியெல்லாம் அவரை அவமானப் படுத்தத் தனக்கு ஒருநாளும் மனம் வராது. அவர் ஏதாவது சொல்ல ஆரம்பித்தால் உடனே அதை



நிறுத்தி அவருடைய வாயைத் தன்னுடைய கையினால் பொத்தி, "வேண்டாம்! வேண்டாம்!" என்று சொல்ல வேண்டும். எப்படியிருந்தாலும் அவர் தன்னுடைய கணவர் அல்லவா? ஏழையும் அநாதையுமாயிருந்த தன்னை ஆசைப்பட்டு மணந்த மணவாளர் அல்லவா? செல்வத்திலே பிறந்து செல்வத்திலே வளர்ந்த லலிதாவை வேண்டாம் என்று சொல்லித் தன்னை விரும்பிக் கலியாணம் செய்துகொண்ட பிராணநாதர் அவர் அல்லவா?

லலிதாவுக்கு இதெல்லாம் தெரியும் போது என்ன நினைப்பாள்? சந்தோஷப்படுவாளா? அசூயைப்படுவாளா? தன் அருமைத் தோழிக்கு இத்தகைய அதிர்ஷ்டம் கிடைத்தது பற்றிச் சந்தோஷப் படத்தான் செய்வாள். ஆயினும் மனதிற்குள்ளே கொஞ்சம் அசூயையும் இல்லாமற் போகாது. கலியாணத்துக் கென்று காலணாச் செலவு செய்ய நாதியற்று இரவல் மணப்பந்தலில் மாலையிட்ட அநாதைச் சீதா ஒரு பெரிய சமஸ்தானத்தின் ராஜகுடும்பத்தில் பிறந்த ராஜகுமாரி என்று தெரிந்தால் கொஞ்சமாவது அசூயை உண்டாகாமல் இருக்குமா? லலிதா ஒரு சாதாரண மனுஷிதானே? மனுஷர்களுக்குச் சாதாரணமாக உள்ள பொறாமை லலிதாவுக்கு மட்டும் எப்படி இல்லாமற் போகும்?

அதெல்லாம் இருக்கட்டும். இப்போது இவர்களிடம் தான் எப்படி நடந்து கொள்வது? தன் விஷயத்தில் இவர்களுடைய உத்தேசம் என்னவாக இருக்கும்? எதற்காக இவ்வளவு மர்மமாகவும் பலவந்தமாகவும் தன்னைப் பிடித்துக்கொண்டு வரச் செய்திருக்கிறார்கள்? இவர்களிடம் கொஞ்சம் கண்டிப்பாகவும் ஜாக்கிரதையாகவும் பேசவேண்டும். தன்னை இங்கே கொண்டு வருவதற்கு அவர்கள் கையாண்ட முறையைத் தான் விரும்பவில்லையென்று காட்டிவிட வேண்டும். மேலே அவர்கள் என்ன சொன்னாலும் சுலபத்தில் இணங்கிவிடக் கூடாது. அவர்களுடைய நோக்கம் இன்னதென்று தெரிந்துகொண்டு அதற்குத் தக்கபடி யோசித்துப் பதில் சொல்ல வேண்டும். அடாடா! இந்த மாதிரி சமயத்தில் சூரியாவின் உதவியும் யோசனையும் தனக்குக் கிடைக்குமானால் எவ்வளவு நலமாயிருக்கும்! ஐயோ! பாவம்! சூரியா இப்போது எங்கே எந்த நிலைமையில் இருக்கிறானோ? ஒருவேளை இன்னமும் தன்னைத் தேடி அலைந்து கொண்டிருக்கிறானோ? அல்லது போலீஸார் அவனைப் பிடித்துக்கொண்டு விட்டார்களோ, என்னமோ!

இந்த அரண்மனையில் தன்னுடைய நிலைமை இன்னதென்று தெரிந்துடன் முதற் காரியமாகச் சூரியாவைப் பற்றி விசாரிக்க வேண்டும். விசாரித்து அவனுக்கு வேண்டிய உதவி செய்யவேண்டும். பார்க்கப் போனால் அவனைத் தவிரத் தன்னிடம் உண்மையான அபிமானம் உள்ளவர்கள் வேறு யார்? அவனைப்போல் தனக்காகக் கஷ்டங்களையெல்லாம் அநுபவிக்கத் தயாராயிருந்தவர்கள் வேறு யார் உண்டு?

இவ்வாறெல்லாம் சிந்தனை செய்த வண்ணம் சீதா அந்த அழகிய அரண்மனை உத்தியானவனத்தில் உலாவி,



திரிந்தான். ஆங்காங்கு நின்று செடிகளில் பூத்துக் குலுங்கிய புஷ்பக் கொத்துக்களிலிருந்து ஒவ்வொன்றைப் பறித்து முகர்ந்தான். மரக்கிளையின் மீது அமர்ந்து கீதமிசைத்த பட்சிகளை உற்றுப் பார்த்துக் கொண்டு நின்றான். சுற்றி அலுத்துக் கால்களும் வலி எடுத்த பிறகு அந்தப் பூங்காவனத்தில் போட்டிருந்த சலவைக் கல் மேடை ஒன்றின் மீது உட்கார்ந்தான். அவனுடைய உள்ளத்தின் கற்பனா சக்தி விசுவரூபம் எடுத்துப் பூமியையும் வானத்தையும் அளாவிக் கொண்டு நின்றது. அவனுடைய சித்தம் மரங்களின் உச்சிமீது உலாவி வானத்துப் பறவைகளுடன் குலாவி மேகமண்டலங்களில் திரிந்து இன்ப ஒளிக் கடலில் நீந்தி விளையாடியது. காலக் கணக்கெல்லாம் குழப்பமடைந்து, ஒரு நிமிஷ நேரம் நூறு வருஷமாக நீடித்தது. ஆயிரம் வருஷம் அரை நிமிஷமாகப் பறந்தது. எத்தனை எத்தனையோ மனோ ராஜ்யங்கள் எழுந்து உடனே சிதைந்து விழுந்தன. மின்னல் நேரத்தில் ஆகாச வெளியில் அற்புதமான கோட்டைகள் தோன்றின; அதே வேகத்தில் அவை மறைந்தன. அன்பும் ஆசையும் இன்பமும் துன்பமும் குரோதமும் குதூகலமும் அலை அலையாகவும் மலை மலையாகவும் கொந்தளித்து மேலெழுந்து நொடிப் பொழுதில் அடங்கின.

• • •

அவர்கள் மறுபடியும் வந்தார்கள். ராஜமாதா, ராஜகுமாரர், அவர்களுடைய அந்தரங்கப் பணியாள்,—ஆகிய மூவரும் திரும்பவும் வந்தார்கள்.

சீதா அவர்களை ஏறிட்டுப் பார்த்தான். கண்கொட்டாத ஆவலுடன் மூவரையும் மாறி மாறிப் பார்த்தான்.

ராஜமாதாவின் முகத்தில் புன்னகை மலர்ந்திருந்தது.

"மகனே! உன்னைச் சிங்கார மாளிகையில் தேடிவிட்டு வருகிறோம். அதற்குள் தோட்டத்தைச் சுற்ற ஆரம்பித்துவிட்டாயா? மிகவும் சந்தோஷம்.

இந்த அரண்மனைத் தோட்டத்திலே உலாவ உனக்குப் பூரண உரிமை உண்டு. இந்த அரண்மனையிலேயே வசிப்பதற்கும், உனக்குப் பாத்தியதை உண்டு. இவையெல்லாம் கேட்க உனக்கு வியப்பாயிருக்கிறதா?" என்று ராஜமாதா கேட்டாள்.

சீதா மறுமொழி ஒன்றும் சொல்லவில்லை. எத்தனையோ கேள்விகள் கேட்க அவளுடைய உள்ளம் துடித்துக் கொண்டிருந்தது. ஆனால் பேச முடியாதபடி உணர்ச்சி அவளுடைய தொண்டையை அடைத்தது. மேலும் ராஜமாதாவிடம் ஹிந்தி பாஷையில் பேசுவதற்கு வேண்டிய சக்தி தன்னிடம் இருக்கிறதா என்பது பற்றிச் சந்தேகம் உதித்தது. டில்லியில் வசித்த காலத்தில் வேலைக்காரர்களுடன் பேசிப் பழகியதனால் ஏற்பட்ட ஹிந்தி பாஷை ஞானம் இந்த மகத்தான சந்தர்ப்பத்துக்குப் போதுமானதா?

"மகளே, ஏன் பேசாமலிருக்கிறாய்? நாங்கள் உனக்கு அன்னியர்கள் அல்ல. நான் உன்னுடைய சிறிய தாயார்; இவன் உன்னுடைய சகோதரன். காலம் செய்த கோலத்தினால் இத்தனை நாளும் நீ வேறு எங்கேயோ வசிக்க நேரிட்டது!" என்றாள்.

சீதாவுக்கு ஒரே பிரமிப்பாயிருந்தது. வியப்பும் மகிழ்ச்சியும் போட்டியிட்டுக் கூத்தாடின. தான் எண்ணிய எண்ணமெல்லாம் உண்மைதான்; கனவுமல்ல, கற்பனையுமல்ல. ஏழைச் சீதா உண்மையில் ராஜகுலத்தில் பிறந்த ராஜகுமாரி! அற்புதம் என்றால் இதுவல்லவா அற்புதம்? அதிர்ஷ்டம் என்றால் இதைப்போன்ற அதிர்ஷ்டம் வேறு என்ன உண்டு?

"மகளே! இன்னும் நீ பேசவில்லை. ஒரு வேளை உன்னை இங்கே கொண்டு வந்த முறை உனக்குப் பிடிக்கவில்லை போலிருக்கிறது! அதனால் கோபமாய் இருக்கிறாயாக்கும்! ஆனால் உனக்கு நான் பல தடவை சொல்லி அனுப்பியும் எங்களிடம் வரச் சம்மதிக்கவில்லை. ஆகையினால்தான் உன்னைக் கட்டாயப்படுத்திக் கொண்டு வருவது அவசியமாயிற்று. நீயே யோசித்துப் பார்! உன் சகோதரனுக்குச் சீக்கிரத்தில் மகுடாபிஷேகம் நடக்கப் போகிறது. அதற்கு முன்னால் இந்தக் குடும்பத்தில் உனக்குச் செய்யப்பட்ட அநீதிக்குப் பரிகாரம் செய்துவிட வேண்டுமென்று இவன் பிடிவாதம் பிடித்தான். அப்படியானால் உன்னைக் கட்டாயப் படுத்திக் கொண்டு வருவதைத் தவிர வேறு வழி என்ன?" என்றாள் ராஜமாதா.

இந்தச் சமயத்தில் ராஜகுமாரரும் சம்பாஷணையிலே சேர்ந்து கொண்டார்:—"சகோதரி! அம்மா சொல்வது சரிதான். தங்களைப் பலவந்தமாக இங்கே கொண்டு வரச் செய்ததற்குக் காரணம் என் ஆவலே. பிரயாணத்தின் போது ஏதாவது கஷ்டம் ஏற்பட்டிருந்தால் அதற்காக மன்னிக்க வேண்டும். மேலும் தாங்கள் இந்தியாவின் சுதந்திரத்துக்காகப் பெரு முயற்சி செய்து வருகிறீர்கள் என்று அறிவேன். அதற்குக் குந்தகம் ஏற்படுவதை நான் விரும்பவில்லை. உண்மையில், எனக்கே இந்தச் சமஸ்தானத்து ராஜாவாக முடி சூட்டிக் கொள்வதில் விருப்பமில்லை. வெள்ளைக்காரர்களைத் துரத்தியடித்து விட்டு இந்தியாவின் சுதந்திரத்தை நிலைநாட்ட வேண்டுமென்று ஆசையாயிருக்கிறது. அதற்கு இந்த யுத்த சமயத்தைக் காட்டிலும் நல்ல சமயம் கிடைப்பது அரிது. ஆனாலும் என் தாயாரின் வற்புறுத்தலுக்காகவே இந்த ராஜ்யப் பொறுப்பை ஒப்புக்கொள்ளப் போகிறேன். தாங்கள் என்னுடன் இருந்து ஒத்தாசை செய்ய வேண்டும். சகோதரியே! ஒத்தாசை செய்வீர்களா?"

சீதாவுக்குக் கண்ணைக் கட்டிக் காட்டிலே விட்ட மாதிரி இருந்தது. இது என்ன கூத்து? இவர்கள் என்னென்னமோ சொல்கிறார்களே? ஒருவேளை இவர்கள் பேசுகிற ஹிந்தி பாஷை சரியாகப் புரியாததினால் இப்படியெல்லாம் நமக்குத் தோன்றுகிறதோ?

இதற்குமேல் சும்மா இருக்கக் கூடாதென்று தீர்மானித்து, "நான் ஒரு அபலை ஸ்திரீ. என்னால் உங்களுக்கு என்ன உதவி செய்ய முடியும்? மேலும் என்னுடைய புருஷரிடம் கேட்க வேண்டாமா? என்னுடைய பதிக்குத் தெரியாமல் என்னை நீங்கள் கொண்டு வந்ததே பிசகு!" என்றாள்.

இந்த வார்த்தைகளைக் கேட்ட ராஜமாதாவும் ராஜகுமாரரும் மலை சரிந்து

தலையில் விழுந்தவர்களைப்போல் பிரமித்துப்போய் நின்றார்கள். ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்தார்கள். பிறகு, சற்று விலகி நின்ற மூன்றாவது ஆளின் முகத்தையும் பார்த்தார்கள்.

"தன்னைத் தேடிப் படித்திருக்கிறாள் என்று நீர் சொன்னீரே? இந்த மாதிரி கொச்சையான ஹிந்தி பேசுகிறாளே?" என்று ராஜமாதா கேட்டாள்.

"கணவனைப் பற்றிப் பேசுகிறாளே? கலியாணம் ஆகியிருக்கிறதா, என்ன?" என்று ராஜகுமாரர் கேட்டார்.

மூன்றாவது ஆசாமி திகைத்த முகத்துடன் சீதாவைப் பார்த்து, "உங்களுக்குக் கலியாணம் ஆகியிருக்கிறதா?" என்று கேட்டான்.

"ஏன் ஆகவில்லை? ரொம்ப காலத்துக்கு முன்பே ஆகிவிட்டது! குழந்தை கூட இருக்கிறது!" என்றாள் சீதா.

ராஜகுமாரர், "இதென்ன அதிசயம்? அம்மணி! தாங்கள் யார்? எந்த ஊர்?" என்று கேட்டார்.

சீதாவுக்கு எதனாலோ கோபம் அதிகமாகிக் கொண்டிருந்தது.

"நான் யார் என்று தெரியாமலா என்னைப் பிடித்துக்கொண்டு வரச் செய்தீர்கள்?" என்றாள்.

"அம்மணி! தயவுசெய்து சொல்லுங்கள்! தங்கள் பெயர் என்ன? தங்களுடைய பெற்றோர்களின் பெயர் என்ன?" என்று ராஜகுமாரர் கேட்டார்.

"தாராளமாகச் சொல்கிறேன். என் பெயர் சீதா! என் தந்தை பெயர் துரைசாமி ஐயர். என் தாயாரின் பெயர் ராஜம்மாள். என் கணவன் பெயர் சௌந்தர ராகவன். என் மாமியாரின் பெயர் காமாட்சி அம்மாள். என் அருமை மாமனாரின் பெயர் பத்மலோசன சாஸ்திரிகள். இன்னும் யார் யாருடைய பெயர் உங்களுக்கு வேண்டும்?"

"போதும், அம்மணி! போதும்! கியான் தாஸ்! இது என்ன மூடத்தனம்? இது என்ன அசம்பாவிதம்! இந்தத் தவறு எப்படி நேர்ந்தது?" என்று ராஜ குமாரர் பணியாளின் மீது எரிந்து விழுந்தார்.

கியான்தாஸ் தன் சட்டைப் பையிலிருந்து ஒரு புகைப் படத்தை எடுத்துச் சீதாவுடன் ஒப்பிட்டு இரண்டு மூன்று தடவை உற்றுப் பார்த்தான்.

"தவறு நேர்ந்து விட்டது! ஐயோ! தவறு நேர்ந்து விட்டது. இந்தப் பெண்ணும் அவள் மாதிரியே இருக்கிறாள். ஆனால் அவள் அல்ல! அடாடா! எவ்வளவு பெரிய தவறு நேர்ந்து விட்டது? இப்போது என்ன செய்வது?" என்று கியான் தாஸ் கூடச் சேர்ந்து அங்கலாய்த்தான்.

சீதாவைப் பார்த்து ராஜமாதா "பெண்ணே! உண்மையாகச் சொல்லி விடு! உன்னுடைய பெயர் தாரிணி இல்லையா?" என்று கேட்டாள்.

அந்த ஒரே கேள்வியின் மூலம் சீதாவுக்குச் சகல விவரங்களும் தெரிந்து விட்டன. அவளுடைய ஆகாசக் கோட்டைகளும் மனோராஜ்ய மாளிகைகளும் இடிந்து தகர்ந்து பொடிப் பொடியாகிக் காற்றிலே பறந்து மண்ணிலே விழுந்து மண்ணோடு மண்ணாகி மறைந்து தொலைந்து போயின!

ஆகா! இந்த முழுமூடர்கள் தன்னைத் தாரிணி என்று தவறாக எண்ணி இங்கே கொண்டு வந்திருக்கிறார்கள்! இத்தனை நேரமும் அது தெரியாமல் நாமும் ஏமாந்து ஏதேதோ கோட்டை கட்டிக் கொண்டிருந்தோமே?

ஆசாபங்கத்தினாலும் அருவருப்பினாலும் ஆங்காரத்தினாலும் சீதாவின் உள்ளம் எரிமலை யாகியது. எரிமலைக்கும் தீயின் கொழுந்தைப் போல வார்த்தைகள் சீறிக்கொண்டு வந்தன.

"நான் தாரிணி இல்லை. நான் உங்கள் ஆர்த்த ராஜகுலத்தில் பிறந்தவளும் இல்லை. தளுக்கினாலும் குலுக்கினாலும் மூடப் புருஷர்களை மயங்க வைக்கும் மாயக்காரியும் அல்ல. நான் ஏழைக் குடும்பத்தில் பிறந்த ஏழைப் பெண். தாலி கட்டிய புருஷனோடு மானமாய் ஜீவனம் செய்து வந்தேன். உங்களுடைய முழு மூடத்தனத்தினால் இந்த மாதிரி என்னை அலங்கோலப் படுத்திவிட்டீர்கள். இனி என்னுடைய கதி என்ன?" என்று சீதா அலறினாள்.

"பெண்ணே! வீணாகக் கத்தாதே! நடந்தது நடந்துவிட்டது. நீ இருந்த இடத்தில் உன்னைத் திருப்பிக்கொண்டு போய் விட்டுவிடச் சொல்கிறேன்!" என்றாள் ராஜமாதா.

"உங்களுக்கு என்ன? திருப்பிக் கொண்டு போய் விடுகிறேன் என்று சுலபமாய்ச் சொல்லி விடுகிறீர்கள்.


இப்படித் தெரிகெட்டு எங்கேயோ போய்விட்டுத் திரும்பி வந்தவனை அவர் திருப்பிச் சேர்த்துக் கொள்ள வேண்டாமா? நீங்கள் மகா பாவிகள்! இரக்கமற்ற சுயநலப் பிண்டங்கள்! உங்களுடைய வம்சம் அடியோடு நாசமாகிப் பூண்டற்றுப் போகும்......"

அதற்குமேல் அங்கே நிற்க விரும்பாமல் ராஜ மாதாவும் ராஜ குமாரரும் விரைந்து சென்றார்கள். போகும் போதே அவர்கள் அந்த மூன்றாவது ஆளை ஏதோ பலமாகக் கண்டித்துக் கொண்டு போக, அந்த ஆள் மன்னிப்புக் கேட்டுக் கொண்டும் சமாதானம் சொல்லிக் கொண்டும் போனான்.

அவர்கள் கண்ணுக்கு மறைந்ததும் சீதா விம்மி அழத் தொடங்கினாள். இதயத்தின் அடி வாரத்தில் நெடுகாலமாக மறைந்து கிடந்த துக்கம் பொங்கிப் பீறிக்கொண்டு வந்தது. கொதிக்கின்ற கண்ணீர் தாரை தாரையாகப் பெருகிக் கன்னத்தைச் சுட்டது. பழைய காலத்துக் காவியங்களிலே வரும் கற்பரசிகளைப் போலச் சீதாவுக்கு மட்டும் சக்தி யிருந்தால் அந்த மூன்று பேரையும் அந்த க்ஷணமே சுட்டு எரித்துச் சாம்பராக்கி யிருப்பாள்! தண்டனை அளிக்கும் அதிகாரம் உடைய அரசியா யிருந்தால் தாரிணியைச் சுண்ணாம்புக் காளவாயில் போட்டுப் பொசுக்கிக் கொல்லும்படி கட்டளை யிட்டிருப்பாள்.

ஆகா! எங்கே போனாலும் அந்தப் பாதகி யல்லவா தன்னுடைய சத்துருவாக வந்து சேருகிறாள்? தன்னுடைய ஆசைகளைப் பங்கமுறச் செய்து தன்னுடைய வாழ்க்கையைப் பாழாக்குவதற்கென்றே தாரிணி பிறந்தவள் போலும்! அடி! மோகன உருவம் கொண்ட பயங்கர ராட்சஸியே! கலிகால சூர்ப்பனகை என்றால் உனக்கல்லவா தகும்? உன்னை மானபங்கம் செய்து புத்தி புகட்ட எந்த வீர புருஷனாவது முன்வர மாட்டானா? சூரியாவிடம் சொன்னால் அவனாவது செய்ய மாட்டானா? அப்படி யாரும் உன்னைப் பழி வாங்க முன் வராவிட்டால் அடுத்த முறை உன்னைப் பார்க்கும் போது நானே உனக்கு விஷம் கொடுத்துக் கொன்று விடுகிறேன், பார்!

அவமானத்துக்கும் ஏமாற்றத்துக்கும் உள்ளான பேதை சீதாவின் மனதில் இது போன்ற பயங்கரமான எண்ணங்கள் பல குடி கொண்டன!



பர்மாவின் சுதந்திரப் படகில் ஓட்டைமேல் ஓட்டையாக ஏற்பட்டுக் கொண்டு வருகிறது. பர்மா சர்க்காரினால் சமாளிக்க முடியுமா?

திலானூர் உயர்தர எலிமெண்டரி பாடசாலை கட்டிட நிதிக்காக



ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி

உதவும் சங்கீதக் கச்சேரி

★

சங்கீத ரத்ன

டி. சௌடய்யா ... பிடில்
எம். எஸ். சக்திவேல் ... மிருதங்கம்
வைக்கம் கிருஷ்ணய்யர் கஞ்சிரா

✶

20-2-49 ஞாயிறு மாலை 6 மணிக்கு

கண்ணனூர்

போலீஸ் மைதானத்தில் அமைக்கப் பட்டுள்ள விசேஷப் பந்தலில்

★

சிராக்கல் ஸ்ரீ C. K. ராம வர்ம வலிய ராஜா அவர்கள் தலைமை வகிப்பார்கள்

✶

டிக்கட்டுகள் :

ரூ. *200/-* ரூ. *100/-* ரூ. *50/-*
ரூ. *25/-* ரூ. *10/-* ரூ. *5/-*

ஒலிபெருக்கி உண்டு

திருச்சி மேலப்புலிவார் ரோடு எஸ்.பி.ஜீ. மைதானத்தில் நடைபெறும் காதி & சுதேசி பொருட்காட்சியில்

நெ. 149 - 151

"ஸ்டேப்ரைட்"

ஸ்டாலுக்கு விஜயம் செய்தீர்களா?

அவசியம் தங்களை குடும்பத் துடன் பார்வையிட வர வேற்கும் ஸாம்ஸன் கம்பெனி ஸ்டால் அது தான்

வீடுகளுக்கும், விடுதிகளுக்கும் ஹோட்டல்களுக்கும் ஹாஸ்டல் களுக்கும் மிகவும் உபயோக மாகக் கூடிய "ஸ்டேப்ரைட்" பாத்திரங்கள் ஏராளமாக வந்து குவிந்துள்ளன.

●

பம்பாய் தேவிதயாள் கம்பெனியாரால் தயார் செய்யப்பட்டவை

●

டம்ளர்கள், கரண்டிகள், காப்பி பில்டர்கள், கோப்பைகள், ஸ்பூன்கள் ஸாஸ்பேன்கள், போஜனத் தட்டுகள் டிபன் கிண்ணங்கள், பக்கெட்டுகள் பேஸின்கள், சம்படங்கள், தட்டுகள் முதலிய உபயோகமான பாத்திரங்களை மேற்படி ஸ்டாலில் வந்து பார்த்து மகிழுங்கள். பிறகு வாங்குங்கள்.

வெள்ளியின் அந்தமும் இரும்பின் உறுதியும் ஒருங்கே கொண்ட ஸ்டேப்ரைட் பாத்திரங்களுக்கு ஈடு, உவமை வேறில்லை.

●

சமஸ்தானங்கள், இலங்கை, உள்பட தென்னிந்தியா பூராவுக்கும் பூரண விற்பனை ஏஜண்டுகள் :

ஸாம்ஸன் & கோ., லிமிடெட்

8-22, பிராட்வே (த. பெ. 1219) மதராஸ் - 1

போன் : 4521 தந்தி : BARAPASH

இலங்கையில் "சிதம்பரம்"

ரஜனி

கொழும்பு, பிப்ரவரி—12

இலங்கையிலுள்ள தோட்டங்களிலே பல வருஷங்களாக ஓர் அநியாயமான வழக்கம் இருந்து வருகிறது. மலைமீது ஏறி மழையையும் வெயிலையும் பொருட்படுத்தாமல் ஆண்களும் பெண்களுமாக ஆயிரக் கணக்கான தொழிலாளர் தேயிலைக் கொழுந்துகளைப் பறித்துச் சாக்கு மூட்டைகளில் நிரப்பிக் கட்டுவார்கள். ஒவ்வொரு சாக்கு மூட்டையும் சுமார் 100 முதல் 180 ராத்தல் வரை எடையிருக்கும். இச்சாக்கு மூட்டைகளை மலை உச்சியிலிருந்து அடிவாரத்திலுள்ள தோட்டத் தொழிற்சாலைக்குப் பெண் தொழிலாளிகள்தான் தூக்கிக் கொண்டு வரவேண்டும். கட்டுமஸ்தான ஆண் தொழிலாளிகள் பலர் இருக்கும் பொழுது—தங்களுடைய மனைவி பெண் சகோதரிகளின் சார்பாகச் சாக்கு மூட்டைகளைத் தூக்கிக் கொண்டு வர அவர்கள் தயாராகவும் இருக்கும் பொழுது, பெண்கள்தான் சாக்கு மூட்டைகளைத் தூக்க வேண்டுமென்று ஒரு சட்டம் அமுல் நடத்தப்பட்டு வருகிறது. சாக்கு மூட்டை தூக்காத பெண்களுக்கு முழு நாள் சம்பளம் கொடுக்கப் படுவதில்லை. தோட்டத்துக்கும் தோட்டத் தொழிற்சாலைக்கும் மூன்று நான்கு மைல் தூரமிருக்கும். அநேகம் தோட்டங்களில் சாக்கு மூட்டைகளை ஏற்றிவரச் சுலபமாக ஒரு வண்டியை அமர்த்தலாம். சில பெண்கள் தங்களுடைய சம்பளத்திலிருந்து பணம் கொடுத்து வண்டியை அமர்த்திச் சாக்கு மூட்டைகளைத் தொழிற்சாலைக்குக் கொண்டு வந்து சேர்க்கிறார்கள். கைக் குழந்தைகளையுடைய பெண்கள் இப்படிச் சம்பளத்தை விரயம் செய்வதற்கில்லை.

கர்ப்பிணிகளையும் கூடச் சாக்கு மூட்டை தூக்கச் செய்வது காட்டுமிராண்டித்தனமென்றும், இந்த அக்கிரமத்துக்கு உடனே முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமென்றும் எவ்வளவோ கிளர்ச்சி நடந்தும் பயனில்லை. கடைசியில் வி. வி. வேலுப்பிள்ளை என்ற இந்திய அங்கத்தினர் இவ் விஷயமாகப் பார்லிமெண்டின் உதவியை நாடியிருக்கிறார். பெண்கள் தேயிலைக் கொழுந்துச் சாக்குத் தூக்குவது 1950-ம் வருஷத்தில் நிறுத்தப்பட வேண்டும் என்று ஒரு தீர்மானத்தைப் பார்லிமெண்டில் கொண்டு வரப்போவதாக அவர் நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்.

தேசீயக் கொடி விஷயம்

இலங்கையின் தேசீயக் கொடி இன்னும் உத்தியோக தோரணையில் நிர்மாணிக்கப்படவில்லை. இதற்காக ஒரு விசேஷக் கமிட்டி நியமிக்கப்பட்டிருக்கிறது. யாழ்ப்பாணத் தமிழர்கள் சமீபத்தில் நடந்த சுதந்திர விழாவின்போது நந்திக் கொடிகளைப் பறக்க விட்டார்கள். சிங்களவர்கள் சிங்கக் கொடிகளைப் பறக்கவிட்டார்கள். இந்தியர்கள் மூவர்ண தேசீயக் கொடியையும் சிங்கக் கொடியையும் சேர்த்துப் பறக்க விட்டனர். சில இடங்களில் பிரிட்டிஷ் கொடி, சிங்கக் கொடி, இந்திய யூனியன் கொடி, பாகிஸ்தான் கொடி ஆகிய நான்கும் சேர்த்துப் பறக்க விடப்பட்டன. இந்த நிலைமையில் இலங்கை மந்திரிகள் சிங்கக் கொடியைப் படிப்படியாக உத்தியோக ரீதியான கொடியாக்கிவிட முயலுகின்றனர்.

சிங்கக் கொடி சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த தென்பதையோ அல்லது இலங்கையுடன் நீடித்த சம்பந்தமுடைய தென்பதையோ ஒருவரும் ஆட்சேபிக்கவில்லை. ஆயினும் தேசீயக் கொடியானது ஒரு வகுப்பாருடையதாக இல்லாமல் நாட்டு மக்கள் அனைவருடைய சம்மதத்தைப் பெற்றதாயும் மதிப்பிற்குரியதாயுமிருப்பது அவசியம். சர்க்கா பொறிக்கப்பட்ட மூவர்ணக் கொடி இந்திய தேசீயக் காங்கிரஸின் கொடியாகப் பல வருஷ காலம் இருந்தது. காந்திஜிக்குப் பிரியமானதும் அதுதான். ஆயினும் தேச மக்களின் பிரதிநிதிகளான அரசியல் நிர்ணய சபையோர் சர்க்காவை நீக்கிவிட்டு அதில் அசோக சக்கரத்தைப் போட்டபொழுது காந்திஜியும், நேருஜியும் தேச மக்களும் அந்தத் திருத்தத்தை ஒப்புக் கொண்டனர். அதேபோலச் சிங்கக் கொடி இலங்கையின் பழமையான கொடியாயிருப்பினும் பொது ஜன அபிப்பிராயத்தைத் தழுவி அதில் மாறுதல் செய்வதே விவேகமானது.


இலங்கையின் சுதந்திர விழா நடந்த போது பிரதமர் சேனநாயகா உத்தியோக தோரணையில் சிங்கக் கொடியை ஏற்றி வைத்தார். புதிய கப்பல்கள் கொழும்புத் துறை முகத்துக்கு வந்தால் துறைமுகத்துக்கு வெளியிலிருந்து கொண்டு இலங்கையின் கொடியென்றைக் கேட்டு வாங்கிப் பறக்க விட்டுக் கொண்டே துறைமுகத்தினுள் பிரவேசிப்பது வழக்கம். அதே போல கவர்னர் ஜெனரல் ராஜாஜி நாமகரணம் செய்து அனுப்பிய "வ. உ. சிதம்பரம்" கப்பல் கொழும்புக்கு வந்த பொழுது அதற்கு ஒரு சிங்கக் கொடியே அனுப்பப்பட்டது. இதெல்லாம் எதைக் குறிக்கிறது? சிங்கக் கொடியைத்தான் தேசியக் கொடியாக்குவதென்று அரசாங்கம் முடிவு கட்டியிருந்தால், கொடி நிர்ணயக் கமிட்டியை நியமித்துக் கலந்து பேசச் செய்யும் வெளி வேஷம் ஏன்?

மூன்றாவது வகுப்புக்கே வசதிகள்

வீரத் தியாகியும் கப்பலோட்டிய தமிழருமாகிய ஸ்ரீ வ. உ. சிதம்பரம் பிள்ளையின் கனவை நினைவாக்கிய "சிதம்பரம்" கப்பலைப்பற்றிச் சில வார்த்தைகள் குறிப்பிட வேண்டும். இந்தக் கடற் பாதையில் முன்பு ஓடிய கப்பலை விடச் "சிதம்பரம்" கப்பலில் பல வசதிகள் இருப்பதாகப் பிரயாணிகள் கூறுகின்றனர். ஏழைகள் பிரயாணம் செய்யும் மூன்றாவது வகுப்பில்தான் அதிகப்படியான சௌகர்யங்கள் இருக்கின்றனவாம். கப்பலில் கால் நடைகளை ஏற்ற ஆரம்பித்தால் துர்நாற்றம் சகிக்க முடியாமற் போய்விடுமென்று பிரயாணிகள் சொல்லுகின்றனர். பழைய கப்பலில் இல்லாத அனேகம் புதிய வசதிகள் "சிதம்பரம்" கப்பலில் இருக்கின்றன.

உதாரணமாகக் குளிர்ந்த தண்ணீருக்கும் சுடு தண்ணீருக்கும் குழாய்கள் இருக்கின்றன. நல்ல சாப்பாடும் கொடுக்கப்படுகிறது. கப்பல் ஓடும்பொழுது அதிக ஆட்டமும் இல்லை. இவை எல்லாவற்றையும் விடப் பிரயாணிகளுக்கு, 'தமிழன் கப்பலிலே, வீரத் தியாகியின் பெயர் கொண்ட கப்பலிலே பிரயாணம் செய்கிறோம்' என்ற உற்சாகமான எண்ணமும் ஏற்படுகிறது. பிரயாணிகள் விரும்பக் கூடிய சகல சௌகரியங்களும் கப்பலில் இருப்பதாக அதில் பிரயாணம் செய்து வந்த இந்திய ஹை கமிஷனர் ஸ்ரீ வி. வி. கிரி கூறினார்.

பால்ய சிநேகம்


பால்ய சிநேகிதம் என்றால் அதன் விதமே வேறுதான்!
ஐயையோ! போய்ட்டேன்! யார் இப்படி திடீரென்று பின்னால் வந்து அடித்துத் தள்ளினவன்?
அடே! கிச்சாமி! என்னைத் தெரியவில்லையா உனக்கு? நான்தான் உன் பால்ய சினேகிதன் பஞ்சு!
ஞாபகம் வரவில்லையா? தேக்காத்தான் சந்திலே இரண்டு பேரும் கோலி ஆடினோமே? அந்தப் பஞ்சு தாண்டா நான்!
யார்? பஞ்சுவா?
பலே! அந்தப் பஞ்சுவா நீ! ஏண்டா குட்டியா! இத்தனை வருஷமாய் எங்கேடா போயிரு-ந்தே?
நல்ல சினேகிதர்கள் நீங்கள்! பல வருஷத்துக் கொருதடவை சந்திக்கிறபோதே இந்தப் பாடா-யிருக்கே? தினம் தினம் பார்த்தால் என்ன கதியோ?
சாமா



ஞானவைராக்யம்

மாயா

சீருளிவேலன்பட்டி சுப்பையா பண்டாரம் துறவறம் பூண்டு, அதாவது இல்லறத்தைத் துறந்து, வருடம் இரண்டாகிறது. பிணி, மூப்பு, சாக்காடு இவைகளைக் கண்டு அஞ்சி ஓரிரவில் மனைவி ஆழ்ந்து உறங்கும்பொழுது தன் பிள்ளை ராகுலனை முத்தமிட்டுவிட்டு ஓடி மறைந்த புத்தரைப்போல, துறவு கொள்ளவில்லை; அவர் துறவு பூண்ட காரணமே வேறு.

பலசரக்குக் கடை சுப்பையா பிள்ளை கிராமத்தில் வியாபாரம் தொடங்கிய காலத்தில், அவர் எதிர்பார்த்தபடி லாபம் கிடைக்காமற் போனதுமன்றி, வீட்டிலே தினம் காலையில் இட்டிலி, தோசை முதலியன சுட்டதாலும், பொரியல், துவையல், பச்சடி, பருப்பு, சாம்பார் இத்தியாதிகளுடன் தினச் சாப்பாடு நடந்ததாலும் பிள்ளையின் பல சரக்குக் கடை ஒரே சரக்குக் கடையாகி, காலடைவில் வெறும் கடையாகி, பிள்ளைவாளும் கடன்காரப் பிள்ளைவாளாகி விட்டார். ஆகவே, அவருக்குத் துறவறத்தில் ஆசை பிறந்தது!

முன்னேற்பாட்டின்படி ஒரு நாள் இரவு, இரண்டு நாட்களுக்குப் பசிக்காதவாறு தின்றுவிட்டு, நள்ளிரவில் ஓசைப்படாமல் எழுந்து அடுக்களை சென்று, மேலும் நான்கு நாட்களுக்குத் தேவையான அரிசி, உப்பு, புளி, மிளகாய் முடிச்சுக்களைக் கட்டிக் கொண்டு, அஞ்சறைப் பெட்டியில் கிடந்த மனைவி அஞ்சலையின் செருகாட்டுக் காசு அணா பதினாறு, பைசா எட்டையும் மறக்காமல் எடுத்துக் கொண்டு, மனைவி, தன்னுடைய ஒரே பிள்ளை கணேசன், அருமையாக வளர்த்து வந்த வெள்ளாடு, அது போடவிருந்த குட்டி இவைகளைப் பிரிந்து 'விறுவிறு'வென்று வெளியே நடந்தார். அவர் ஊரைக் கடந்து செல்வதை ஆற்றங்கரையில் கோயில் கொண்டிருந்த திரௌபதியம்மனும், அவளுக்குக் காவல் போல் எதிரே இருந்த அரசமரத்துப் பிள்ளையாரும்தான் பார்த்தார்கள். வேறு யாரும் பார்க்கவில்லை.

பிள்ளையின் 'நகர் நீங்கு படலம்' நடந்த தன்னூர்க்கு மறுநாள், பக்கத்து ஊரெல்லாம் தேடியும், கண்டவர்களையெல்லாம் கேட்டும், அழுதும் கதறியும்கூட அவர் சென்ற இடம் தெரியவில்லை. அம்மனும் கணநாதரும், தங்களை மதித்து வந்து கேட்காத காரணத்தினாலோ, அல்லது தாங்கள் கல்தெய்வங்கள் என்பதை நிரூபிக்கவோ மௌனம் சாதித்தனர்.

இப்படியாகத் துறவறக் கோலம் இனிது நடக்கிறது. பிள்ளையின் மனம் ஸ்தல யாத்திரையில் லயித்துவிட்டது. அப்படி லயித்துவிட்ட மனதை வேறு வழியில் திருப்ப முடியாமற் போகவே, காருண்யமிகுந்த கவர்ன்மெண்டார் தண்டவாளத்தின் மீது ஓடும்படி போட்டுள்ள ரயிலின் உதவி கொண்டு, ஆனால் டிக்கட்டின் உதவியின்றி, தன்னிச்சைப்படி தென்னாட்டுத் திருக்கோயில்களைத் தரிசனம் செய்தார். கட்டுப் பாட்டுக்கும் சோறுக்கும் பெயர்போன பிள்ளை இதிலும் ஒரு நியதி ஏற்படுத்திக் கொண்டிருந்தார். அந்தந்த ஊரில் உற்சவம் நடக்கும்போதுதான் அவர் அங்கு போய் இறங்குவார். அவர் இல்லாமல் நடந்த உற்சவங்களை விரல் விட்டு எண்ணிவிடலாம். அங்கங்கே, கண்டவற்றை — கிடைத்தவற்றை உண்டு, உண்டதை அசை போட, லோகல் பண்டு சத்திரம், பச்சையப்ப

வி சந்திரத்துச் சாய்மானத் திண்ணை
யைகளைத் துணையாகக் கொண்டு ஒரு
றுகப் பிரயாணத்தை முடித்தார். குளிர்
க்கள், அவை தரும் களிர்ந்த வெப்பிய,
ய சாசமான கனிகள், எல்லாவற்
றும் மேலாக ஓடையிலே வறுகின்ற
கவைத் தண்ணீர் — இவை வாய்க்கு
ண்டிய கவனம் கிடைக்காத காலத்தில்
ளையின் பசியை ஓரளவுக்குப் போக்கப்
ிறும் உதவின.

பியர்க்க விறுவிறுக்க ஓடி வந்து, பாம்பு
ால் வளைந்து நெளிந்து நிற்கும் 'க்யூ'
சையில் நின்று டிக்கெட் வாங்கிக்
ண்டுதான் பிரயாணம் செய்வோம்
து அடம் பிடித்து, அதைக் காரியத்
ும் செய்து காட்டும் பொதுஜனச்
ிமை அவருக்குக் கட்டோடு பிடிக்காது.

ண்டி நின்றவுடன் அவசரமாக இறங்
கூட்டத்தில் மோதி இடித்துக்கொண்டு
ளியே போகும் சில ஆசாமிகளைப்
வின்றி, சாவதானமாக, டிக்கெட் பரி
ாதகர் உள்பட எல்லோரும் போன
றுதான் வெளியே தலைகாட்டுவார்
ளைவாள்.

அவருக்கு வேண்டியதெல்லாம் ஏற
ங்கச் சௌகரியமாகக் கதவோரத்தில்
ா, அல்லது காலவலி கண்டால் குந்திக்
ண்டு உட்கார ஒரு முக்கால் இடம்;
வளவுதான். இறங்கவேண்டிய இடம்
ல் இறங்கியும், இறங்க வேண்டாத சில
டங்களில் இறங்கி
டப்பட்டும், ஏற
்த இடங்களில் மறு
தொத்திக் கொண்
ஒரு வகையாகத்
ன்னிச்சிய சுற்றுப்
யாணத்தை முடித்
கொண்டு பிள்ளை
ன் வடகாட்டை
க்கிப் புறப்பட்டார்.

2

"அவசரமானாலும்
வனியமானாலும் பிரயா
ம் செய்யுங்கள்''
து போடப்பட்டி
விளம்பரங்களைப்
்த பின்னரே
ளைவாளுக்குத் தன்
யாணத்தின் 'அத்யா
யம்' விளங்கிற்று.



''யுத்த தளவாடங்கள் போக உதவுங்கள்; சேனை செல்ல உதவியளியுங்கள்'' என்றெல்லாம் சொல்லிய காலத்தில், தான் யுத்த சேவைக்குத் தன்னாலான தடங்கல்கள் செய்யாதிருப்பதே பெரிய உதவி என்று பிள்ளைவாள் நினைத்தார். மெதுவாக அவர் புனா நகரம் வந்து சேர்ந்ததும், அங்கு உறங்கிக் கிடந்த தமிழர்களைத் தட்டி யெழுப்பினார். அதாவது, 'சங்கு கொண்டு ஊதினார்.' 'தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செய்தார்.' 'இமய வெற்பு மோத'த் தமிழிசைகள் பாடினார். சைவ வைஷ்ணவ பேதத்தை நீக்கி, 'சங்கம் சங்கரா, சிதம்பரம் நடராசா!' என்று அறை கூவி யழைத்துத் தமிழர்களின் குல தெய்வங்களை நினைவுபடுத்தினார்.

இவைகளை யெல்லாம் கொஞ்சமும் சுய நலமின்றிக் கைம்மாறு வேண்டாக் கார் முகிலைப்போல் செய்த பிள்ளையவர்களை, புனா தமிழ் சமூகம், அவர் எதிர்பார்த்தபடி நல்வரவு கூறி, வரவேற்பு இதழ் படித்துக் கொடுத்து, விழா கொண்டாடாவிட்டாலும் ஏதோ கையாலானதைக் கொடுத்து உதவியது.

ஒன்று சொல்ல மறந்துவிட்டேனே! வடநாடு வந்த பிள்ளை தனியே வராமல், திருப்பதி மலையில் தங்கி வந்தகாலை, அங்கே இந்திராபுரிக் கூட்டத்தை வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்த ஓர் ஆண் பிள்ளையிடம் இரக்கம் கொண்டு, அவனையும் தன் திக் விஜயத்தில் சேர்த்துக்கொண்டு வந்தார்.

ஆண் பிள்ளைக்குச் சுமார் இருபத்தெட்டு வயதிருக்கலாம். முறுக்கேறிய காளைப் பருவம் தான். ஆனாலும் சோம்பலின் அவதாரம். 'ஒடுகாலி' என்பது அவனுக்குச் சொந்த ஊரில் வழங்கும் இடுகுறிப் பெயர். இயற் பெயர் ஞானசம்பந்தன். எதிர் பார்த்த முதலிரண்டு எழுத்துக்கள் அவனுடைய குணங்களில் சூன்யமாகவே, அவைகளை நீக்கி, 'சம்பந்தன்' என்றே எல்லோரும் சொல்ல, அதுவே நிலைத்துவிட்

டது. அவனும் இது குறித்துக் கவலை கொண்டதாகத் தெரியவில்லை.

கூண்டு வண்டிக் காளைகள்போலக் கூடிய இவ்விருவரும் புறு நகரிலே, 'உலகத்துக்கொரு புதுமையாக ஒப்பிலாத சமுதாயம்' வாழும் இடம் ஒன்றை நண்ணினர். அது 'காட்சேல் மகராஜ் சத்திரம்' என்னும் இடம்தான். வெளியுலகிலே வகுப்புவாதம் காரணமாக எழும் கலவரங்களுக்கும் மாகாணப் பிரிவினை காரணமாக ஏற்படும் பூசல்களுக்கும் இடமிருக்காது அங்கே. புஷ்டு மொழி பேசும் எல்லைப்புறத்துப் பத்தாணியனும், தீந்தமிழ் பேசும் செந்தமிழ்ச் செல்வனும், 'லலி தெலுங்'கில் உறவாடும் ஆந்திர சகோதரனும் ஒருவருக்கொருவர் பரிச்சயமாகும்—கலந்து பழகும்—புண்ணிய பூமி. வறுமையின் தாயகம். ஆகவே. அங்கே வேறுபாடுகளுக்கு இடமேது? அவர்களுக்கெல்லாம் ஒரேவிதமான பிரச்னை. எனவே சண்டைக்கு இடமில்லை. கூட்டு முயற்சியே தேவை.

அன்று மாலை சூரியனும் மறைந்த வெளியிலே, நீல வானத்திலே, தன்னை மறந்து பறந்த பறவைகளெல்லாம் கூட்டை நோக்கிச் சென்றன. நமது பரதேசிப் பறவைகளிரண்டும் இருட்டு முன் கூட்டை அடையவேண்டிச் சத்திரத்தை அணுகின. அவர்களுக்கு அன்றைய உணவாகக் கிடைத்தது, தமிழ்நாட்டுத் தமிழர்களுக்குப்



சிப்பாய்:—என்ன ஜோஸியரய்யா! நல்ல பலனே சொல்ல மாட்டேங்கறியே?
ஜோஸியர்:—இவ்வளவு நல்ல பலன் சொல்லியிருக்கேனே! நீ கொடுத்த நாலணாவுக்கு இன்னும் எவ்வளவு சொல்லுவாங்களாம்?

பழக்கமில்லாத, ஆனால் வெளியே வா தமிழர்களுக்குப் பழகிப்போன சப்பாத்தி தான். ஏதோ ஒரு மாதிரியாகச் சாப் கடைபெற்றது. முன்னிலவு நேரத் தழைத்துப் படர்ந்த ஆலமரத்தடியில் அமர் இருவரும் நடுவே விட்டுப்போன ச ஷணையை மீண்டும் தொடங்கினர்.

"உம்......அப்படி வச்சேனே, அன்னை லிருந்து இன்று வரைக்கும் வீடு எ ஆச்சு, வாசல் என்ன ஆச்சு, பயல் எ ஆனான் என்கிற விவரம் தெரியா போச்சு, தம்பி! எல்லாத்தையும்விட வெள்ளாடு இருந்திச்சே, அதைப் பி வா மனசு கேட்கல்லே; என்னே காலத்தோட தோசம் நம்ம நிலைமை இப் ஆச்சு!" என்றார் பிள்ளை.

"சாமி, இதோ பாருங்க! எப்போ வழியா நிலை முழுகிட்டு வந்தாட்டுக்கே அதைப் பற்றிய சங்காத்தியம் இனி உதவாது. கவலைப்பட்டு ஆவதென்னக் எனுங்க, அதிருக்கட்டும். நேற்று ந கவலைப்பட்டுக் கொண்டிருந்ததற்கு இ நாம் சுகமா இங்கே வந்து சேர்ந்தி ரொம்ப சந்தோசம். எங்கே பிடிபட் போயிடுவமோன்னு பயப்பட்டுக்கிட்டி தேன். இருந்தாலும் உங்களுக்குத் தை யம் ஜாஸ்தி!" என்றான் சம்பந்தன்.

"அட, போ தம்பி! நீ ஒரு பிச் போல! அவன் என்ன ஐயனாரா. மைத் தொட! நாம் என்ன செய்யறோ 'இதுக்கு'ன்னுதான் இதங்கிக்கிறோ நீ இதுக்கே சாகிறயே, இன்னும் பாக் காலத்தைப் போக்கணுமே! போறப்போ கல்கத்தா வழியா போகலா ரோசனை பண்ணிக்கிட்டிருக்கேன். என்னடான்னு......?"

"ஐயோ அப்பா! கல்கத்தாவா? அங் தான் ஒரே கலேபரமா இருக்காமே, அங் ஏன் சாமி போகணும்?"

"அப்படியில்லே தம்பி! அங்கே க கல்லே இனப்பி பதினொரு மணிக்குள்ள நம்ம வேலையை முடிச்சுக்கிட்டா தொ தாயில்லை. அதுக்குமேலேதான் கலாட் தொடங்குமாம். அப்போ மட்டும் அவ அவுங்க இடத்திலே இருந்துக்கணுமா போய் வந்தவங்க சொல்றாங்க மேலும் நம்ம சனங்கள் அங்கே ரொ ஜாஸ்தியாம்!"

"எதுங்க, நம்ம பரதேசிங்களா?"

"இல்லேப்பா! அங்கே உள்ள நம்ம தமிழன்; வேலை பார்க்கிறவங்க!"

)த்தநுவாயில், தலையில் ஒரு சிறு மூட்
யுடன் ஒரு பெண்மணி சத்திரத்திலுள்
தான். வயது இருபதைக் கடந்தவள்.
திற்கேற்றபடி கட்டு தளராத சரீரம்.
ரம்தான் பூஜ்யம்—அதாவது, வர்தவள்
மையென்று சொல்கிறேன். ஆகவே பேச்
குப் பதிலாக அபிநயம் பிடித்தாள்.
வள் தனக்கொரு மூலையைப் பிடித்துக்
ண்டு தலைச் சுமையை இறக்கினாள்.
லோருடைய கண்களும் அவள் இருந்த
ம் திரும்பி அவளைப் பார்வையிட்டன.
நபர் அல்லவா, தொண்டர் திருக்
டத்திற்கு? மற்ற எல்லாக் கண்களும்
டும் தங்கள் வேலையைப் பார்க்கத்
ம்புகையில், இரு கண்கள்மட்டும் வைத்த
வாங்காமல் அவளையே வெறித்துப்
த்து மௌன பாஷை பேசின. இது,
வாளர் சம்பந்தன் அவர்கள் என்று
வும் வேண்டுமோ?

இது இற்க, பிள்ளையவர்கள் தம் பேச்சைத்
டக்கினர்

"அப்புறம் தம்பி, நாம் போறப்போ
த்தா பார்த்துவிட்டு, அப்படியே......"

"...............''

"ஏ, தம்பி! என்ன, அங்கனே வெறிச்ச
க்கிறே? இதைக் கேளு!"

"..........உம்.........!"

"அடெ, அது கெடக்கு, சனியன்!
ப்பா! எதுனாச்சும் கிளைச்சுக்கும்."

"ஒண்ணுமில்லே; மேலே சொல்
க!' என்றான் சம்பந்தன்.

இடையிடையே பேச்சில் விருப்பமில்லாத
ன், கண்ஜாடை மூலமாக 'கணக்குப்
ணினான்' ஊமையை.

"அப்பேன்! உன்னைப் பத்தி எனக்கு
ஒணும் தோணலே. நேத்து என்னமோ
ங்களை விட்டுப் பிரியமாட்டேன்; நீங்கள்
டுவிட்டுப் போனாலும் உங்களைத் தேடிப்
ச்சுச் சேர்ந்துக்கிடுவேன்' னு சொன்னே;
போ பார்த்தா மூனி பிதுங்க ஊமைச்
ய விளிக்கிறே' இதோ பாரு, நமக்கேன்
த வம்பு? ஒரு ஆளுக்குப் பிழைப்பே
லமா யிருக்கு; இதை வேறே கட்டி
த்துவிட்டு......"

"சேச்சே!......அப்படி யெல்லாம் ஒண்
ம் இல்லீங்க; சும்மா, வந்தவள் புதுசா
ாயிருக்குதேன்னு பாத்தேன். முன்னே
எங்கேயோ பார்த்தாப்போலே இருக்
சு....ஞாபகம்....அதனாலேதான்......"



"இவ்வளவு பெரிய பட்டணத்தில் சில்லறைக்குப் பஞ்சமாயிருக்கிறதே!"

"எத்தனை ரூபாய்க்கு உங்களுக்குச் சில்லறை வேண்டும்?"

"என்னிடம் ரூபாய் இருந்தால் சில்லறை எதற்குக் கேட்கிறேன்!"

"என்னவோ அப்பேன், நல்லதுக்குத்தான் சொல்றேன்; 'எப்போ ஒருதரம் எல்லாத்தையும் வெறுத்து வந்திட்டமோ, மறுபடி அந்த நினைவெல்லாம் கூடாது' ன்னு நீதானே எனக்குச் சொன்னே? இங்கே பாரு! வெட்டு ஒண்ணு, துண்டு ரெண்டா சொல்லிடு; என் கூட வர உனக்கு இஷ்டமா, இல்லையா?"

"என்ன சாமி, இப்படிக் கேட்கிறீங்க? உங்களை விடவா இதெல்லாம் எனக்கு ஒஸ்தி? கட்டாயம் நான் உங்க கூடப்பிள்ளையாய்த்தான் இருப்பேன்; ஆமாங்க!"

3

விடியற்காலை நான்கு மணிக்குப் பள்ளியெழுச்சிப் பாட்டுக்குப் பதிலாக மராட்டி தினசரி விற்கும் பையனின் அலறல் கேட்டுத் துயிலெழுந்தார் பிள்ளை. எழுந்தவுடன் அவர் முகத்தில் பட்டது அவர் வழக்கமாகப் பார்க்க விரும்பும் தென்னைமரம் அல்ல; சம்பந்தன் படுத்திருந்த காலி யிடம்! இரண்டாவதாக அவருக்குப் புரிந்தது, ஊமைச்சி அங்கு இல்லை. மூன்றாவதாகத் தன் மூட்டை இருக்கிறதா என்று பார்க்க, நல்லவேளையாக அது வைத்த இடத்தில்

இருந்து, அவருக்குப் போக இருந்த உயிரைக் காப்பாற்றியது. ஆனாலும் சந்தேகம் தீரவில்லை; மூட்டையை அவிழ்த்துச் சாமான்களைச் சரிபார்த்துக் கொண்டார்.

"படுபாவி! அந்தமட்டும் மூட்டையை அடிச்சுக்கிட்டுப் போகாமல் இருந்தானே! நன்றி கெட்ட பய! தலையும் இருந்துக் கிட்டல்ல கிளம்பிட்டான்! ஒரு வார்த்தை சொல்லிக்கிட்டுத்தான் போகக் கூடாதா? எனக்கு அப்பவே தெரியும், இது நடக்கலாம்னு!' என்றது அவர் மனம்.

உடனே, "பாவம்! வயசுப் புள்ளே! இருக்காதா? ஏதோ எங்கேயாச்சியும் கடவுள் புண்ணியத்திலே நல்லா இருந்தால் சரி!" என்று கூடவே அனுதாபமும் பட்டது அவர் மனம்.

'மனம் குரங்கு' என்று தெரியாமலா பெரியோர்கள் சொல்லி வைத்தனர்?—பிள்ளையவர்களின் உள்ளத்தில் சிந்தனை சுரந்தது.

ஒருவரை நம்பி ஒருவர், குறிப்பாக, ஆணை நம்பிப் பெண்ணும், பெண்ணை நம்பி ஆணும் வாழும் முறைமை — இரு உள்ளங்களின் ஒட்டுதல் தன்மை — கடவுளின் சிருஷ்டி யற்புதம் — அவருக்கு லேசாக விளங்கிற்று. கடமையைச் செய்வதினின்றும் நழுவுவது பாவம் என்றும் பட்டது. தன்னுடைய குடும்பப் பொறுப்பை உதறித் தள்ளிவிட்டு, 'தேடிச் சோறு நிதம் தின்று, பல சின்னஞ் சிறு கதைகள் பேசி, மனம் வாடித் துன்பம் மிக உழன்று' மனம்போன போக்கில் வாழ்ந்து வரும் வேடிக்கை வாழ்வை அவர் மனம் வெறுக்கத் தொடங்கிற்று. மனைவி, பிள்ளை, வீடு, வெள்ளாடு, அதன் குட்டி—இவ்வளவும் இருக்கும்போது 'பரதேசி' என்று தன்னைச் சொல்லிக் கொள்ள அவர் மனம் இடம் தரவில்லை.

"அடே! சொந்த வீடுதான் இருக்கே அதை விற்றுக் கிரயமாக்கிக் கடனை அடைச்சுட்டு. இனிமேயாலும் புத்தி தெரிஞ்ச குடும்பம் நடத்தினு பிழைக்காமலா போயிடுவோம்? இந்த யோசனை அன்றைக்கே தெரியாமற் போச்சே!' என்று அங்கலாய்த்தது அவர் மனம். எல்லாவற்றிற்கும் மேலாக அந்த வெள்ளாட்டுக் குட்டியைக் காணுவதில் உள்ளம் விருப்பம் கொண்டது. கிளம்பி விட்டார், தெற்கு நோக்கி, கடைசி டிக்கெட்டில்லாப் பிரயாணத்தில்! காசிமா நகரம்கூட வருத்தத்தில் ஆழ்ந்திருக்கும்,

பார்க்க விருந்த பக்தரின் பாததூளிகள் வில்லையே என்று!

* * *

ஆலமரத்தடியில் ஞானோதயம் பெ பிள்ளையவர்கள் ஒரு நாள் இரவு ஒரு அறிய முடியாதபடி தலையை முக்காடி கொண்டு ஊர்ப் பிரவேசம் செ போதாக, தன் வீட்டை மடைக் அங்கே வேற்று மனிதர்களைக் க பிள்ளைக்கு, 'தன் வீடு என்னவாயிற் என்ற கேள்வி எழுந்தது.

மெதுவாக அவர்களிடம் செ "இங்கே சுப்பையா பிள்ளை இருந்த அவரு இப்போ எங்கே இருக்காரும் என்றார்.

"அட! அவர் ஊரை விட்டு ஓடிப் எத்தக் காலம் ஆவுது! அவுக சம்ச வீட்டை வித்துட்டு இப்போ........."

அந்த ஆசாமி சொல்லி முடிக்கு அங்கிருந்து கிளம்பிவிட்டார் பிள்ளை. அவருக்கு ஊரில் என்ன வேலை?

திரும்பவும் அஞ்ஞாதவாசம் போகத் மானித்துப் பிள்ளை ஊரை விட்டு வெ நடந்தார். போகும் வழியில் அவர் க குறுக்கிட்டது, 'மினுக், மினுக்' கெ விளக்கு வெளிச்சம் தென்படவே, ' கடை வைத்திருக்கிறார்கள்?' என்று அ ஆவல் கொண்டார். மெதுவாக அ சென்று எட்டிப் பார்த்தார். கீ கம்பி யொன்றில் தொங்கவிடப்பட்டி லாந்தர் காற்றில் அசைந்து அசை ஆடிற்று. முறுக்கு கோர்த்த வளையம் ஒ கல்லாப் பெட்டியில் உட்கார்ந்திரு ஆசாமியை மறைத்தது. எனவே அ அருகில் சென்று, "யார் கடையிலே என்று அதட்டும் குரலில் கேட்டார்.

"ஏன்? இருக்கிறது தெரியல்லையா என்று கேட்ட வண்ணம் விளக்கு வெ சத்திற்கு நேராகத் தலையை நீட்டி அவ்வுருவம்.

"அஞ்சலை!" என்றார் பிள்ளை, கடந்த ஆச்சரியத்துடன்.

"என் தொரையே! திரும்பி வ களா?" என்றாள் அஞ்சலை ஆதரத்துட

"அப்பா!" என்று தாவிக் குதி வந்து கட்டிக் கொண்டான் பி கணேசன்.

"ம்...ம்...மே!" என்று மூகமன் க தன் எசமானை வரவேற்றது, கடைவாச கட்டப்பட்டிருந்த வெள்ளாட்டுக் குட்டி.



மாட்டுத் திருடன்

மாலு

மேலத்தூரில் ஒவ்வொரு மாதக் கடைசியிலும் பெரிய மாட்டுச் சந்தை ஒன்று நடக்கும். அதற்காகக் கிராமங்களிலிருந்து மாடுகளை ஓட்டிக் கொண்டு வரும்போது, வழியில் சில மாட்டுத் திருடர்கள் எப்படியோ மாடுகளைத் திருடிக் கொண்டிருந்தார்கள்.

அந்த மாட்டுத் திருடர்களைப் பிடிப்பதற்கு எவ்வளவோ முயன்றும் அரசாங்கத்தாரால் முடியவில்லை. கடைசியில் மாட்டுத் திருடர்களைப் பிடித்துக் கொடுப்பவர்களுக்கு ஆயிரம் ரூபாய் பரிசு அளிக்கப்படும் என்று அவர்கள் பறைசாற்றினார்கள்.

• • •

மேலத்தூருக்கு ஐந்து மைல் தூரத்தில் உள்ள ஒரு கிராமத்தில் முருகன் என்று ஒரு குடியானவன் வசித்து வந்தான். தான் அரும்பாடு பட்டுச் சேர்த்து வைத்திருந்த இருபது ரூபாயைக் கொடுத்து அவன் பசுங் கன்று ஒன்று வாங்கி அருமையாக வளர்த்து வந்தான். அந்தக் கன்று இப்பொழுது பெரிய பசுவாகிவிட்டது. அந்தப் பசுவைச் சந்தையில் கொண்டு போய் விற்றுவிட்டுத் தன் மனைவி வேலாயிக்கு ஒரு பட்டுச் சேலை வாங்கித் தருவதென்று அவன் தீர்மானித்தான்.

மேலத்தூர் மாட்டுச் சந்தைக்குத் தன்னுடைய மாட்டை ஓட்டிக் கொண்டு சென்றபோது, வழியிலிருந்த மாந்தோப்பில் இரண்டு முரடர்கள் உட்கார்ந்திருந்ததை அவன் கண்டான். அவர்களைப் பார்த்தவுடன் முருகனுக்கு மனதுக்குள் பயமாக இருந்தாலும் தைரியமாக மாட்டைப் பிடித்துக் கொண்டு அந்த வழியே சென்றான். அவனைக் கண்டதும் அந்த இரண்டு முரடர்களும் எழுந்து, "என்னுங்க, இந்த மாடு சந்தைக்குப் போகிறதா? என்ன விலை வந்தால் கொடுப்பீங்க?" என்று எதை எதையோ சம்பந்தமில்லாத விஷயங்களை யெல்லாம் கேட்டு, முருகனிடம் பேச்சுக் கொடுத்துக் கொண்டே வந்தனர்.

இவ்வாறு அவர்கள் பேசிக்கொண்டு வரும்போது, மாந்தோப்புக்குள்ளிருந்து இன்னொருவன் வந்தான். அவன் முருகனுக்குத் தெரியாமல் மாட்டை அவிழ்த்து விட்டுவிட்டு, அந்தக் கயிற்றைத் தன்னுடைய கழுத்தில் கட்டிக் கொண்டு மாடு போலவே முருகனின் பின்னால் சென்றான்.

சிறிது தூரம் சென்றவுடன் முருகனுடன் பேசிக்கொண்டு வந்த இருவரும், "சந்தையில் வந்து உங்களைப் பார்க்கிறோம்" என்று சொல்லி விட்டுச் சென்றனர்.

மாந்தோப்பைத் தாண்டியதும் ஒரு கிராமம் வந்தது. அங்கே மாடு இழுப்பதுபோல் தோன்றவே முருகன் திரும்பிப் பார்த்தான். அவனுக்குத் தூக்கிவாரிப் போட்டது. மாட்டைக் காணவில்லை; அதற்குப் பதிலாக ஒரு மனிதன் நின்று கொண்டிருந்தான்!

முருகனுக்கு ஒன்றுமே புரியவில்லை; அவன் அந்த மனிதனை வெறித்துப் பார்த்தான்.

"என்ன அப்படிப் பார்க்கிறீங்க? நான் மனிதன்தான்! உங்களுக்குப் புண்ணியம் உண்டு; என்னை அவிழ்த்து விட்டு விடுங்கள்!" என்றான் அந்த மனிதன்.

"நீ மனிதன்தான் என்றால் என் மாடு எங்கே?" என்று முருகன் ஆத்திரத்துடன் கேட்டான்.

"நான் போன ஜன்மத்தில் மனிதனாகத்தான் இருந்தேன். ஒரு ரிஷியின் ஆசிரமத்தில் வேலையாயிருந்து அவருடைய பசுமாட்டை மேய்த்துக் கொண்டிருந்தேன். ஒரு நாள் மாட்டை மேய விட்டுவிட்டு நான் தூங்கி விட்டேன். அப்பொழுது மாட்டைப் புலி அடித்துக் கொன்று விட்டது. அதனால் கோபங் கொண்ட ரிஷி, என்னை 'பசுவாகப் போகக்கடவது' என்று சபித்துவிட்டார். 'எனக்குச் சாபவிமோசனம் கிடையாதா?' என்று கேட்டு நான் அழுதேன். 'உன்னை யாராவது ஒரு உத்தமன் வளர்த்து, தானே விற்பதற்காகச் சந்தைக்கு அழைத்துக் கொண்டு செல்லும்போது உன் சாபம் தீர்ந்து நீ மனிதனாகி விடுவாய்' என்றார்!" என்று அந்த மனிதன் சொன்னான்.

"அப்படியா? நீ மாடு இல்லையா? இருபது ரூபாய் கொடுத்துப் பசுமாடு என்று வாங்கிப் படாத பாடு பட்டு வளர்த்தேனே! கடைசியில் இப்படி யாகிவிட்டதே, என் மனைவிக்கு நான் என்ன பதில் சொல்லுவேன்?" என்று முருகன் அழுதான்.


அவனுடைய அழுகைச் சத்தத்தைக் கேட்ட அந்தக் கிராமத்து மனிதர்களில் சிலர் விஷயம் என்னவென்று விசாரித்தனர். முருகன் அவர்களிடம் எல்லாவற்றையும் சொன்னான். இதைக் கேட்ட அந்த ஊர்க்காரர்கள் இதில் ஏதோ சூது இருக்க வேண்டும் என்று கருதி, அந்த மனிதனைப் பிடித்துப் போலீஸாரிடம் ஒப்படைத்தனர்.

போலீஸார் "ரிஷி ஆசிரமத்தில் மாடு மேய்த்தவனா நீ?" என்று கேட்டு 'பளீர், பளீர்' என்று அவன் கன்னத்தில் நாலு அறை கொடுத்த, "உண்மையைச் சொல்லிவிடு; இல்லாவிட்டால் இன்னும் உதை கிடைக்கும்" என்று அவனை மிரட்டினார்கள்.

உதை தாங்காமல் அவன் உள்ளதைச் சொல்லி விட்டான். நாங்கள் தான் இந்தப் பக்கத்திலே இதுபோலப் பல வழிகளில் மாடுகளைத் திருடி வந்தோம் என்று சொல்லி, மற்ற திருடர்கள் இருக்கும் இடத்தையும் அவன் சொல்லிவிட்டான்.

மாட்டுத் திருடனைப் பிடித்துக் கொடுத்தான் என்பதற்காக முருகனுக்கு அரசாங்கத்தாரிட மிருந்து ஆயிரம் ரூபாய் பரிசு கிடைத்தது.

வேலாயிக்கு ஒன்றுக்கு இரண்டாகப் பட்டுச் சேலை வாங்கிக் கொடுத்து அவன் திருப்தியடைந்தான்.



என்ன 'போல்' பண்ணியும் பந்து 'விக்கட்'டைத் தாக்காமற் போகவே, மிகவும் கோபமடைந்த கிரிக்கெட் ஆட்டக்காரர் ஒருவர் எல்லோரும் போனபிற்பாடு, 'விக்கட்' அருகே வந்து நின்று இப்படிச் செய்து ஆனந்தப்படுகிறார்!

மிகவும் ருசிகரமானது மாத்திரமல்ல- இது நல்லது !



தவிர ஜீவசக்தியளிக்கும் விட்டமின்கள் நிறைந்தது

போர்ன்-வீட்டாவிலுள்ள சேர்க்கையான சாக்லெட் வாசனை இளையோர் முதியோர் அனைவராலும் விரும்பப்படுவது. அதிலுள்ள கால்ஷியமும் விட்டமின்களும் உங்கள் எலும்புகளை நன்கு வளரச்செய்து புதிய ஆரோக்யமும ஜீவசக்தியும ததும்பச் செய்கின்றன.

காட்பரீஸ்

போர்ன்-வீடா

கால்ஷியம், விட்டமின்கள் நிறைந்தது.

அறிகுறி

காலக்ஷேபம்

என்ன கஷ்டம்?

ஒருவர்:—ஸார், ரேடியோவின் மூலம் காது கேளாதவர்களுக்குக் காது கேட்கும்படி செய்துவிட முடியுமாமே? உங்களுக்குத் தெரியுமா?

மற்றவர்:—அட இராஜசாரமே! காது கேளாதவர்கள் எல்லாரும் கொடுத்து வைத்தவர்கள் என்று எண்ணிக் கொண்டிருந்தேனே! அவர்களுக்குங்கூடவா இந்தக் காலத்து ரேடியோவைக் கேட்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிட்டது!

★

சரியான காரியம்!

ஹோட்டலில் சாப்பிட்டுவிட்டு வந்தவர் (இளிப்புடன்):—ஸார்! மறந்து என் பர்ஸை வீட்டில் வைத்துவிட்டு வந்துவிட்டேன். மன்னிக்கணும், அப்புறம் கொண்டுவந்து கொடுத்துவிடுகிறேன்.

ஹோட்டல் முதலாளி:— அதற்கென்ன, பரவாயில்லை! ஞாபகத்துக்காக உங்கள் பெயரை எதிர்ச் சுவரில் எழுதி வைத்து விடுகிறேன். நாளைக்குக் கொண்டு வந்து கொடுத்து விடுங்கள்;

சாப்பிட்டவர்:—ஸார், அப்படிச் செய்தால் என் நண்பர்கள் எல்லோரும் பார்த்துக் கேலி செய்வார்களே!

முதலாளி:—அதற்காக நீங்கள் கவலைப் படவேண்டாம்; உங்கள் அங்கவஸ்திரத்தை அதன்மேல் மாட்டி விடுவோம். அப்பொழுது தெரியாதல்லவா?

★

பயமில்லை!

நர்ஸ்:—டாக்டர் ஸார்! இந்த ரோகியைப் பச்சைத் தண்ணீரில் ஸ்நானம் செய்யச் சொன்னீர்களாமே! நிமோனியா ஜுரம் வந்துவிட்டால்?

டாக்டர்:—வந்தால் பரவாயில்லை; நான்தான் நிமோனியா ஜுரத்துக்குச் சிகிச்சை செய்வதில் பிரசித்தி பெற்றிருக்கிறேனே!

கல்யாணந்தான்!

ஒருவர்:—எங்கே ஸார்! அவசரமாகப் போகிறீர்கள் போலிருக்கிறதே!

மற்றொருவர்:— கல்யாண வீட்டுக்குப் போகிறேன், ஸார்.

ஒருவர்:—யாருக்கு ஸார் கல்யாணம்?

மற்றொருவர்:— யாருக்கும் கல்யாணம் இல்லை, ஸார்! எங்க ஆபீஸில் குமாஸ்தாவாக இருக்கும் கல்யாணம் வீட்டுக்குப் போகிறேன், ஸார்!

★

முடியாதுதான்!

"என் அப்பா, அவனையே நினைத்து உருகுகிறாய்? அவன்தான் உன்னை மணந்து கொள்ள முடியாது என்று சொல்லி விட்டானே! நீ அவனை மறந்துவிடுவது தான் நல்லது!"

"அதுதான் முடியாத காரியம், அப்பா! நான்தான் ஞாபகசக்தி மிகுந்தவள் என்று பரிசுகளெல்லாம் வாங்கி யிருக்கிறேனே!"

★

வருந்தாதே!


குற்றவாளி:—எஜமானே, நான் இதற்கு முந்தி ஜெயிலுக்கே போனதில்லீங்க!

நீதிபதி:— அழாதே, அப்பா! இப்பொழுது உன்னை அங்கேதான் அனுப்பப்போகிறேன்!

★

சரிதான்!

"என்டா ராமு, உன் பெயரை மாற்றிக் கோபாலன் என்று வைத்துக்கொண்டு விட்டாயாமே, ஏன்?"



"ஆமாம், போனவாரம் டிராமில் சென்று கொண்டிருந்தபோது ஒரு பவுன்டன் பேனாவைக் கண்டெடுத்தேன். அதிலே 'கோபாலன்' என்று போட்டிருந்தது. அதனாலேதான் என் பெயரை மாற்றிக் கொண்டேன்!"



மாலை நேரம். குடியானவர்கள் தத்தம் கழனிகளை விட்டு வீட்டுக்குப் புறப்பட்டு விட்டார்கள். 'கடக், கடக்' என்றும், 'லொடக், லொடக்' என்றும் ஒற்றை மாட்டு வண்டிகளும் இரட்டை மாட்டு வண்டிகளும் தேய்ந்த பாதைகளில் உருண்டு சென்றுகொண்டிருந்தன. மாட்டுக்காரப் பையன்கள் ஆடலும் பாடலுமாக ஆட்டு மந்தைகளையும், மாட்டு மந்தைகளையும் ஓட்டிக்கொண்டு சென்றார்கள்.

அதோ, 'ஜல்...ஜல்...ஜல்...' என்ற ஓசையுடன் இரண்டு எருதுகள் கம்பீரமாகத் தலையை ஆட்டிக் கொண்டு வந்து கொண்டிருக்கின்றன. அந்த எருதுகளுக்குப் பின்னால்......?

யார், வேலனா? ஆம், வேலனேதான்! ஆஹா, அவன்தான் என்ன அழகு! காளையோடு காளைபோலல்லவா வருகிறான், அவன்! ஒரு வேளை, 'தமிழன் என்று சொல்லடா, தலை நிமிர்ந்து நில்லடா!' என்ற பாட்டைப் படித்துவிட்டுத்தான் அவன் அப்படி நடந்து வருகிறானோ! அல்லது அந்தப் பாட்டே அவனைப் பார்த்துத்தான் எழுந்ததோ!

அது சரி; ஏன் இன்று அவனுக்கு மட்டும் அவ்வளவு ஆனந்தம்? அவன் ஏன் அடிக்கடி எதையோ நினைத்துப் பெருமூச்சு விடுகிறான்? அந்தப் புன்முறுவல் ஏன் அவன் உதடுகளில் அடிக்கடி மின்னி மறைகிறது? சாதாரணமாக, குடியானவர்களெல்லோரும் வேலையை விட்டு வீட்டுக்குப் போகும்போது சோர்வுடன் அல்லவா போவார்கள்? இவனிடம் மட்டும் ஏன் அந்தச் சோர்வைக் காணோம்?

சரி, சரி; நாமும்தான் அவன் பின்னால் கொஞ்சதூரம் போய்ப் பார்ப்போமே!

தூரத்திலிருந்து ஏதோ குரலோசை வருகிறதே! அந்தக் குரலோசையில் லயித்த வண்ணமல்லவா அவன் நடக்கிறான்!—என்ன, பாட்டா அது! யாரோ ஒரு பெண்ணல்லவா அந்தப் பாட்டைப் பாடுகிறாள் போலிருக்கிறது!

"வள்ளிக் கணவன் பேரை
வழிப் போக்கன் சொன்னாலும்
உள்ளம் குழையுதடி—கிளியே!
ஊனும் உருகுதடி!"

வள்ளிக் கணவன் பேரைச் சொன்னால் இவளுக்கு என்ன வந்தது? அவன் பெயரைக் கேட்டால் இவளுடைய உள்ளம் ஏன் குழைகிறது?

ஒரு வேளை இவளுக்கும் நம் வேலனுக்கும் ஏதாவது காதல், கீதல்......?

அப்படித்தான் இருக்கவேண்டும். இல்லாவிட்டால் வேலனைக் கண்டதும், 'உள்ளம் குழை...யுதடி!' என்ற கடைசி அடியை அவள் ஏன் அப்படி 'லபக்'கென்று விழுங்கி விடவேண்டும்?

"வேலா!"

"வள்ளி!"

அவ்வளவுதான்; எதிரேயிருந்த சோலையை நோக்கி அவன் துள்ளி ஓடுகிறான்; அவளைப்

பின்பற்றி அவனும் குதித்து ஓடுகிறான். இருவரும் கண்பார்வையிலிருந்து மறைகின்றனர்.

வழியில் நிறுத்தி வைக்கப்பட்ட இரண்டு காளைகளும், "அட, பகவானே! இன்னைக்கு எவ்வளவு நேரமோ!" என்ற ஏக்கத்துடன் பெருமூச்சு விட்டுக்கொண்டே ஒன்றையொன்று பார்த்துக்கொள்கின்றன.

அடேயப்பா! அவர்களுக்கு நேரம் போவதே தெரியாதோ! தினசரி அப்படிப் பேசுவதற்கு அவர்களுக்கு என்னதான் விஷயம் இருக்குமோ!

இதோ, சோலையை விட்டு வெளியே வந்த அவர்கள், ஒருவரை விட்டு ஒருவர் பிரிகின்றனர். வேலனைத் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே வள்ளி தன் வீட்டை நோக்கி நடக்கிறாள். வேலன் அவளையே பார்த்துக் கொண்டு நின்ற இடத்திலேயே நிற்கிறான்.

சோலைக்கு வெளியே நின்றுகொண்டிருந்த இரண்டு எருதுகளும், "போதும், வா அப்பா! கழுத்து சளுக்கிக்கொள்ளப் போகிறது! இதோடே அவளை நீ பார்க்கவே போவதில்லையோ? — அப்படிப் பார்க்கிறாயே!" என்று சொல்வதுபோல் தலையை ஆட்டி, 'கலீர், கலீர்' என்ற ஓசையை உண்டாக்குகின்றன. அடுத்த நிமிஷம் 'ஜல்...ஜல்...ஜல்' என்ற ஒலி அங்கிருந்து மறைகிறது.

*

காலை நேரம். தண்ணீர் எடுத்துக் கொண்டு போக ஆற்றங்கரைக்கு வந்த பெண்களெல்லாம் வீடு திரும்பிவிட்டனர். வள்ளி மட்டும் குடத்தை ஓரிடத்தில் வைத்துவிட்டு, 'திருதிரு' வென்று விழித்த வண்ணம் அவன் வரவை எதிர் நோக்கிக் கொண்டிருந்தாள். விஷமம் நிறைந்த அவளுடைய அகன்ற விழிகள் இங்குமங்கும் அலைந்து கொண்டிருந்தன. திடீரென்று ஒரு எண்ணம் அவள் உள்ளத்தில் பளிச்சென்று மின்னி மறைந்தது. அவ்வளவுதான்; அவள் இதழ்களில் ஒரு குறும்புப் புன்னகை அரும்பியது. அடுத்த வினாடி துள்ளி ஓடிச் சோளம் அடர்த்தியாக வளர்ந்திருந்த ஒரு கொல்லைக்குள் புகுந்து தன்னை மறைத்துக்கொண்டாள்.

"அவன் வந்து தன்னைக் காணாமல் என்ன பாடு படுவான்; எப்படி எப்படியெல்லாம் அலைவான்; கடைசியில் தான் இங்கு இருப்பதைக் கண்டு எவ்வளவு வெட்கப்படுவான்!" என்று நினைக்க நினைக்க, இனந்தெரியாத இன்ப உணர்ச்சி தோன்றி, அவள் உள்ளத்தையும் உடலையும் உலுக்கிக் குலுக்கிவிட்டது.

ஆனால் அவனோ வரவும் இல்லை; வந்து அவளைக் கண்டு பிடிக்க அலையவுமில்லை.

அவளுடைய மனம் கசந்துவிட்டது. கண்களில் கோபக் கனல் வீசிற்று. புற்றிலிருந்து நாகம் சீறிக் கொண்டு வருவது போல் சோளக் கொல்லையிலிருந்து வெளியே பாய்ந்து வந்தாள்.

"சீ! இனி வரட்டும் அவன்! அவனும் ஒரு மனுஷனும் மனுஷன்!" என்று வெறுப்புடன் சொல்லிக்கொண்டது அவள் உடைந்த உள்ளம். பிறகு "எனக்கென்ன, வேலை வெட்டி ஒன்றும் கிடையாதா — எங்கேயோ வந்து, எவனுக்கோ இப்படி காத்துக்கிட்டிருக்க?" என்று தனக்குத் தானே கேட்டுக் கொண்டாள்.

அந்தச் சமயத்தில் அவன் வந்தான்; அவள் பேசவில்லை!

"வள்ளி! பேசமாட்டாயா?"

அவள் அவனை ஏறெடுத்துக் கூடப் பார்க்கவில்லை. சட்டென்று அங்கிருந்த ஒரு கல்லின்மேல் உட்கார்ந்து, தன் கால்



பார்க்க வந்தவர்:—அடே அப்பா! எத்தனை புஸ்தகங்கள்! நீங்கள் சேர்த்து வைத்தீர், ஸார்!

பேராசிரியர்:—இவ்வளவு புஸ்தகங்கள் இருந்தும் என்ன பிரயோஜனம்? 'செக்' புஸ்தகம் ஒன்றுகூட இல்லையே, ஸார்!

களைக் கைகளால் கட்டிக் கொண்டாள்.

"வள்ளி! என்மேல் என்ன கோபம்! நான் என்ன தவறு செய்து விட்டேன்?"

அப்பொழுதும் அவள் வாய் திறந்து பேசவில்லை; தலையை மட்டும் வேகமாக ஆட்டிவிட்டு, வேறொரு பக்கமாக முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.



அவளுடைய மௌன ரகசியத்தை ஒருவாறு உணர்ந்த வேலன், "ஊம்" என்று அழுத்தம் திருத்தமாக ஒரு பெருமூச்சு விட்டுவிட்டு, "சரி, இனி நீ பேசினாலும் சரி பேசாவிட்டாலும் சரி, நான் உன்னுடன் பேசப்போவதில்லை!" என்று தானும் முகத்தை மற்றொரு பக்கம் திருப்பிக் கொண்டான்.

வழக்கம்போல் வழியில் நிறுத்திவைக்கப் பட்டிருந்த காளைகள் இரண்டும் இவர்களுடைய செய்கையைக் கண்டு, "இது என்ன, பைத்தியங்கள்!" என்று தங்கள் தலைகளைக் கீழே தொங்கவிட்டுக் கொண்டன.

ஒரு நிமிஷம், இரண்டு நிமிஷம், மூன்று நிமிஷம்—இன்னும் எவ்வளவு நேரம் அப்படி இருக்க முடியும்? வள்ளி மெல்லத் தலையைத் திருப்பினாள்; அதுவரை தன் தலையைத் திருப்பாமல் ஓரக்கண்ணால் அவளைப் பார்த்துக் கொண்டிருந்த வேலனும் சட்டென்று தலையைத் திருப்பினான். இருவரும் 'கலகல'வென்று சிரித்து விட்டனர்.

"நீ ரொம்பக் கெட்டவன்! எப்பப் பார்த்தாலும் நேரங்கழிச்சு நேரங்கழிச்சு வாரே! ஒரு நாளைக்காச்சும் சீக்கிரமா வந்தாயா, நீ?" என்று கேட்டாள் வள்ளி.

"நான் என்ன செய்வேன்? ராத்திரியெல்லாம் ஒரு வள்ளி வந்து என்னைத் தூங்கவிடாமல் பண்ணுகிறாள். அதனாலே காலையில் சீக்கிரமா எழுந்து வர முடிகிறதில்லை!" என்றான் வேலன்.

"அது யாரு, அந்த வள்ளி?" என்று திடுக்கிட்டுக் கேட்டாள் வள்ளி.

"வேறே யாரு, நீதான்!" என்று சிரித்துக் கொண்டே சொன்னான் வேலன்.

"நெசமாவா சொல்றே? அப்படின்னா நீ என்னை எப்பொழுதும் மறக்கவே மாட்டாயா?" என்று கேட்டாள் வள்ளி.

"நீ என்னை வெறுத்தாலும் சரி, 'இதென்ன, சனியன்! அட்டை மாதிரி ஒட்டிக்கிட்டு'ன்னு திட்டினாலும் சரி, நான் மட்டும் உன்னை மறக்கவே மாட்டேன்!" என்றான் வேலன்.

"சமாசாரம் தெரியுமா? நாம் இருவரும் எப்பப் பார்த்தாலும் தோப்புத் தொரவு, சாலை சோலையிலே சந்திக்கிறோம்னு யார் யாரோ அப்பாகிட்டே வந்து சொல்லுகிறாங்களாம். அதனாலே அப்பா என்னைக் கண்டா எரிஞ்சு விழறாரு! சில சமயம் 'வள்ளி! உன் அத்தை பட்டணத்திலேருந்து வரப்போறா. அவளோடு போய் நீயும் இரு'ன்னு சொல்றாரு. 'ஏன்?'னு கேட்டா, 'அத்தை மகனுக்குத்தான் உன்னைக் கலியாணம் செய்து வைக்கப் போறேன்'னு சொல்றாரு! எப்படியிருக்கிறது, கதை?" என்றாள் வள்ளி.

"அப்படிச் சொல்லு; உன் பாடு இனி யோகம்தான்! இந்தப் பட்டிக்காட்டான் கதிதான் அதோகதி! அடடா! பட்டணத்து மாப்பிள்ளை எவ்வளவு அழகாயிருப்பான்! அவன் ஜோக்கு என்ன, அவன் டக்கு என்ன......!' என்று படிப்படியாகப் பட்டணத்து மாப்பிள்ளையை வர்ணிக்க ஆரம்பித்து விட்டான் வேலன்.

"போதும் நிறுத்து! உன்னிடம் யாரும் வந்து, 'என்னைக் கொஞ்சம் கட்டிக்கோயேன், என்னைக் கொஞ்சம் கட்டிக்கோயேன்'னு கெஞ்சிக் கேட்கலே!" என்றாள் வள்ளி அலட்சியமாக.

வேலன் தன்னுடைய வர்ணனையை அத்துடன் நிறுத்திவிட்டு அவளை ஏறிட்டுப் பார்த்தான். சிறிது நேரம் அவர்களுக்கிடையே மௌனம் நிலவியது.

வள்ளி மீண்டும் ஆசை நிறைந்த கண்களுடனும் ஆவல் நிறைந்த உள்ளத்துடனும் வேலனை நோக்கி, "நீ ரொம்ப நல்லவன்; நீதான் எனக்குப் பிடிச்சிருக்கிறே! ஒரு நாள் உன்னைப் பார்க்காமல் இருந்து விட்டால் எனக்கு எப்படி இருக்குது, தெரியுமா? அடி ஆத்தாடி! நான் அதை எப்படிச் சொல்லுவேன்......?" என்று சொல்

...க்கொண்டிட வந்தவள், சட்டென்று தன் பேச்சை நிறுத்தி எதையோ நினைத்துக் கொண்டவள் போல, "ஆமாம், இன்னிக்கு என்ன கிழமை, தெரியுமோ இல்லையோ?" என்றாள்.

"இன்னிக்கா வள்ளி? இன்னிக்கு வந்து .....இன்னிக்கு வந்து........."

"நீயும் நாலு பேரைப் போல வெளியிலே உலாவறியே, நாளும் கிழமையும் தெரியாமே?"

"அது எப்படி எனக்குத் தெரியும்? வள்ளியைத் தவிர எனக்கு வேறே ஞாபகம் இருந்தால்தானே?"

"ஆமாம், ரொம்ப அழகுதான்! இன்னிக்கு என்ன கிழமை தெரியுமா?—வெள்ளிக்கிழமை!"

"வெள்ளிக்கிழமையா! அடடே, அம்மன் கோயிலுக்குப் போய் அம்மனைத் தரிசிக்க வேண்டுமே!"

"சரி, நேரமாகி விட்டது; நான் போக வேண்டும். இல்லாட்டி அப்பாரு என்னைத் தேடிக்கிட்டு வந்தாலும் வந்துடுவாரு!—நீ கோயிலண்டை வர மறந்துடப்போறே?" என்று எச்சரித்துவிட்டு, அவள் எழுந்து நடந்தாள்.


'ஜல்...ஜல்...ஜல்' என்ற ஒலி அங்கிருந்து கொஞ்சம் கொஞ்சமாகத் தேய்ந்து மறைந்தது.

*

நடு நிசி; வான வெளியில் மேகக்கூட்டங்கள் அலை அலையாகப் போய்க்கொண்டிருந்தன. கயிற்றுக் கட்டிலில் உட்கார்ந்த வண்ணம் அந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்த வேலன், வெறுப்படைந்து போர்வையை எடுத்துத் தூர எறிந்தான். எழுந்து, இப்படியும் அப்படியுமாக உலாவினான். அவன் மனம் கொஞ்சங்கூட நிம்மதியின்றி அலைந்து கொண்டிருந்தது; உலகமே இருண்டு தலைகீழாகப் புரளுவதுபோல் அவனுக்குத் தோன்றிற்று. "இனி வள்ளியைப் பார்க்க முடியாது; அவளைச் சந்தித்துப் பேச முடியாது!" என்று நினைக்கும்போதே அவன் உள்ளம் ஆயிரமாயிரம் சுக்கல்களாக வெடித்துவிடும்போலிருந்தது.

ஆம், இனிமேல் அவன் வள்ளியைப் பார்க்க முடியாதுதான். அவன் அவளைப் பார்த்து ஒருவாரமாகிவிட்டது. அன்றைக்கு அம்மன் கோயிலண்டை வருவேன் என்று சொல்லிவிட்டுப் போனவள் வரவேயில்லை. அதெப்படி வரமுடியும்? கந்தப்பன்—அவன்தான் வள்ளியின் தகப்பன்—அப்படி உத்தரவு போட்டுவிட்டானே! "நீ தோப்புத் தொரவுன்னு போகக் கூடாது; குளம் கோயிலுன்னும் போகக் கூடாது! எப்பொழுதும் எந்த நேரத்திலும் வீட்டிலேயேதான் அடைஞ்சு கிடக்கணும்; தப்பித் தவறி நீ எங்கேயாச்சும் வேலனைச் சந்திப்பதை நான் பார்த்துவிட்டால், அவ்வளவுதான்! உங்க ரெண்டு பேர் காலையும் ஒடிச்சி, எலும்பையெல்லாம் நொறுக்கி விடுவேன்!" என்று அவன் சொல்லியிருக்கிறானே! அப்படி இருக்கும்பொழுது வள்ளி எப்படி வேலனைச் சந்திக்க முடியும்?

பச்சாத்தாபம்



"உன்னைப் பார்க்காமல் என்னால் ஒரு நாள்கூட இருக்க முடியவில்லை!" என்று வள்ளி அன்று அழாக்குறையாகச் சொன்னதை நினைத்ததும், வேலனுக்கு அழுகை பீறிட்டுக்கொண்டு வந்தது; அடக்கி அடக்கிப் பார்த்தான்; முடியவில்லை. கடைசியாக ஏதோ ஒரு தீர்மானத்துக்கு வந்தவன் போல் திடீரென்று ஓட்டமும் நடையுமாகச் சென்றான். வரப்பையும், வாய்க்காலையும் தாண்டி வள்ளியின் வீட்டுக் கொல்லைப் புறத்தை நெருங்கினான். அங்கிருந்த வேலியைத் தாண்டிக் குதித்து மெல்ல அடிமேல் அடி வைத்துப் பின்கட்டுக்குள் நுழைந்தான்.

மாடத்தில் அகல் விளக்கு 'மினுக், மினுக்'கென்று எரிந்துகொண்டிருந்தது. அந்த விளக்கின் வெளிச்சத்தில் வள்ளி அழுத கண்ணும் சிந்திய மூக்குமாக உட்கார்ந்திருப்பதை வேலன் கண்டான்.

"வள்ளி!"

அவள் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தாள். தான் கேட்டது கனவா, நனவா என்று அவள் சுற்று முற்றும் பார்த்துக் கொண்டிருந்தபோது, மறுபடியும் வேலன் கதவு இடுக்கின் வழியே, "வள்ளி! கொஞ்சம் கதவைத் திற! நான்தான் வேலன்!" என்றான்.

அவ்வளவுதான்; வள்ளி குதித்தோடிச் சென்று கதவைத் திறந்து, "வந்து விட்டாயா!" என்று கத்திக்கொண்டே அவன் மார்பில் சாய்ந்து விசித்து, விசித்து அழுதாள்.

அடுத்த நிமிஷம் என்ன நினைத்துக் கொண்டாளோ என்னமோ, "நீ என்னை மறந்துடு. நீ என்னை மறந்துடு!" என்று அவள் உள்ளம் பதைபதைக்க, உடல் வியர்த்துக் கொட்டச் சொன்னாள்.

"ஊஹூம், நான் உன்னை மறக்கவே மாட்டேன்!" என்றான் வேலன்.

"மறக்காமே என்ன பண்றது? அப்பாரு உன்னையும் என்னையும் பார்த்தா......"

"அப்போ, நீ என்னை நிசமாவா உன்னை மறந்துடச் சொல்றே?...அப்படின்னு சரி; நான் ஒன்று நினைத்து வந்தேன்—அதிலே உனக்கு இஷ்டமில்லேன்னு......சரி, நான் போய் வருகிறேன்!" என்று துக்கம் தொண்டையை அடைக்கக் கூறிவிட்டு வேலன் திரும்பினான்.

வள்ளி சட்டென்று அவன் கையைப் பிடித்துக் கொண்டு, "எங்கே போறே, என்னை விட்டுவிட்டா?" என்று 'என்ன கேட்கிறோம்?' என்றே தெரியாமல் குழம்பிய உள்ளத்துடன் கேட்டாள்.

"உன்னை விட்டுவிட்டுப் போகக் கூடாதென்றுதான் வந்தேன்; நீதான் நான் சொல்றதைக் கேட்க மாட்டேங்கிறியே!—இதோ பார்! உங்க அப்பாரும் நம்ம ரெண்டு பேர் ஒன்றாயிருப்பதைப் பொறுக்க மாட்டாரு; ஊராரும் நம்மைப் பற்றி இல்லாததையும் பொல்லாததையும் சொல்லி எப்படியாச்சும் நம்மைப் பிரிச்சு வைக்கத்தான் பார்ப்பாங்க! ஆகையினாலே பேசாமே இந்த ஊரை விட்டுவிட்டு, நாம் ராவோடு ராவாய் எங்கேயாச்சும் ஓடிப் போய்ப் பொழைச்சுக்கிடலாம்னு நான் நினைக்கிறேன்; நீ என்ன சொல்றே?"

"அப்பாரு என்னைத் தாயில்லாக் குழந்தைன்னு எவ்வளவோ ஆசையாய் வளர்த்தாரு; அவரை விட்டுவிட்டு நான் எப்படி உன்னோடு வந்துடுவேன்?"

"அப்போ சரி, வள்ளி! நீ உங்கப்பாரு இஷ்டப்படி அந்தப் பட்டணத்து மாப்பிள்ளையைக் கட்டிக்கிட்டுச் சுகமா இரு; நான் வாரேன்!"

"இல்லை.........நான் உன் பேச்சைக் கேட்கிறேன்.........."

இந்தச் சமயத்தில் "வேலா! வள்ளி!" என்று யாரோ தங்களை அழைப்பதைக் கேட்டதும் இருவரும் பயந்து நடுங்கித் திரும்பிப் பார்த்தனர். வள்ளியின் தகப்பன் அவர்களுக்கு எதிரே நின்று கொண்டிருந்தான்.

"வேலா! நீங்க ரெண்டு பேரும் இவ்வளவு நேரமா பேசிக்கிட்டு இருந்ததை நான் ஒட்டுக் கேட்டுக்கிட்டு இருந்தேன். நீங்க ஒருத்தர்மேல் ஒருத்தர் இவ்வளவு ஆசை வச்சிக்கிட்டிருக்கீங்கன்னு எனக்குத் தெரியாது; இப்போதான் எல்லாத்தையும் புரிஞ்சுக்கிட்டேன்; நீங்க தனித் தனியாயிருந்துக்கிட்டு எங்கேயாச்சும் சந்திச்சாத்தானே இந்த ஊர் என்னென்னமோ சொல்றது? பேசாமே இனிமேலிருந்து நீ வள்ளியோட இங்கேயே தங்கிவிடு; அப்போ ஊர் என்ன சொல்றதுன்னு பார்ப்போம்!" என்று தழுதழுத்த குரலில் சொல்லிக்கொண்டே, வள்ளியின் தகப்பன் இருவருடைய கைகளையும் ஒன்றாகச் சேர்த்து வைத்தான்.

அவ்வளவுதான்; இருவருக்கும் 'என்ன நடக்கிறது?' என்று புரியாமலிருக்கும் போதே, நான்கு கண்களும் தங்களுக்கு மட்டும் புரியும் பாஷையில், "நாளைக்கு இங்கிருந்துதானே 'ஜல்...ஜல்...ஜல்' என்பது ஆரம்பமாகும்?" என்று திருட்டுத்தனமாகக் கேட்டுக் கொண்டன.

கம்பர் தரும் காட்சி

டி.கே.சி.

242. செல்ல வேண்டும், அவ்வளவுதான்!

ராவணனைப் பார்த்து: "தேவர்களும் மூவர்களுமே பயந்து ஓடி விடுவார்கள், வெறும் மனிதர்களைப் பற்றி யோசிக்கவும் வேண்டுமா நீ?" என்பதாகப் பேசிக் கொண்டிருந்த வஜ்ரதந்தனை, 'அப்படியே நில் பேசாதே' என்று விலக்கினான் துன்முகன் என்பவன். அவன் ராவணனை நோக்கி "உன்னுடைய வீரச் செயல்களைப் பார்த்துத்தானே இருக்கிறேன். இப்போது என்ன! ஒன்றுக்கும் ஆகாத கோழைபோல் உட்கார்ந்திருக்கிறாயே" என்று சொல்லி வீராவேசத்துடனே பேசுகிறான்.

'நில்நில்' என்(று) அவன்தனை
விலக்கி ;—' நீயிவண்
என்றூனும் எளிமைபோல்
இருத்தி யோ' என,
மன்முகம் நோக்கினன்,
வணங்கி வன்மையால்த்
துன்முகன் என்பவன்
இனைய சொல்லுவான்.

[அவன்தனை விலக்கி: வஜ்ரதந்தனை விலக்கி; மன்முகம் நோக்கினன்: ராவணனை நோக்கினவனாய்; வன்மையால்: வீராவேசத்தோடு: இனைய சொல்லினான்: இவ்வுரு வனவற்றைச் சொன்னான்]

•••

துன்முகன் சொல்லுகிறான்:


"உன்னுடைய வீரம் எல்லாம் தெரியாதா எங்களுக்கு? எட்டுத் திக்குகளையும் தாங்கிக் கொண்டிருக்கிற யானைகள், உன் பலத்தைப் பார்க்கும் போது வலியற்றன என்று தானே சொல்ல வேண்டும்.

"தேவர்களும் வலியற்றவர்கள் தான். சிவபெருமானுடைய கைலயங்கிரி ஒரு கிடைச்சிதானே" என்பதாக ஆரம்பிக்கிறான்.

திக்கயம் வலியில,
தேவர் மெல்லியர்,
முக்கணான் கயிலையும்
மூரண் இன்(று) ஆயது,—
மக்களும் குரங்குமே
வலிய ஆம்எனின்
அக்கடா! இராவணற்(கு)
அமைந்த(து) ஆற்றலே!

[மக்களும் குரங்குமே வலிய ஆமெனின்: மக்களும் குரங்கும் ஒரு லக்ஷ்யமா உன் வீரத்துக்கு. அப்படி லக்ஷ்யமாய் இருந்து விட்டால், அடடா! உன்னுடைய வீரத்தை என்ன என்று சொல்ல; அக்கடா: அடடா: ஆற்றலே: வீரம், பொல்லாத வீரம் தான்!

குறிப்பு:—பாராட்டும் இகழ்ச்சியும் கலந்து ஒலிக்கிற பாவம் பாட்டின் அழகாய் அமைந்திருக்கிறது. அபூர்வமான பாடல்.]



பிரசங்கி:—சபையோர் மன்னிக்கவேண்டும். அதிக நேரம் பேசிவிட்டேன் போலிருக்கிறது. கடிகாரம் இல்லாததால் நேரம் போனதே தெரியவில்லை.

அதிகப்பிரசங்கி:—கடிகாரம் இல்லாவிட்டால் என்ன? எதிரே காலண்டர் மாட்டியிருக்கிறதே! அதையாவது பார்க்கக் கூடாதா?

எரிச்சலும் ஹாஸ்யமும் கலந்த வாறாக வார்த்தைகள் வருகின்றன துன்முகன் வாயிலிருந்து:

"ஆழ்ந்த யோசனைக்காக மந்திரிமார்களைக் கூட்டி ஆலோசிக்கும் ராவணனே! நான் சொல்லுவதைக் கேள், ஆலோசனை என்ன ஆலோசனை!

'துன்னிய மந்திரம்
கருதும் காலை!
மன்னியல் மனிசரும்
குரங்கும், மற்றவும்
உன்னிய அமைந்த,—
உணவுக்(கு) உட்குமேல்,
தின்னிய அரக்கரில்
தீரர் யாவரே!

[துன்னிய மந்திரம்: ஆழ்ந்த யோசனைக்கான இந்த மந்திரி சபையை; கருதுங் காலை: ஏதோ உபயோகமான யோசனை சொல்லுவார்கள் என்று எண்ணுகிற அரசனே; மன்னியல் மனிசரும் குரங்கும் மற்றவும் உன்னிய அமைந்த: நாம் தின்பதற்காகத் தானே மனிதர், குரங்கு, காடி முதலான பிராணிகள் இந்த உலகத்தில் நிற்கின்றன. உண்மை இப்படி இருக்க — உணவுக்கு உட்குமேல்: தின்பதற்கு அரக்கர் பின் வாங்குவார்கள் என்றால்; தின்னிய அரக்கரில்: வாட்ட சாட்டமாய் இருக்கிற இந்த அரக்கரைப் போல; தீரர் யாவரே: தைரியவான்கள் யார் இருக்கிறார்கள் உலகத்தில்! சுத்தக் கோழைகள் என்பது குறிப்பு.]

தின்னுகிறது என்றால் ஏதோ ஆகாரமாக்கித் தொன்னுதல் என்பது தலைப் பொருள். வேரோடு அழித்துவிடுதல் என்பதுதான் விஷயம்.

• •
•

"ஒருவருக்குச் செய்யக் கூடியது இது என்பதாக ஒரு விஷயம் இருக்கும். உறுதியாக சந்தேகத்துக்கு இடம் இல்லாமல் செய்து முடிக்கும் காரியமும் உண்டு. வெற்றியே லக்ஷ்யமாகவும் இருக்கும். தந்திரமான காரியம் என்றும் உண்டு. இவ்வளவும் இப்போது நமக்கு ஒன்றுதான் இருக்கிறது. முதலில், அந்த மனிதர்கள் இருக்கிறார்களே, அந்த இடத்திற்கு நாம் போக வேண்டும்."

'ஒல்வது நினையினும்
உறுதி ஓர்கினும்
வெல்வது விரும்பினும்
வினைவு வேண்டினும்:—
செல்வதும் அவருழைச்,—
சென்று, தேய்த்(து) அறக்
கொல்வதும் கரும'மென்(று)
உணரக் கூறினான்.

[ஒல்வது: செய்யக் கூடியது இது என்று நினைவில் இருந்தாலும்; செல்வதும் அவருழை: பகைவர் இருக்கும் இடத்திற்குச் செல்வதும்; சென்று தேய்த்து அறக் கொல்வதும்: பின்வாங்காமல் யோசனை பண்ணாமல் அப்படியே போய், மிச்சம் இல்லாமல் பகைவர்களை எல்லாம் கொன்று விடுவதும்.]

"உணரக் கூறினான்" உண்மையிலேயே துன்முகனுடைய காரமான ஹாஸ்யங்கள் ராவணனது இதயத்தில் தாக்கவே செய்கின்றன. பாடலின் அந்தகைய பாவத்தில் அமைந்திருக்கின்றன.



டைரக்டர் (திருடனாக நடிப்பவரை நோக்கி):—அதோ அந்த மாதுவின் கழுத்தில் இருக்கும் முத்து மாலையை எடுத்துக் கொண்டு ஓடியே போய்விட வேண்டும். திரும்பிப் பார்க்கவே கூடாது; தெரிகிறதா?

திருடன் வேடக்காரர்:—பேஷாய்த் தெரிகிறது! ஆனால் அந்த மாது அணிந்திருப்பது நிஜ முத்து மாலைதானே, ஸார்!

காஷ்மீரத்தின் நறுமணம் நிறைந்த காற்று....



....அங்குள்ள அழகான பள்ளத் தாக்குகளை விஜயம் செய்யும் ஜனங்களுக்கு ஆறுதல் அளிக்கிறது. இப்பெரும் பாக்கியத்தை கணவாய்களில் வசிக்கும் ஒரு சிலரே அனுபவிக்கக் கூடும். ஆனால் உங்களில் பெரும்பாலோர் ஓர் 'ஓரியண்ட்' விசிறியை அமைப்பின், கடுமையான கோடைக்காலத்தில்கூட சுகமாக வேலை செய்து இளைப்பாற முடியும். மேலும் "ஓரியண்ட்" விசிறி குறைந்த மின்சார செலவில் நன்றாக உழைப்பதால், அவை மிகவும் மலிவானவை.


ஓரியண்ட்

ஏ.ஸி, டி.ஸி.

விசிறிகள்

- ஸீலிங் விசிறிகளும், டேபிள் விசிறிகளும்
- மின்சார பம்புகளும், கை பம்புகளும்
- மின்சார மோட்டார்கள்.

தி கல்கத்தா எலெக்ட்ரிகல் மான்யுபாக்சரிங் கம்பெனி லிமிடெட்.
4, ஸ்ட்ரிங்கர் தெரு, மதராஸ்.
இதர ஆபீஸ்கள்: கல்கத்தா, பம்பாய், டெல்லி, கான்பூர், பாட்னு



ஆயிரத்தொரு கவிஞர்கள்

ஆசிரியர்: சுதர்சன்   மொழி பெயர்ப்பு: அக்ஷயம்

சந்திர சூரியர்களின் பிரியத்துக்குப் பாத்திரரான மன்னர் ஒருநாள் வாலிபப் பருவத்தினனான தம் மந்திரியை அழைத்து, "நமக்கு ஆஸ்தான கவிஞர் ஒருவர் தேவை. அவர் உண்மைக் கவிஞராக இருக்க வேண்டும்" என்றார்.

மறுநாள் அந்த வாலிப மந்திரி இந்த விஷயத்தை நகரமெங்கும் பறை சாற்றுவித்தான். மூன்றாம் நாள் ஆயிரத்தொரு நபர்கள் மந்திரியின் மாளிகைக்கெதிரே வந்து நின்று கொண்டு, "நாங்கள் அனைவரும் கவிஞர்கள்" என்றனர். மந்திரி இருபத்தொரு நாட்கள் அவர்கள் இயற்றியிருக்கும் கவிதைகளைக் கேட்டான். கவிதைகள் அனைத்திலும் அழகு மிக்க சொற்றொடர்களும் இனிமையான பாவங்களும் நிரம்பியிருந்தன. அவற்றில் தேனின் இனிமையும், யௌவனத்தின் எழிலும், இணையற்ற உவமைகளும், மனதைக் கவரும் நேர்த்தியான அலங்காரங்களும் நிரம்பி யிருந்தன.

ஆனால் அவர்களுள் தலைசிறந்த கவிஞன் யார் என்பதை அந்த நவயுவனான மந்திரியினால் நிர்ணயிக்க முடியவில்லை. அவன் ஒருநாள் யோசித்தான்; இரண்டு நாட்கள் யோசித்தான்; மூன்று நாட்களும் யோசித்தான். நான்காம் நாள் அவன் மலரின் மென்மையோடு கூடிய காகிதத்தில் அந்த ஆயிரத்தொரு கவிஞர்களின் பெயரையும் பொன் எழுத்துக்களால் எழுதி மன்னரிடம் சமர்ப்பித்தான்.

மன்னர் பிரமித்து "என்ன, இவர்கள் எல்லோரும் கவிகளா?" என்று கேட்டார்.

மந்திரி மிகப் பணிவாகத் தலைவணங்கி மிகவும் அடக்கத்துடன், "நான் அவர்கள் இயற்றிய பாக்களை யெல்லாம் கேட்டேன். அப்புறம் தான் இந்த ஜாபிதாவைத் தயார் செய்தேன். ஆனால் நமக்கோ ஒரே ஒரு கவிதான் தேவை. வந்திருப்பவர்களோ ஆயிரத்தொரு பேர் ஆயிற்றே! அவர்களில் ஒருவரை என்னால் தேர்ந்தெடுக்க முடியவில்லை. அதனால் தான்......" என்று சொன்னான்.

மகாராஜா ஒரு மணி நேரம் யோசித்தார். இரண்டு மணி நேரம் யோசித்தார். மூன்று மணியும் யோசித்தார். நான்காவது மணிக்கு அரசர் உத்தரவு பிறப்பித்தார்: "இவர்கள் எல்லோரையும் சிறையில் அடைத்து செக்கு இழுக்கச் சொல்லு. இனிமேல் யாராவது கவிதை இயற்றினால் நகரத்தில் உள்ள மிகப் பலசாலியான ஆளைக்கொண்டு சவுக்கடி கொடுக்கும்படியும் கட்டளையிடு."

அரசர் உத்தரவை அணுவளவும் வழுவாமல் கிரியாம்சையில் கொண்டு வந்தான் மந்திரி. அப்புறம் அங்கே ஒரு கவியும் இல்லை; காவிய சர்ச்சை செய்பவரும் இல்லை. மக்கள் அந்த பாக்கிய ஹீனர்களின் துயரக் கதையைக் கேட்டு, அவர்களுடைய நிலைமையை எண்ணி மனம் வருந்தினர்.

2

ஆறு மாதங்கள் சென்றன. மன்னர் ஆயிரத்தொரு கவிகள் சிறையிடப் பட்டிருந்த இடத்தைக் காணச் சென்றார்.

போனதும் போகாததுமாக எல்லோரையும் சோதனை போடும்படி உத்தரவிட்டார். அந்த ஆயிரத்தொரு கவிகளில் நூற்றொருவர் மட்டும், சிறைச்சாலையின் கடுங் கஷ்டங்களை அனுபவித்துக் கொண்டிருந்த பொழுதிலும் இரவு நேரங்களில் கண் விழித்து, காவலாளிகள் அயர்ந்திருக்கும் சமயமாகப் பார்த்துக் கவிதைகள் புனைந்து வைத்திருந்தனர்! 'தாங்கள் செய்யும் இக் குற்றம் மகாராஜாவுக்குத் தெரிந்து விட்டால், அவருடைய கடுங் கோபத்துக்கு ஆளாக வேண்டியிருக்குமே! நகரத்தின் மகா பராக்கிரமசாலியான பயில்வான் சவுக்கடி கொடுத்து உயிரை வைத்துக் கொன்று போடுவானே!' என்பதையும் கூட அவர்கள் சிந்திக்கவில்லை.

மன்னர் தம் மந்திரியைப் பார்த்து, "பார்த்தாயா? இந்தத் தொள்ளாயிரம் பேரும் உண்மைக் கவிஞர்கள் இல்லை. பெயருக்கு விலங்கினவர்கள் என்பது இப்பொழுது தெரிகிறதா? தலைக்கு ஆறு மாதத்துச் சம்பளம் கொடுத்து இவர்களை வீட்டுக்கு அனுப்பி விடு. மற்ற நூற்றொருவரும் ஒரு வகையில் கவிஞர்கள் தாம். இவர்கள் தங்குவதற்கென்று நமது மயூர மாளிகையைக் கொடு. அது மட்டும் அல்ல; இவர்களுக்கு எவ்வித சிரமமும் ஏற்படாத வகையில் கவனித்துக் கொள்ள வேண்டியதும் உன் பொறுப்பு" என்று உத்தரவிட்டார்.

மந்திரி அவ்வாறே செய்தான். கவிஞர்கள் நல்ல நல்ல ஆடைகள் அணிந்து கொள்ளலாயினர். அறுசுவை உண்டி அருந்தினர். இரவு பகல் எந்நேரமும் இன்பக் கேளிக்கைகளில் மூழ்கித் திளைத்தனர். மக்கள் அவர்கள் நடத்தும் ஆனந்த வாழ்க்கையைக் கேட்டு, தங்கள் துர்ப்பாக்கியத்தை நினைத்துப் பெருமூச்சு எறிந்தனர்.

ஆறு மாதங்களுக்குப் பிறகு மன்னர் தம் மந்திரியை அழைத்துக் கொண்டு நூற்றொரு கவிஞர்கள் தங்கியிருந்த தமது மயூரமாளிகையைப் பார்த்து வருவதற்காகப் புறப்பட்டார். அவர்கள் அனைவரையும் தம்மெதிரே அழைத்து வரச் செய்து, "இந்த ஆறுமாத காலத்து ஆனந்த வாழ்க்கையின் பொழுது, நீங்கள் ஏதாவது இயற்றியிருக்கிறீர்களா? நாம் கேட்க விரும்புகிறோம்" என்றார்.

ஆனந்த வாழ்க்கையின் அடிமைத் தனையில் கட்டுண்டிருந்த அந்த நூற்றொருவரில் ஒரே ஒருவன் மட்டும் மயூர மாளிகையின் இந்திர போகங்களில் பங்கெடுத்துக் கொள்ளாமல், தன் மனதில் உதித்த எழுச்சிகளனைத்தையும் சொற் சித்திரங்களாகத் தீட்டி வைத்திருந்தான். மற்றவர்களனைவரும், மதுவருந்தி மதி மயங்கித் தம்மைத் தாமே மறந்திருந்தனர். அவன் ஒருவன் மட்டுமே தனிமையில் அமர்ந்து, தன் கவிதைகளைத் தானே படித்துத் தானே இன்புற்று வந்தான். கானகத்தில் மயில்கள் தாமே சிறகை விரித்தாடி, தாமே கண்டு களிப்புறுவதில்லையா - அது போல!

சந்திர சூரியர்களின் பிரியத்துக்குப் பாத்திரரான மன்னர் தம் வாலிப மந்திரியைப் பார்த்து, "இந்த நூறு பேரும் கூடக் கவியில்லை. இன்பத்துக்கு ஏங்கித் தவித்தவர்கள். இவர்கள் சிறைச்சாலைக்குள் அடைபட்டுக் கிடந்த பொழுது, இவருடைய கண்கள் துயர நிலைமையைக் கண்ணுற்றுக் கண்ணீர் உகுத்தன. ஏனெனில் அச்சமயம் இவர்களுடைய வாழ்க்கை இன்பச் சோலையாகத் திகழவில்லை. ஆகவே இவர்களுக்குத் தம் வாழ்க்கை மீது எவ்விதப் பற்றுதலும் இல்லாமலிருந்தது. அம்மாதிரிச் சந்தர்ப்பங்களில் இவர்கள் கவிதைகள் புனைந்தனர். அந்தகாரம் சூழ்ந்த தங்கள் பாக்கியத்தை நினைந்து புலம்பியிருக்கின்றனரே தவிர இவர்கள் உண்மைக் கவிதைகள் இயற்றவில்லை. ஆனால் அந்தக் காலம் மாறி—இருள் சூழ்ந்த நாட்களும் மறைந்து விடவே, இவர்கள் காவியத்தையும் கற்பனையையும் கலையையும் அடியோடு மறந்து விட்டனர். இவர்கள் துன்பம் வந்த காலத்தில் தேம்பித் தேம்பி அழத் தெரிந்தவர்கள். இன்பம் வந்த காலத்து இன்னிசை பாடத் தெரிந்த கலைஞர்கள் அல்ல. ஆகவே இவர்களைக் 'கல்தா' கொடுத்து மாளிகையிலிருந்து வெளியேற்று" என்று உத்தரவிட்டார்.

3

அதற்குப் பிறகு அரசர் நேர்மையும் எதையும் பொருட்படுத்தாத சுபாவமும் வாய்ந்த அந்த மனிதனைச் சுட்டிக் காட்டி, "இவன் உண்மைக் கவிஞன். இவனுக்குச் சுகம் துக்கம் இரண்டும்



ஒன்றுதான். இவன் துயரம் தோய்ந்த இரவுகளிலும் கவிதை இயற்றுவான். இன்பம் தரும் எழில்மிகும் காலையிலும் கவிதைகள் புனைவான். இவன் மரணத்தின் கரிய இருள் சூழ்ந்த மார்க்கத்திலும் கூடக் கவிதை புனையும் சக்தி வாய்ந்தவன். வாழ்க்கையின் இனிய ஏற்றத் தாழ்வுகளிலும் கவிதைகள் இயற்றும் சாமர்த்தியம் இவனுக்கு உண்டு. இதுதான் இவனுடைய சுபாவம். கவிதைதான் இவனுடைய வாழ்க்கை; பிறவிச் செல்வம் எல்லாம். இவனால் கவிதையை விட்டுத் தனித்திருக்க முடியாது. இவன்தான் உண்மைக் கவிஞன். இவன் அந்த ஆயிரத்தொரு கற்களுள் வைடூரியத்தைப் போன்றவன். இவனை நாம் இன்று முதல் நமது ஆஸ்தான கவியாக நியமித்திருக்கிறோம். இவன் கேட்கும் ஊதியம் கொடுக்கத் தயார். தினந்தோறும் நமது தர்பாருக்கு வந்து ஒரு கவிதை சொல்லிப் போகவேண்டியது 'மட்டும் தான்' இவனுடைய வேலை'' என்றார்.

கவிஞன் தர்பாருக்குச் சென்று அரசருக்கு எதிரே ஒரு நாள் கவிதை படித்தான். இரண்டு நாள் படித்தான். மூன்று நாள் படித்தான். நான்காம் நாள், ''என்னால் இம்மாதிரியெல்லாம் கவிதை இயற்ற முடியாது. உணர்ச்சி எழும் பொழுதுதான் என்னால் கவிதை இயற்ற முடியும். ஒருவருடைய இஷ்டத்தைப் பூர்த்தி செய்யும் அடிமைக் கவிதை எழுதும் வன்மை எனக்கு இல்லை'' என்று ஒரு கடிதம் எழுதி அனுப்பினான்.

அதைப் பார்த்த வாலிப மந்திரி ''இந்த மனிதனின் துர்ப்பாக்கியத்தை என்னவென்று சொல்லுவது?'' என்றான்.

ஆனால் அரசர், ''அப்படிச் சொல்லாதே. இவன் துர்ப்பாக்கியம் பிடித்தவன் அல்ல. இவன் தான் உண்மையான கவி. இன்று உன்னுடைய தந்தை — எனது முதல் மந்திரி உயிருடன் இருந்தால், இலக்கியக் கோயிலின் இந்தப் பூஜாரியின் கால்களில் தெண்டனிட்டுப் பணிவார். இவன் சுதந்திர புருஷன். இவன் சுதந்திர கீதம் இயற்றுபவன். அடிமை வாழ்வு வாழ்பவனுக்கு அடிமைத் தளைகள் தான் கவிதையாக எழுத வரும். இவன் தர்பாருக்கு வந்தாலும் சரி, வரா விட்டாலும் சரி, இவனுடைய சம்பளத்தை இவனுடைய வீட்டுக்கே கொடுத்தனுப்பி விடு. இம்மாதிரி உயர்ந்த கலைஞன் பசிப் பிணியினால் வாட நேருமானால் அது நமது அரசாங்கத்துக்கே அவமானம்!'' என்றார்.



வட்ட மேஜை

★ வேலை செய்வோம்!

இந்த வாரத்தில் வெளியான 'வேலை செய்வோம் வாருங்கள்'' என்ற அரும் பெரும் தலையங்கம் தொழிலாளர்களாகிய தொட்டவர்களுக்குத் துல்லியமானதொரு வழிகாட்டி. யாவரும் அமைதியுடன் ஆராய்ந்து பார்த்துத் தென்னாட்டு தொழிலாளர்கள் வேலை நிறுத்தங்களைத் தவிர்ப்பார்களாக. நிற்க.

இந்தக் கிளர்ச்சிகளெல்லாம் அடிப்படைக் காரணம் என்ன? தலைவர்களின் தூண்டுதல் ஒரு காரணமான போதிலும் தங்களைச் சுற்றி நடப்பதைத் தாங்களே அறிந்து கொள்ளும் சக்தியை அவர்கள் பெற்றிருப்பது தான் முக்கிய காரணமாகும். சமீபத்தில் மந்திரி ஸ்ரீ கே. சந்தானம் சென்னைக்கு விஜயம் செய்த போது ராயப்பேட்டையில் அவருக்களித்த தேநீர் விருந்தில் பத்திரிகையை வரவேற்றுப் பேசிய ஸ்ரீ ஆர். ஆர். தனையம் கூறினார்:—

''அதிகப்படியான சம்பளம் பெற்று வரும் உத்தியோகஸ்தர்களின் எண்ணிக்கையை உடனடியாகக் குறைப்பதின் மூலம் தொழிலாளர்களின் கிளர்ச்சி மனப்பான்மைக்கு ஓர் திருப்பம் கொடுக்க முடியும்.''

மத்திய சர்க்காரில், முக்கியமாக சப்ளை இலாகாவிலும், வெளிநாட்டு இலாகாவிலும் காணப்படும் நிர்வாக ஊழல்கள் கட்டுக்கடங்கா. வேலைக்காக உத்தியோகஸ்தர்களா அல்லது உத்தியோகஸ்தர்களுக்காக வேலையா? என்ற ரீதியில் அரசாங்கம் நடைபெற்று வருகிறது. உயர்ந்த பதவிப் பெருக்கத்தைக் குறைப்பதற்கு எந்த விதமான முயற்சியும் எடுத்துக் கொள்ளவில்லை. எண்ணிக்கையும் வளர்ந்துகொண்டே வருகிறது. சம்பளமும் உயர்ந்துகொண்டே வருகிறது. இவைபோன்ற பல உண்மைகளை ஊழல்களைச் சுட்டிக் காட்டி ''நேரு சர்க்கார் முதலாளி சர்க்கார்'' என்று கம்யூனிஸ்டுகள் கோஷிப்பதைக் கேட்டுப் பட்டினியால் வாடும் தொழிலாளி தன்னுடைய நலன் எனக் கருதிக் கிளர்ச்சியில் ஈடுபடுகின்றான்.

''இஸ்லாத்திற்கு ஆபத்து'' என்ற வஞ்சனை கொள்கைதான் ஜின்னா பாக்கிஸ்தானை உருவாக்கியதே போல் மேற்சொன்ன கொள்கைதான் கம்யூனிஸ்டுகள் இந்தியாவைத் தங்கள் ஆதிக்கத்தில் கொண்டுவர முயலுகின்றனர். இந்த வளர விருக்கும் அபாயம் தடுப்பதே சர்க்காரின் முதல் வேலையாயிருக்க வேண்டும். ஆயிர மாயிரமாகப் பொதுச் சொத்தை பாடுபடாத மனிதனுக்குத் தூக்கிக் கொடுப்பது குறையவேண்டும். முன்பு ராஜாஜி சென்னைப் பிரதமராக இருந்தபோது உயர்தர உத்தியோகஸ்தர்களின் சம்பளங்களைக் குறைத்தார். இன்னும் முன்மாதிரியே தம் சம்பளத்தைக் குறைத்துக்கொண்டிருக்கிறார். இந்தப்பரந்த மனப்பான்மை பெரிய பதவியிலுள்ளவர்களுக்கும் ஏற்பட வேண்டும். இந்தியாவின் க்ஷேமத்துக்காகப் பாடுபடும் தலைவர்களைக் குறை கூறுவதை விட்டு இந்தியாவை உருவாக்கும் பணியில் நமக்கும் பங்குண்டு என்பதை ஒவ்வொருவரும் உணரவேண்டும். இன்றைய நிலைமை மாறவில்லை யென்றால் தெற்கு சைனாவில் நடந்ததும், இன்று பர்மாவில் நடப்பதும் நாளை இந்தியாவில் நடந்தே தீரும். இது நேராதவண்ணம் மகாத்மாவின் ஆத்ம சக்தி நம்மைக் காக்கட்டும்!!

மயிலாப்பூர்
7—2—49 ஜானகி ஸ்ரீநிவாஸன்

○●○

★ கோபம் வருகிறது!

நான் ஒரு கிரிக்கெட் அபிமானி. ஒரு 'கல்கி' அபிமானியும் கூட. இவ்வளவு நாள் கல்கி அபிமானியாக இருந்தேன். இவ்வார (6-2-49) கல்கி இதழுக்காக இரவில் கண் விழித்துக்கொண்டு குளிரையும் பொருட்படுத்தாமல் ஸ்டேஷனுக்குச் சென்று வாங்கி வந்த எனக்கு அதிக ஏமாற்றம்தான் கிடைத்தது. காரணம் தாங்கள் கிரிக்கெட்டைப் பற்றி இகழ்ந்து எழுதியிருப்பதைப் பிரசுரித்திருப்பதுதான். ஆஸ்திரேலியர்கள் இந்தியாவிற்கு வந்து, பம்பாயில் இந்த கிரிக்கெட் விளையாட்டை விளையாடியபோது தங்கள் பத்திரிகையில் மேல் அட்டையை 'போட்டோ''க்கள் கொண்டு, அதைத் தவிர உள்ளே பத்து பக்கங்களும் செலவழித்திருந்தீர்கள். என்னுடைய கிரிக்கெட் ஆல்பத்தில் அந்தப் படங்கள் இடம் பெற்றிருக்கின்றன. அந்த கிரிக்கெட்டை இகழ்ந்து இப்பொழுது யாரோ ரசிகன் பேசிக் கொண்டு போனதாகக் ''கங்காதர மாண்டவியா?'' என்பதற்கு இவ் விளையாட்டை ஒப்பிட்டுக் ''காகோஷம்'' எழுதியதைத் தாங்கள் பிரசுரித்திருப்பதை நினைத்து வருந்துகிறேன். ஒருகால் தாங்கள் இரண்டு வருஷம் முன்பு வாலிபராக இருந்தால் கிரிக்கெட்டைப் புரிந்திருக்கலாம். இப்பொழுது இரண்டு வயது கூட ஆனதால் வயோதிகக் கிரிக்கெட்டை இகழ்கிறீர்களா? இந்த கிரிக்கெட் பந்தயத்தைப் பார்ப்பதற்காக ராஜாஜியும், நேருவும் டெல்லியில் விளையாட்டு மைதானத்திற்குச் செல்லவில்லையா? எனக்குக் கோபம் வருகிறது நான் போய்வருகிறேன்.

கும்பகோணம்
6—2—49 கே. எஸ். ரங்காச்சாரி

○●○

நாட்டு விளையாட்டுக்கள்

சுதந்திரம் அடைந்தும் ஆங்கிலேயர் மோகம் விட்டபாடில்லை. கிரிக்கெட் விளையாட்டு நம்மை இன்னும் ஆட்டி வைக்கிறது. சங்கீதம் முழம் விலை யென்ன என்று கேட்பவர்கள் சங்கீத சபைகளின் போஷகர்கள் (Patrons) ஆகிப் பாட்டை ரசிப்பதுபோல், கிரிக்கெட்டு மாட்சு பார்க்கவும் ஜனங்கள் கூடுகிறார்கள். நல்ல விசாலமான ஸ்டேடியம் இல்லாததால் வெயிலில் கஷ்டப்படுகிறார்கள். அடுத்த வருஷத்துக்குள் சென்னையிலும் பெரிய ஸ்டேடியம் கட்டி முடிக்கவேண்டுமென்று சொல்லுகிறார்கள். பல லக்ஷம் ரூபாய் அதிகம் செலவழிப்பதைவிட ஏழைகளுக்கு வீட்டு வசதி செய்தால் புண்ணியமுண்டு. இந்த விளையாட்டை ரஷ்யா முதலிய

★ வட்ட மேஜைப் பரிசுத் தொகை ரூ. 25-ஐ 'வேலை செய்வோம்! என்ற கடிதம் எழுதிய மயிலாப்பூர் ஜானகி ஸ்ரீநிவாஸனுக்கும், 'கோபம் வருகிறது! என்ற கடிதம் எழுதிய கும்பகோணம் கே. எஸ். ரங்காச்சாரிக்கும் ரூ. 12-8-0 வீதம் பிரித்து வழங்கப்பட்டது.

மற்ற ஐரோப்பிய தேசங்களில் அதிகம் விளையாடுவதாகத் தெரியவில்லை. வீண் கால விரயமும் பண நஷ்டமும் கொடுக்கும் விளையாட்டைக் கைவிட்டு நம் நாட்டு விளையாட்டுக்களை கவனிக்க முற்படுவோமாக.

காவேரிக் கரையில் மணலில் விளையாடும் "பலீன் சடுகுடு" முதலிய விளையாட்டுக்களை எப்போது ஆடப்போகிறோம்? நம் வாசகர்கள் அந்த ஆட்டங்களைக் காணமுடியாமலே போகலாம். சிலம்பு வீசுதல், வாள் வீச்சு முதலிய பழக்கங்களால் சரீர வலிமை ஏற்படும். அவை திருடர், கொள்ளைக்காரர் முதலியவர்களை விரட்டவும் உபயோகப் படும். ஆகையால் நம் நாட்டு விளையாட்டுக்களில் சிரத்தை வைப்போம்.

பலீன் சடுகுடு, கிளித்தட்டு, ஜல்லிக்கட்டு, சிலம்பு வீச்சு முதலிய தேசிய கிராம விளையாட்டுக்களை முன்னுக்குக் கொண்டுவர முயற்சிப்போம்.

திருவனந்தபுரம்
3—2—49 வி. சுப்ரமணி

○●○

'கிரிக்கெட்' கட்டுரை

7-2-49 'கல்கி' இதழில் பிரசுரித்திருந்த "கங்காதரா! மாண்டாயோ?" என்ற கட்டுரையைப் படித்துவிட்டு அளவற்ற ஆனந்தம் அடைந்தேன். அதற்காகக் 'கல்கி' பத்திரிகைக்கும், அந்தக் கட்டுரையை எழுதிய 'காகோஷம்' அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சுதந்திர இந்தியாவின் சுதந்திர உணர்ச்சியும், வீர உணர்ச்சியும் குன்றுவதற்குக் காரணமாக இருக்கும் கிரிக்கட் விளையாட்டைப் பற்றி அரிய கட்டுரையை அறைந்து வெளியிடும் பத்திரிகை நீடூழி வாழ்க.

சென்னை
8—2—49 வை. நடராஜன்



புருஷன்:—நேற்று ராத்திரி யெல்லாம் உன் சிநேகிதியிடம் சிரித்துச் சிரித்துப் பேசிக் கொண்டிருந்தாயே! அப்படி விழுந்து விழுந்து சிரிக்க என்ன விஷயம் இருந்தது?

மனைவி:—அன்று நீங்கள் சமைக்கிறேன் என்று ஆரம்பித்தீர்களே, அதைப்பற்றித் தான் சொல்லிக் கொண்டிருந்தேன்.

வேலைதேட உதவும் ஸ்தாபனம்

ஜனவரி 23ம் 'கல்கி' இதழின் 'வட்ட மேஜை'ப் பகுதியில் ஸ்ரீமதி சீதாலட்சுமி விசுவநாதன் எழுதியிருக்கும் கடிதத்தை ஒட்டிய உண்மைகளை விளக்கக் கடமைப் பட்டுள்ளேன்.

வேலை தேடித் தருவதற்கென்று கையாளும் முறையைப் பற்றி ஓர் அபிப்பிராய பேதமிருப்பதாகத் தோன்றுகிறது. வேலைக்காகப் பதிவுசெய்து கொள்பவர்களை, வேலைக்கென்று சிபார்சு செய்யும்போது, ஒரு காலி ஸ்தானத்திற்கு நாலுபேரை அனுப்பாமல், அதிகமான நபர்களை இந்த ஸ்தாபனம் அனுப்பி வருகிறது என்பது அவள் அபிப்பிராயம்.

மேலும் சென்னை வருமானவரி ஆபீஸ் ஆட்கள் தேர்ந்தெடுத்த விஷயத்தின் உண்மை இதுவே. எம்ப்ளாய்மெண்டு எக்ஸ்சேஞ்சு மேற்கூறிய ஆபீஸிலுள்ள காலி ஸ்தானங்களைப் பற்றிய விவரங்களை தங்கள் பெயரைப் பதிவு செய்திருந்தோர்க்கு தெரிவித்ததே யொழிய, அவர்களைச் சிபார்சு செய்து அனுப்பவில்லை. பத்திரிகைகளில் விளம்பரங்களை வெளியிடுவதுபோல் தகவல்களைத் தகுதியுள்ளோர்க்கு இந்த ஸ்தாபனம் அனுப்பியது. இது தொண்டு செய்வதில் ஒரு முறையாகும். இதன் தன்மையைப் பயன்படுத்திக் கொள்வது அவரவர் விருப்பத்தைப் பொறுத்தது.

மதுரை
26—1—49 பி. வி. தாமோதர்

○●○

அமெரிக்காவில் அமரர் திருநாள்!

அண்ணலின் ஆவி இறைவனின் அடி சேர்ந்து இன்றோடு வருடம் ஒன்றாகிறது. கடல்கள் கடந்து பதினாயிரம் மைல்களுக்கப்பால் நவீனமான நாகரிகங்களுக்கு மத்தியில் நாங்கள் வந்திருக்கிறோம். நம் பாரத தேசத்தைப் புதிய வழிகளில் முன்னேற்றமடையச் செய்ய இந்திய அரசாங்கத்தாரால் இத்தேசத்திற்கு அனுப்பப்பட்ட சுமார் நாற்பது இந்தியர்களான நாங்கள் உண்மைக்காகவும், அஹிம்சைக்காகவும் தம் உயிரையே தியாகம் செய்த மகாத்மாவின் ஆவியின் சாந்திக்காக இன்று கூட்டங்கூடி ஈசுவரனைப் பிரார்த்தனை செய்தோம். அஹிம்சா தேவதையின் உருவான மகாத்மாவின் வழிப்படி எல்லா மத சாஸ்திரங்களையும் வாசித்துப் பொருளுடன் பிரார்த்தனை நடத்தினோம். முக்கியமாக "ரகுபதி ராகவ ராஜாராம்—பதித பாவன சீதாராம்" என்ற ராம கோஷத்தை அமரர் காந்தியின் ஆத்மா திருப்தியடையப் பாடினோம். எங்கள் பிரார்த்தனையின்போது இங்குள்ள அமெரிக்கர்கள் இருவரும், பாகிஸ்தான் நண்பர்கள் 4, 5 பேர்களும் கலந்து கொண்டார்கள். அண்ணலின் ஆன்ம சாந்திக்கு உகந்தவாறு யாதொரு படாடோபமும் இல்லாமல் அமைதியாகப் பிரார்த்தனையை நடத்தினோம்.

பெரியோர்களின் பெருமையை அவர் காலங்களுக்குப் பிறகு உணருகிறோம். மகாத்மா இவ் வுலகின் மீது தம் புனிதமான பாதங்களை வைத்து நடந்த பொழுது அவரது கொள்கைகளை உணராமல், உணரவும் முயற்சிக்காமல் அவரது தெய்வீகத்தை மறந்தோம். இன்றோ அவரை அமரரிலும் சிறந்தவராகக் கருதுகிறோம். அநேக ஆயிரம் மைல்

களுக்கு அப்பாலிருக்கும் அமெரிக்கர்கள் அந்நகர் பாரதத்தின் தவப் புதல்வர் மகாத்மாவின் பெருமையை உணர்ந்திருக்கிறார்கள். இயேசு கிறிஸ்துவிற்குப் பின், சுமார் 2000 வருஷங்களுக்குப் பிறகு, அஹிம்சையை நிலை நாட்ட, மானிடவர்க்கத்தின் ஹிம்சா குணங்களின் பாவ நிவர்த்திக்காகத் தம்மையே தியாகம் செய்த புண்ய புருஷராகக் கருதுகிறார்கள். வாழ்க மகாத்மா!

கொலராடோ
அமெரிக்கா — ஜி. எஸ். மணி
30—1—49

○●○

பால் பஞ்சம் தீருமா?

நமது மாகாணத்தில் பால் பஞ்சம் அதிகமாக இருக்கிறது. இதற்குக் காரணம், கிராமங்களிலும் நகரங்களிலும் ஏராளமான காப்பி ஹோட்டல்கள் இருப்பதுதான். மது விலக்கு வந்ததனால் நூற்றுக் கணக்கானவர் காப்பி ஹோட்டல்களுக்குச் சென்று காப்பியும் டீயும் குடிக்கும் கெட்ட பழக்கத்தைக் கைக்கொண்டனர். ஆகவே, ஹோட்டல் முதலாளிகள் எவ்வளவு பால் கிடைத்தாலும் வாங்கிக் கொள்கின்றனர். ஹோட்டல் முதலாளிகள் தாங்கள் வாங்கும் பாலுக்கு மேலும் காசு கொடுத்துவிடுவதால் பால்காரர்களும், தாங்கள் கொண்டுவரும் பால் அத்தனையும் ஹோட்டல்களுக்கே கொடுத்து விடுகின்றனர்.

ஆகவே, நடுத்தர வகுப்பினருக்கும் பால் கிடைப்பது மிகவும் சிரமமாக இருக்கிறது. விலையும் ரொம்பவும் ஏறி விருக்கிறது. குழந்தைகளின் உபயோகத்துக்கும் பால் கிடைப்பது கஷ்டமாக இருப்பதால் லாக்டோஜன், ஹார்லிக்ஸ் போன்ற மேல்நாட்டு டின் பால்களை உபயோகிக்க வேண்டியிருக்கிறது.

இந்தப் பால் பஞ்சத்தை நிவர்த்திப்பதற்கு அரசாங்கம், ஹோட்டல்களில் தின்பண்டம் மட்டும் செய்து விற்கலாம்; ஆனால் காப்பியோ டீயோ விற்கக்கூடாது என்று ஒரு சட்டம் இயற்றினால் போதும். பால் எங்கும் கிடைக்க ஆரம்பிக்கும்.

தஞ்சாவூர்
25—1—49 — கே. கோவிந்தசாமி

○●○

ரயிலில் ரேடியோ

ரயில்வே ஸ்டேஷன்களில் வண்டிகளுக்காக ஒரு ஊரிலிருந்து மற்றொரு ஊருக்குப்போக வண்டி மாறிப் பிரயாணம் செய்யவேண்டிய காலங்களிலும், வண்டிகள் தவறி விட்டுத் திரும்பிப் போகாமல் மறு வண்டியை எதிர்பார்த்திருக்க நேரும்போதும் பிளாட்பாரங்களில் பிரயாணிகள் காத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் நேரம் போகாமல் சோம்பேறித் தனமாகவும், வீண் வார்த்தைகளைப் பேசியும் சலிப்புடன் உட்கார்ந்திருக்கின்றனர். உற்சாகம் இல்லாமல் காலத்தைக் கழிக்கிறார்கள்.

இந்த நேரங்களில் ஒவ்வொரு ஸ்டேஷனிலும் அதாவது பிளாட்பாரங்களிலும் பிரயாணிகள் தங்கும் இடங்களிலும் ரேடியோ வைத்து ஒலி பரப்பினால் மக்கள் பொழுது போக்க ஏதுவாய் இருப்பதோடு பல அரிய விஷயங்களை அதன் மூலம் கேட்டு அறிவு பெறலாம். நெடுந் தூரப் பிரயாணங்களுக்கும் இம்மாதிரியே வண்டிகளில் ஒலி பரப்பினால் பிரயாணம் சலிப்புத் தட்டாமல் இருக்கும். ரயில்வே அதிகாரிகள் கவனித்து ஆவன செய்வார்கள் என நம்புகிறேன்.

ஈரோடு
24—1—49 — எ. மாரிமுத்து



டைரக்டர்:—அடுத்த காட்சியில் நீங்கள் தோன்றும்போது பார்க்கிற ஜனங்கள் அப்படியே அழ வேண்டும்.

நடிகை:—அப்படியானால் எனக்கு ஒரு பாட்டுக் கொடுத்து விடுங்கள், ஸார்!

○●○

குறுகிய மனப்பான்மை ஒழியுமா?

சில நாட்களுக்கு முன் சென்னையில் நடந்த மலையாள மக்களின் கூட்டத்தில், (Malaya.i Conference) திருவிதாங்கூர் பிரதம மந்திரி, ஐக்கிய கேரளம் அமைக்கப்பட வேண்டுமென்றும், அப்பொழுது தென் திருவிதாங்கூரில் தமிழ் மக்கள் வாழும் தேவிகுளம், அகஸ்தீஸ்வரம், கல்குளம், விளவங்கோடு ஆகிய தாலுகாக்களையும் தமிழ்நாட்டோடு இணைக்க வேண்டிய அவசியம் இல்லையென்றும் கூறியிருக்கின்றார். மேலும் தென் திருவிதாங்கூரில் தமிழ் மக்களும் மலையாள மக்களும் சகோதரர்களைப் போலவே ஒற்றுமையாக வாழ்கின்றார்கள் என்றும் கூறியிருக்கிறார். இவ்விதப் பிரசாரத்தைக் கிளப்பிக் கொண்டே விருந்தால், பிறர் தென்திருவிதாங்கூரில் நடக்கும் சகலவித கலகங்களையும், மலையாளிகளால் தமிழர்களுக்கு உண்டாகும் துன்பங்களையும் அறிய மாட்டார்கள் என்கிற எண்ணம் போலும்.

மலையாளிகளெல்லாம் சேர்ந்து ஐக்கிய கேரளம் அமைக்கும்போது தென் திருவிதாங்கூரில் உள்ள தமிழர்களுக்கும், தாய்த் தமிழகத்துடன் சேர வேண்டுமென்ற ஆசை இராதா? தமிழர்களும் மலையாளிகளைப் போல மனிதர்களாக வாழ்கின்றவர்கள் தானே? மலையாளிகளின் குறுகிய மனப்பான்மை என்றுதான் ஒழியுமோ?

மாறுங்கோணம்
23—1—49 — ஏ. ஞானசிகாமணி

கண் திறந்தது!

சசி

‘மனிதன் பணத்தைச் சம்பாதிக்கிறான் என்பது ஏழையின் பிழைப்புக்குப் பொருந்தும், பணக்காரனுக்குப் பணந்தான் சம்பாதித்துப் போடுகிறது.

இரண்டாவது வர்க்கத்தைச் சேர்ந்தவர் ஜம்புலிங்க முதலியார். அவர் பட்டணத்தில் முக்கிய கம்பெனிகளில் பங்குகள் வாங்கிப் போட்டிருந்ததால் அந்தப் பங்குகள், அவருக்குப் பணம் சம்பாதித்துப் போட்டுக் கொண்டே வந்தன. புதுப் பணக்கார மோகத்தை யொட்டி, சொந்த ஊரில் ஒன்றுக்கு ஒன்பது பங்கு கிரயமாக நிலபுலன்கள் வாங்கினார். இடிந்த குட்டிச் சுவர்களைச் செங்கல்லும் சுண்ணாம்பும் போட்டு மளமள வென்று உயர்த்தி, பாழ் மனைகளாகக் கிடந்தவைகளை அரண்மனைகளாகச் செய்தார்.

சொந்த விவசாயத்திற்காக மாடு கன்றுகள், மேற்பார்வைக்கு ஆள் படை-இப்படிச் சொந்த விவசாயம் சில சிப்பந்திகளை அவருக்கு அடிமையாக்கி வைத்தது.

நகரத்தின் சுக சௌகர்யங்களுக்குள்ளிருந்து பழகி விட்ட காரணத்தால், குடும்ப சௌகரியத்திற்குக் கிராமம் சரிப்பட்டு வராமல் போனாலும் ஓய்வாகக் கிராமத்தையும் வயல் வரப்புகளையும் சுற்றிப் பார்ப்பது அவருக்கு மிகவும் பிடித்தமாய் இருந்தது. ‘லங்கா தகனம் மில்’லைப் பங்குதார் என்ற முறையில் பார்வையிடுவதைக் காட்டிலும் பச்சைப் பசேல் என்ற கம்பளம் விரித்ததுபோல் தோன்றும் வயல் வெளியும் கும்மென்று பூத்து மணக்கும் சோளக் கதிர்களும், அவருக்கு ரொம்பவும் இனிமை தந்தன.

வாரத்திற்கு ஒருமுறை கிராமத்திற்குக் குடும்பத்தோடு வரத் தயங்கமாட்டார். கிராமத்திற்கு அவரது மோட்டார் ஹாரன் சத்தம் புதிய விழிப்பைத் தந்தது. ‘‘பட்டணத்து ஐயா வராங்க’’ என்று மதிப்பு வயது வந்தவர்களிடம் பய பக்தியாக வெளி வரும்.

ஆனால் அவ்வூர் இள வட்டங்கள், ‘‘இவன் என்ன உயர்வு? உழைத்தவனுக்குத்தான் பூமி, உழைக்காதவன் மோசக்காரன்’’ என்ற சித்தாந்தம் கொண்டவர்கள். அவர்களுடைய பேச்சைக் கேட்டு வயல் வெளியிலும் தோப்புத் துரவிலும் வேலை பார்த்தவர்கள் முணுமுணுக்க ஆரம்பித்தார்கள். நகரத்திலே பரவியிருந்த வியாதி கிராமத்திற்கும் வரும், அதுவும் அவ்வளவு சீக்கிரம் வருமென்று ஜம்புலிங்க முதலியார் எதிர்பார்க்கவில்லை. லங்காதகனம் மில்லில் எத்தனையோ தடவை அவர் கதவடைப்பு வேலை நிறுத்தங்கள் நடந்ததைப் பார்த்திருக்கிறார்: நேரில் போய் அடக்க முயற்சி செய்து பலமுறை தோல்வியுற்றதும், சில வேளை ஜெயமடைந்ததும் உண்டு

வயல் வெளியெல்லாம் பசுமை மாறி, செம்பொன் நிறத்திலே மணி குலுங்கச் சாய்ந்து கிடந்தன. துவண்டு அரி அரியாகக் கிடந்த நெற் கதிர்களைக் கண்ட போது ஜம்புலிங்க முதலியாருக்கு வெகு திருப்தி ஏற்பட்டது.

ஆனால், அங்கே இரண்டொருவர் ‘நேற்று வந்தவனுக்கு என்னடா நிலம், ஆளுக்குப் பாதி வேணும், மகசூல் விகிதாசாரம் அப்படித்தான்’ என்று முணுமுணுக்க ஆரம்பித்தார்கள் இந்தப் பேச்சு அந்தரங்கத்திலிருந்து அம்பலத்துக்கு வருமுன் யாரோ இரவோடு இரவாக நாலைந்து குறுக்கம் கதிரை அறுத்துக்கொண்டு போய்விட்டனர்.

இந்த விஷயம் தமது கணக்கன் மூலம் கேள்விப்பட்டு ஜம்புலிங்க முதலியார் வெகு கோபத்துடன் காரில் ஏறிப் புறப்பட்டார் முளையிலேயே கிள்ளி எறியாவிட்டால், தமக்குத் தம்பிடி காசு அந்த ஊரிலிருந்து வராது என்று கற்பனை செய்துகொண்டு, கைக்காவலாக இரண்டு கிருதா மீசை ஆசாமிகளையும் கூட்டிக் கொண்டு கிராமத்திற்கு வந்து சேர்ந்தார்.

கிராமம் அமைதியாகத்தான் இருந்தது. இரண்டொருவர் பழைய விசுவாசப்படியே வணக்கம் செலுத்தினார்கள். கணக்கன் நடைபெறப் போகும் விருத்தாந்தங்களையும் திருட்டுப் போன நெல்லின் அளவையும் சொன்னான். ஜம்புலிங்க முதலியார் தமது மானமே பறி போய்விட்டதாகத் துடித்தார். இன்று பின்வாங்கினால் இளிச்சவாய்ப் பட்டம் தான் கிடைக்குமென்ற எண்ணம் எழவே அவர் ‘‘நான் நினைத்தால் டவுன் போலீசைக் கூட்டி வந்து காவல் வைத்து இந்த ஊரிலுள்ள அத்தனை ஆண்பிள்ளைகளையும் லாக்-அப்பில் வைக்க முடியும். என்னிடம்

வால் ஆட்ட வேண்டாம்; காணும் இரு பதினாயிரம் தொழிலாளிகளிடம் பழகியவன்…'' என்று உறுமினார் ஐம்புலிங்க முதலியார்.

இதற்குள் ஊரிலே பலபேர் பல விதமாகப் பேசினார்கள் "இப்போது இவன் கண் முன்னால் நாங்கள் அறுத்து அடிக்கிறோம் இவன் என்ன செய்ய முடியும்?'' என்று வல்லடி வழக்காகச் சில வாலிபப் பையன்கள் கிளம்பினார்கள்.

ஐம்புலிங்க முதலியார், திருட்டுப்போன வயலிலுள்ள நெல்லின் மதிப்பையும் அளவையும் மேற் பார்வை யிட்டுக் கொண்டு வந்தபோது பத்து வயல் தள்ளி இரண்டொருவர் குனிந்து அறுக்க ஆரம்பித்தார்கள். அவர்கள் பரம்பரையாக வயலிலே இறங்கியதே கிடையாது. அவர்கள் எரிகிற வீட்டில் பிடுங்குவதே தமது குலத் தொழிலாகக் கொண்ட கூட்டத்தின் நபர்கள். பேச்சு வளர்ந்தது. 'யாருக்கு நிலம்?' என்றார்கள் சிலர். "யார் அப்பன் வீட்டு முதல்?' என்றார்கள் வேறு சிலர். ரகளை முற்றிவிட்டது.

முதலியாருடன் மெய் காவலாளியாக வந்தவன் முனைப்பாகப் பேசினான். யாரோ கத்தியை எடுத்து முகத்திற்கு நேராக எறிந்தார்கள். சொல்லி வைத்தாற்போல பொல பொலவென நாலா பக்கத்திலிருந்து கலகத்திற்கும் வேடிக்கை பார்ப்பதற்கும் ஜனங்கள் வந்துவிட்டனர்.

கண் இமைக்குமுன் விளைந்த வயல்களிலே பிணையல் அடிப்பது போல ஜன நடமாட்டம்…கம்பாடி……அடிதடி ஏச்சுப் பேச்சு……!

விளைந்து விம்மிக் கிடந்த மணிகள் காலடியில் மிதிபட்டுச் சகதியில் அழிந்தன. ஐம்புலிங்க முதலியார் எங்கே ஓடுகிறோம் என்று தெரியாமல் கண்ணை மூடிக்கொண்டு அந்த வயல் வரப்புகளிலே பதுங்கிப் பதுங்கி ஓடிக்கொண்டிருந்தார். கால்களில் முட்கள் குத்தி இரத்தம் ஆறாகப் பெருக அவர் பயந்து ஓடிக் கொண்டேயிருந்தார்.

"நெல் வேண்டாம், நிலம் வேண்டாம், ஏறி வந்த மோட்டார் வேண்டாம், உயிர் பிழைத்தால் போதும்……'' என்று ஓடினார் ஐம்புலிங்க முதலியார்.

ஒளி மங்கி சூரியனும் கரிய போர்வையை இழுத்துப் போர்த்தி விட்டு மறைந்துவிட்டான். தன்னாடித் தன்னாடி நடந்தார் ஐம்புலிங்கம். சட்டையிலிருந்த மணிபர்ஸ் எங்கோ விழுந்து விட்டதை உணர்ந்தார். லக்ஷாதிபதி பாங்கியில் பணம் கிடந்தும் அந்த இடத்தில் மடியிலே காலணாக்கூட இல்லாமல் பிக்ஷாதிகாரிபோல் தவித்தார்.

தூரத்தில் ஒரு சிறு குடிசை தெரிந்தது. அங்கே போய் "ஐயா' என்றார்.

அந்த வேளையில் யாருமே அந்த வீட்டிற்கு வருவது கிடையாது. வீட்டுக்குச் சொந்தக்காரக் கிழவன் வெளியே வந்து பார்த்தான். கையிலே இருந்த சிம்னிவிளக்கில் யாரெனத்தெரியவில்லை.

"யார் நீங்க……என்ன வேணும்?'' என்றான் கிழவன்.

"யாராவது என்னைத் தொடர்ந்து வந்தால் காட்டிக் கொடுக்கக் கூடாது. உயிர் பிழைக்க, காலைந்து மைல் இருக்கலாம், ஓடி வந்திருக்கிறேன்'' என்றார் ஐம்புலிங்க முதலியார்.

பின்னர் திண்ணையில் அமர்ந்து நடந்த விருத்தாந்தங்களைச் சொன்னார். அந்தக் கிழவன் கயிற்றுக் கட்டிலில் உட்கார்ந்தபடியே கேட்டுக் கொண்டிருந்தான். வீட்டுக்குள் அவனுடைய மகனுக்கும் மனைவிக்கும் ஏதோ வார்த்தைகள் தடிப்பேறுவதைக் கேட்டார். பசியினால் கண்கள் மங்கவே, "அப்பா எனக்குப் பசியாக இருக்கிறது. சுற்றும் முற்றும் காடுபோல இருக்கிறது. நீதான் இப்போது எனக்குத் தெய்வம்'' என்றார்.

கிழவன் சிரித்துக் கொண்டான். வீட்டுக்குள் போய் "ஏ புள்ளே, ஏதாச்சும் இருக்குதா?'' என்றான். உள்ளே அவன் மனைவியும் மூத்த பையனும் சைகை மூலம் என்னென்னவோ ஜாடை காட்டினார்கள். கிழவனுக்குக் கோபம் வந்தது. தானே ஒரு கும்பாவில் சாதத்தை



அள்ளிப் போட்டு, இரண்டு உப்புக் கல்லையும் தூவினான். நாரத்தங்காய் ஊறுகாயும் எடுத்துக் கொண்டான். திண்ணையில் கவந்தப் பசியுடன் இருந்தவர் முன்னால் கொண்டுவந்து வைத்தான்.

அவர் நினைவு தெரிந்து ஆகாரம் இவ்வளவு சுவையுள்ளது என்பதையே அறியாதவர். அவருக்கு அன்று அது தேவாமிர்தம் போல இருந்தது. களைப்பும், உடல் வலியும் சேர்ந்து அவர் கண்ணைச் செருகவே "பெரியவரே, இந்த நன்றியை மறக்க மாட்டேன். ஒன்றுக்கு நூறாக நான் செய்ய முடியும்" என்றார்

"ஒன்றுக்கு நூறென்ன பதினாயிரங்கூடச் செய்யக் கூடியவங்கதான்!" என்று கிழவன் சொல்லிக் கொண்டே சிரித்ததின் அர்த்தம் ஜம்புலிங்க முதலியாருக்குப் புரியவில்லை. "நான் பொய் சொல்லி ஒரு வாய் சோற்றுக்காகக் கதை விட்டதாக நினைத்தாயா?" என்று கேட்டார்.

"இல்லை உங்கள் வார்த்தையில் இந்தச் சிவனாண்டிக்கு எப்போதும் மதிப்புக் கிடையாது......" என்றான் கிழவன்.

"சிவனாண்டி!" என்ற வார்த்தையைக் கேட்டதும் முதலியாரின் உடல் சிலிர்த்தது. யார்? தமது லங்காதகனம் மில்லில் வேலை பார்த்து தம்மால் ஆறு வருஷம் கடுங்காவலில் வைக்கப்பட்ட சிவனாண்டியா? அப்படியானால் தமது ஆயுள் அன்றோடு சரி என்று முடிவு கட்டிவிட்டார். சிவனாண்டி குற்றமற்றவன். அவன் கலகத்தில் சம்பந்தப் படவில்லையெனத் தெரிந்தும், அவனே தீப்பந்தம் ஏந்தி மில்லுக்கு நெருப்பிட வந்ததாகத் தாம் சாட்சி சொல்லியதும், ஆறு வருஷ தண்டனை என நீதிபதி சொன்னதும் ஒரு கணத்தில் நினைவிற்கு வந்தன. யாராவது ஒருவன் அந்த மாதிரி தண்டனை பெற்றால்தான் மற்றவர்கள் குற்றஞ் செய்யப் பயப்படுவார்கள் என்ற நீதிக்குச் சிவனாண்டியைப் பலியிட்டார். மனச்சாட்சிக்கு எதிரிடையாக அப்படிச் சொன்னார்.

அந்தச் சிவனாண்டி ஜெயிலிலிருந்து வெளி வந்து மூன்று நான்கு மாதம் ஆகியிருக்கலாம். அவருக்குத் தலை சுற்றியது! வீட்டுக்குள்ளிருந்த பெரிய தடி ஒன்றைத் தூக்கிக்கொண்டு சிவனாண்டியின் மகன் ரௌத்ராகாரமாய், "டேய்! வஞ்சனைக்கு இன்று வழிவிட்டார் கடவுள்" என்று கூச்சலிட்டான். சிவனாண்டி எழுந்து கம்பை எட்டிப் பிடுங்கி, "ஏண்டா சின்னப் பயலே, இதுதான் வீரமோ? போடா" என காது அறை கன்னத்தில் வைத்துப் பையனை விரட்டினான்.


ஜம்புலிங்க முதலியார் திடுக்கிட்டார். ஆச்சரியத்தால் மூச்சு நின்றுவிடும்போலிருந்தது. அப்போது "சாமி, இங்கே இருந்தீங்கன்னா இந்தச் சின்னச்சாதிப் பய ஏதாவது செய்திடுவான்; வாங்க, இங்கே யிருந்து ஒரு கல் தூரம் போனால் ரயில்வே ஸ்டேசன் இருக்குது. அதிலே ஏறி உங்க ஊருக்குப் போகலாம்" என்று சொல்லிக் கொண்டே எழுந்தான் சிவனாண்டி.

ரயில்வே ஸ்டேஷன் வந்தது. சிவனாண்டி ஒரு டிக்கட்டும் வாங்கிக் கொடுத்த போதுதான் தாம் காண்பது கனவல்ல என்றும் உயிரோடு இருப்பதாகவும் அவர் உணர்ந்தார். "சாமி, மகராஜனா இருங்க. மனமறிஞ்சு என் குடும்பத்தைக் கெடுத்து என்னை ஜெயிலிலே போட. முனைஞ்சமாதிரி யாரையும் செய்திடாதீங்க......" என்றான். அதற்குள் வண்டியும் வந்தது.

* * *

அவர் நினைவிலே கிராமம், வீடு, வாசல், நிலபுலன், கலாட்டா ஒன்றும் இடம் பெறவில்லை. சிவனாண்டியின் பெருந்தன்மையும், தியாக புத்தியும்தான் மாறி மாறி எழுந்தன. ஊருக்குத் திரும்பியதும் கிராமத்திலே நடைபெற்ற கேஸை நடத்தச் சொல்லிப் போலீஸார் வற்புறுத்தினர். காரணங்கள், சாட்சிகள் காட்டியும் தாம் வழக்குத் தொடரப் போவதில்லை என்று ஜம்புலிங்க முதலியார் சொல்லி விட்டார். அதைக் கேட்டபோது ஊரார் யாருக்குமே நம்ப முடியவில்லை!

தகராறு வேண்டாம்!



பாட்டியம்மாள் :— என் அப்பா! இதுதானே கவர்ன்மெண்ட் பஸ்ஸா? மயிலாப்பூருக்கு எவ்வளவு சத்தம் என்று கூறாய்! சொல்லிவிடு! ஏறின அப்புறம் தகராறு பண்ணாதே!

Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press, 116-119, Sladens Garden, Poonamallee High Road, Kilpauk, Madras

கல்கி



KALKI பிப்ரவரி ௨0,1949 4 அணா

REGD. No. M. 4392